Registered as a News Paper

பக்கம் – 16+ IV

# ஈழநாதம்

Eelanatham வெள்ளிநாதம்

விலை: 12.00

எண்பதுகளின் பின்னர்மீண்டும் சுன்னாகத்தில்

போட்டோ சண்கோ

கலர் லாப்

30 நிமிடத்தில் படம்

எமது கலையகத்தில் கறுப்பு வெள்ளை. கலர்ப் படங்கள் உடனுக்குடனும் அனைத்து வைபவங்களுக்குமான படங்கள் விழா மண்டபத்திலும் வழங்கப்படும்.

84. காங்கேசன்துறை வீதி. சுன்னாகம்.


204. கண்டி வீதி. வவுனியா.

(சி-7348)

நாதம் -13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | புரட்டாதி 04 | 20-09-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 214



புரிந்துணர்வு...
பக்கம் 03



நெடுஞ்சாலை விபத்துக்கள்...
பக்கம் 12



நெருப்பனவுகளுக்காக...
பக்கம் 15

# முதற் கட்ட பேச்சுக்களில் அரசு – புலிகள் திருப்தி

# பேரினவாதிகள் மத்தியில் விரக்தி – அதிருப்தி

தாய்லாந்து சத்தாஹிப் படைத்தளத்தில் நடந்து முடிந்துள்ள புலிகளுக்கும் அரசிற்குமிடையிலான முதல்கட்ட பேச்சுவார்த்தை குறித்து தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் பெரும் மகிழ்ச்சி கொண்டுள்ள அதேவேளை சர்வதேச சமூகம் சமாதானம் தொடர்பாக பெரும் நம்பிக்கை கொண்டுள்ளது. இதேவேளை பேச்சுவார்த்தைக்கு கடும் எதிர்ப்பைக் காட்டிவந்த பௌத்த சிங்கள பேரினவாதிகள் மத்தியில் கடும் அதிருப்தியும் விரக்தியும் இதனால் ஏற்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. கடந்த புதனன்று நிறைவடைந்த சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையேயான முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் இருதரப்பினருக்குமே திருப்தியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துபவையாக அறிவித்திருப்பதானது சர்வதேச சமூகத்தில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன் இனிவரும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளில் மேலும் முன்னேற்றம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை புதிய சிறிலங்கா அரசு பதவியேற்ற காலம்முதல் அது சமாதானத்திற்காக மேற்கொண்ட சகல நடவடிக்கைகளையும் கடுமையாக விமர்சித்தும் எதிர்த்தும் அது தொடர்பாக மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியும் வந்த சனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய பேரினவாதக்கட்சிகளின் கூட்டமைப்பினர் மத்தியில் முதல்கட்ட பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் கடும்ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் சுமுகமாகவும் புரிந்துணர்வுடனும் சில தீர்க்கமான முடிவுகளை எடுக்கக்கூடிய வகையில் நடந்தேறும் என்று இந்த பேரினவாத சக்திகள் கொஞ்சம் கூட நினைத்திருக்கவில்லை.

(16ம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனை சீனத் தூதுவர் நேற்று வன்னியில் சந்தித்தார்

இலங்கைக்கான சீனத்தூதுவர் ஜியாங் கிங்செங் அவரது செயலாளர் சூயான் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்றுக் காலை வன்னியில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசியுள்ளனர்.

நேற்றுக் காலை அரசியல்துறைச் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தற்போதைய சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகவும் வடக்கு - கிழக்கு நிலவரம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

நல்லெண்ண அடிப்படையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிக்கு உதவிபுரிய விருப்பம் தெரிவித்துள்ளனர் என தெரியவருகிறது.

~ வடமராட்சி கிழக்கில் ~

## மிதிவெடியில் சிக்கிய பெண் காலை இழந்தார்

(நமதுநிருபர்)

வடமராட்சி கிழக்கில் இராணுவம் புதைத்து விட்டுச் சென்ற மிதிவெடியில் சிக்கி ஒரு பெண்ணின் இடது கால் முழங்காலுடன் துண்டிக்கப்பட்டுள்ளது.


தாளையடி வத்திராயன் வடக்கில் விறகு வெட்டச் சென்ற தங்கவேல் பரமேஸ்வரி (வயது-45) என்பவரே கடந்த ஞாயிற்றுக்கிழமை மிதிவெடியில் சிக்கி காலை இழந்தவராவார்.

இவர் பின்னர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (யோ)

தியாகதீபம்
லெப்.கேணல் திலீபனின்
வர்ணப்படம்
உள்ளே ...

**கீழ் வானில் இருள் கிழித்து ஒளி பிறக்குது**
**ஈழ மண்ணில் அமைதிக்காய் வழி திறக்குது**





**எமது எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப் போல் தான் நாளைய எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும், வருத்தப்படும்**

தியாக தீபம் லெப்.கேணல் திலீபன்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ். சாலை, கிளிநொச்சி. 20-09-2002

## முதற்கட்ட நம்பிக்கை தரும் எச்சரிக்கைகள்

இந்த வாரத்தில் சர்வதேச சமூகத்தின் கவனம் பெருமளவில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையே தாய்லாந்தில் நடைபெற்ற முதலாம் கட்டப்பேச்சுவார்த்தையின் நகர்வு நோக்கி குவிமையப்படுத்தப் பட்டிருந்தது.

வெகுசனத் தொடர்பூடகவியலாளர்கள், ராஜதந்திரிகள் சமாதான ஆர்வலர்கள் என அனைவரது நோக்கமும் தாய்லாந்து பேச்சுவார்த்தையின் முதற்கட்ட நகர்வுகளின் பெறுபேறுகளை அறிந்து கொள்வதிலேயே லயித்திருந்தது.

எல்லாவற்றிலும் மேலாக சிறிலங்காவின் சமாதானத்திற்கு எதிரான அமைதித் தீர்வு நடவடிக்கைகளை நிராகரிக்கும் பௌத்த சிங்கள பேரினவாத சக்திகள் இந்த முதற்கட்டப் பேச்சுவார்த்தையே 'கோணலாக' மாறாதா என்ற ஆதங்கத்துடனும் வெற்றிகரமாக அமைந்தால் 'இரண்டாம்' கட்டத்தை எவ்வாறு குழப்பலாம் என விழிபிதுங்கி மனமெரியும் நச்செண்ணத்துடனும் தங்களது கவன ஈர்ப்பினையும் நெடுமூச்சுடன் தாய்லாந்திலேயே நிலைகொள்ளச் செய்திருந்தனர்.

எதுவானாலும் ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினையும் அவர்களது தியாக- வீர- அர்ப்பணிப்புடன் கூடிய நியாயமான போராட்டமும் விடுதலையுணர்வு மிக்க அவர்களின் சுதந்திர தாகமும் சர்வதேச சமூகத்தாரை அக்கறையுடன் அவதானிக்கப்பட்டு வந்துள்ளது என்பதுடன் அவர்களது பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியில் நியாயமான அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய வகையில் தீர்வொன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கான அமைதிப் பேச்சுவார்த்தையில் தங்களின் பங்கினை மனமுவந்து ஆற்ற முன்வந்து தீவிரமாகச் செயற்படவும் வைத்துள்ளமையானது தமிழ் மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மைக்கும் அதனை முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கும் கிடைத்த பகிரங்கமான அசைக்க முடியாத உலக அங்கீகாரம் என்பது இப்போது உறுதி செய்யப்பட்டும் விட்டது.

பயங்கரவாதம்- பயங்கரவாதிகள் என விடுதலைப் போராட்டத்தையும் அதற்குத் தலைமை வகித்த விடுதலைப்புலிகளையும் வர்ணித்து அதன் செயற்பாட்டுக்குத் தடை விதித்து சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கால கதிர்காம மந்திரியின் பொய்ப் பிரச்சாரங்களுக்குசெவி சாய்த்துச் செயற்பட்ட நாடுகள் தான் இந்தப் பேச்சுவார்த்தையின் ஆதரவுச் சக்தியாக பின்னின்று உழைக்கின்றன என்ற விடயமே இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சமாகும்.

நியாயமான பிரச்சினைகள் குறித்துத்தான் சர்வதேச சமூகம் கவனத்தில் எடுக்கும் நியாயமான கோரிக்கைகள் குறித்து நியாயமாகப் போராடுபவர்களுடன் தான் அது பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் என ஒரு உலகப் பொது நோக்கு உள்ளதென்றால் அந்த வகையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டமும் நியாயமானதுதான் என தாய்லாந்துப் பேச்சுவார்த் தைகளின் ஆரம்பகட்டம் ஐயமற்ற அங்கீகாரத்தை வழங்கியுள்ளது என்றே கூற வேண்டும்.

இதுவே இப்பேச்சுவார்த்தையின் மூலம் தமிழ் மக்களுக்குக் கிடைத்த முதல் பாரிய வெற்றியும் சிறிலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளுக்கு கிடைத்துள்ள மரண அடியுமாகும்.

பேச்சுவார்த்தைக்கான எமது முதல் 'அடி' அத்திவாரம் அழுத்தமானதாக பதிய வைக்கப்பட்டுள்ளது. இப்பேச்சுவார்த்தையின் முதற்கட்ட அமர்வுகள் பேசப்பட்ட விடயங்களில் சர்ச்சைக்குரிய விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் மிக நுட்பமாகத் தவிர்க்கப்பட்டு முரண்பாடின்றி உடன்பாடு காணப்பட வேண்டிய மக்களின் இயல்பு வாழ்வுக்கும் புனர்வாழ்வுக்கும் தேவையான அத்தியாவசிய விடயங்கள் குறித்து பரஸ்பர புரிந்துணர்வுடனும் சினேகபூர்வ அணுகுமுறையுடனும் கலந்துரையாடப்பட்டதாக இருதரப்பும் கூறியிருப்பது திருப்தியும் நம்பிக்கையும் தரும் விடயமாகும்:

இந்தப் பேச்சுக்களின் சாராம்ச மூலங்கள் குறித்து இதன் பின்னணி ஆதரவுச் சக்திகளாக இயங்கும் நாடுகளுடன் அனுசரணையாளர்கள் விபரித்து கலந்துரையாடவுள்ளதாகக் கூறப்படுகிறது.

பேச்சுவார்த்தைகள் மிகவும் நல்லபடியாக அமையும் அதனைக் கட்டியெழுப்ப நாங்கள் சிறந்த அத்திவாரத்தை இட்டுள்ளோம் என சிறிலங்காவின் பிரதிநிதியாக பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறியிருப்பது சமாதான ஆர்வலர்களுக்கும் அமைதியை விரும்பும் மக்களுக்கும் நம்பிக்கை தரும் விடயமாகும்.

முதற்கட்டப் பெறுபேறுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அடுத்த கட்டச் சந்திப்புக்கான நிகழ்ச்சிநிரல் வரைபுகள் தயாரிக்கப்படும் போது முக்கிய பிரச்சினைகள் தொடர்பான அம்சங்கள் உள்ளடக்கப்படலாம் என்றாலும் இவை கவனமாகவும் நிதானமாகவும் இதய சுத்தியுடனும் அணுகப்பட வேண்டும் என்பதே மிக முக்கியமானதாகும்.

ஓர் இராஜதந்திரி கூறியதைப் போன்று இந்தப் பேச்சுவார்த்தை பல கௌரவப் பிரச்சினைகளையும் உள்ளடக்கியதான ஓர் இராஜதந்திர யுத்தம் என்றே கருத வேண்டியிருந்தாலும் மனித இருப்பு, மனித உரிமை, மனித இயக்கம் தொடர்பான அழுத்தமான சிந்தனைகளை பரஸ்பரம் மதிப்பளித்து பகிர்ந்தும் புரிந்தும் கொள்வதன் மூலம் இந்த ராஜதந்திர யுத்தத்தை அமைதிக்கான சமாதானத்திற்கான மூலோபாயமாக மாற்றவும் முடியும்.

இதில் அதிகம் பங்காற்ற வேண்டியவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டிய பக்கத்தினரும் அவர்களை அதற்கு ஊக்குவிக்க வேண்டியவர்களுமே ஆவர்.

வெளிப்படையாகச் சொல்வதானால் சிறிலங்கா அரசும் சர்வதேச சமாதான ஆர்வலர்களான நாடுகளும் இப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணை வழங்கி தளராது செயற்பட்டு வரும் நோர்வே அரசும் ஆற்ற வேண்டிய பங்கே இதில் மிக அதிகமாகும்.

எல்லாவற்றையும் விடவும் இவர்களுக்கு இன்னொரு மிக முக்கி யமான பொறுப்புமுண்டு. இந்தச் சமாதான முயற்சிகளை முளையிலேயே கருகச் செய்ய மேற்கொண்ட சிறிலங்காவின் பேரினவாத சக்திகள் இன்னமும் அதனை நிர்மூலமாக்கவும் இன்றைய சிறிலங்காவின் அரசை அதிகாரபலத்தைக் கொண்டு கலைக்கவும், மீண்டும் இன வன்முறையைத் தூண்டிவிட்டு விடுதலைப்புலிகளைச் சீண்டி போரைத் தொடரவும் முனைப்புக் கொண்டு செயற்பட்டே வருகிறார்கள்.

இனங்காணப்பட்ட இவர்களின் செயற்பாடுகளை, சமாதான விரோத நடவடிக்கைகளைக் கவனத்தில் கொண்டு இயங்க வேண்டியதே அது வாகும்.

அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கு முன்னர் இந்த சக்திகள் எப்படி யெல்லாம் செயற்படப் போகிறார்கள் என்பதைச் சர்வதேச சமூகம் அவதானிக்க வேண்டிய கட்டம் இதுவாகும்.

முதற்கட்டப் பேச்சுக்களில் எட்டப்பட்டதாகக் கூறப்படும் முடிவுகள் நடைமுறைப்படுத்தப் படுவதில் கடும் எதிர்ப்பை பேரினவாதிகளிடமிருந்து எதிர் கொள்ள வேண்டிய நிலை அரசுக்கு இருக்கவே செய்யும்...

தடைகளைத் தகர்த்து முன்னேறுவதில் தான் யுத்தத்தினது மட்டுமல்லாது சமாதானத்தினது வெற்றியும் தங்கியுள்ளது.




## சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து சர்வதேச நாடுகள் மகிழ்ச்சி தெரிவிப்பு

சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கமிடையிலான சமாதான பேச்சுவார்த்தைகளை சர்வதேச நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருகின்றன.

அமெரிக்கா,பிரித்தானியா, இந்தியா, கனடா, அவுஸ்திரேலியா ,நெதர்லாந்து, சீனா போன்ற பல் வேறு நாடுகளோடு ஐக்கிய நாடுகள் சபையும் ஐரோப்பிய ஒன்றியமும் இந்த பேச்சுவார்த்தைகள் குறித்து தமது வரவேற்பை தெரிவித்திருப்பதோடு, நம்பிக்கைகளையும் வெளியிட்டுள்ளன.

இந்நாடுகளுக்கு இந்தப் பேச்சுவார்த்தைகளின் விபரங்கள் குறித்து , நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசனும் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமானதாகவும் எதிர்பார்த்ததைவிட முன்னேற்றகரமாகவும் அமைந்து வருவது குறித்தும் இந் நாடுகள் தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளன.அத்துடன் இலங்கையின் அபிவிருத்திக்கும், போரினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற வடக்கு-கிழக்கு பகுதிகளை கட்டி எழுப்புவதற்கும் தம்மாலான உதவிகளை வழங்குவதற் கும் தயாராகவுள்ளதாகவும் அவை தெரிவித்துள்ளன.

## வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு நோர்வே உதவி வழங்கத் தயார்

### நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றசன்

வடகிழக்கின் அபிவிருத்திக்கு தேவையான நிதி உதவிகளை வழங்க நோர்வே நாடு தயாராக இருப்பதாக நோர்வே நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜோன் பீற்றசன் தெரிவித்திருக்கிறார்.

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போதே நோர்வே வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவில் முதலீட்டாளர்களை நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

## சமாதானப் பேச்சு குறித்த விபரங்கள் இந்தியாவிற்கு விளக்கமளிக்கப்படும்

### எரிக்சொல் கெய்ம்

தாய்லாந்தில் நடந்து முடிந்த அரசிற்கும் புலிகளுக்கு மிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையின் விபரங்கள் குறித்து நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்கெய்ம் இந்திய தலைவர்களிற்கு விளக்கமளிக்கவுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினையில் தொடர்புடைய இருதரப்பினரும் இந்தியாவிற்கு தற்போதைய முயற்சிகள் குறித்துத் தொடர்ந்தும் அறியத்தர வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ள நிலையிலேயே தாம் இந்தியா செல்லவுள்ளதாக சொல்கெய்ம் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து சொல்கெய்ம் கண்ணிவெடிகளை அகற்றல் மற்றும் மீள் குடியேற்றத்திற்கான சர்வதேச நிதி உதவிகளே தற்போது முக்கிய தேவைகளாகவுள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

## பதிவு செய்த நோயாளர்கள் நாளை மருத்துவ முகாமிற்கு சமுகம் தரவும்

கிளிநொச்சி

வன்னிப் பிரதேச மக்களின் போக்குவரத்து அசௌகரிய நிலையினை கருத்திற்கொண்டு யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியக் குழு கிளி. மாவட்ட வைத்திய சாலைக்கு (அக்கராயன்) நாளை வருகைதந்து மகப்பேற்றுப் பிணிகளுக்கான சிகிச்சை, சத்திர சிகிச்சை, பற்சிகிச்சை போன்ற நோய்களுக்காக சிகிச்சை அளிக்கவுள்ளதால் பதிவு செய்த நோயாளர்கள் தவறாது அக்கராயன் சிகிச்சை நிலையத்திற்கு சமுகம் தருமாறு கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

## சமாதானப் பேச்சு வெற்றியடையும் இராணுவத் தரப்பு நம்பிக்கை

### ~பிரிகேடியர் கருணாரட்ன

சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடையும் என்று ராணுவத்தரப்பு நம்புகின்றது. இதற்கு ராணுவம் பூரண ஆதரவை வழங்கும் என்று பிரிகேடியர் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இராணுவம் கடந்த காலத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தது. ஆயினும் இந்த நடவடிக்கைகளுக்கு பக்க பலமாக சரியான அரசியல் திட்டம் முன் வைக்கப்படவில்லை.

நாட்டின் அபிவிருத்திக்கும் இயற்கை அனர்த்தங்களின் போது உதவி வழங்கவும் இராணுவம் பயன்படுத்தப்படும். இராணுவத்தினரை உற்சாகப்படுத்த வேண்டிய பொறுப்பு பொதுமக்களுக்குத்தான் உண்டு. சமாதானம் தென்படுகின்ற இந்த வேளையில் இராணுவத்தினரின் உற்சாகம் வீழ்ச்சியடைந்து விடக்கூடாது. நாட்டிற்கு தம்மை அர்ப்பணித்து பணியாற்றும் ஒரு விசேட பிரிவாக இராணுவம் விளங்குகின்றது என்று பிரிகேடியர் சனத் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

# புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து இடைக்கால நிர்வாகத்தை நோக்கி

**செ**ம்ரெம்பர் 11 தாக்குதலின் ஓராண்டு நினைவைக்குறித்து லண்டனில் இருந்து வெளிவரும் "இன்ரியென்ரன்" பத்திரிகையில் புரூஸ் அன்டெசன் ஒரு பத்தி எழுதியிருந்தார். அதிலவர் செப்ரெம்பர் 11 இற்கு பின்னரான (post-september 11) அமெரிக்காவின் புதிய பாதுகாப்பு மற்றும்வெளியுறவுக் கொள்கை பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். அதன்படி-தோல்வியுற்ற அரசுகள் முரட்டு அரசுகள் எனப்படும் இருவகை அரசுகளை இனியும் அமெரிக்கா சகித்துக்கொள்ளாது என்று அவர் கூறுகிறார்.



தோல்வியுற்ற (Failed State) எனப்படுவது உள்நாட்டுப்போரால் சிதைந்த உருக்குலைந்த அரசு ஆகும். அது "அராஜகம் தீவிரவாதம் பயங்கரவாதம்" போன்றவை அடைகாக்கப்படும் இடமாயிருக்கும் என்று அமெரிக்கர்கள் கூறுகிறார்கள்.

சமாதான முயற்சிகளுக்கு முன்பு இலங்கைத்தீவு இந்தவகைக்குள்ளேயே அடங்கியது.

மற்றது முரட்டு அரசு (rough State ). இது சர்வதேச விழுமியங்களுடன் ஒத்தோட மறுக்கின்ற யாருக்கும் கட்டுப்பட மறுக்கின்ற அரசு. பயங்கரவாதம் போதைப்பொருள் வர்த்தகம் ஆயுதக்கடத்தல் போன்றவற்றின் புகலிடமாயிருப்பது இது. அமெரிக்காவின் இந்தப்பட்டியலில் ஈராக் முதலாவதாகக் காணப்படுகின்றது.

இவ்விருவகை அரசுகளும் உலக சமாதானத்துக்கு அச்சுறுத்தலாயிருப்பதாக அமெரிக்கா கூறுகிறது.எனவே இவற்றைத்துடைத்தழித்து பூமியைத் துப்புரவாக்குவது என்பது இப்பொழுது அமெரிக்காவின் நிகழ்ச்சிநிரலில் முதலாவதாகக் காணப்படுகிறது.

இதன்படி-தோற்ற அரசுகளின் விசயத்தில் அங்குள்ள அரசாங்கத்தை அதன் கையாலாகாத்தனத்தைப் பயன்படுத்தி தம்வசப்படுத்தி அதை எல்லாவிதத்திலும் பாதுகாத்து பலப்படுத்தி அதன் மூலம் அங்கே சிதைவுக்கு காரணமாயிருக்கும் சக்திகளை முற்றாகத் தோற்கடித்து விடுவது.

முரட்டு அரசுகளைப் பொறுத்தவரை அங்கே நேரடியாகப் படையை இறக்கி அரசாங்கத்தை யுத்தத்தின் மூலம் அகற்றிய பின் தமக்கு சேவகஞ் செய்ய வல்ல ஒரு அரசாங்கத்தை அங்கே ஸ்தாபிப்பது. இதுதான் இப்பொழுது ஆப்கானிஸ்தானில் நடந்துகொண்டிருப்பது. இதைத்தான் அமெரிக்கா ஈராக்கில் செய்ய முயல்கிறது.

ஆனால் கொழும்பிலிருந்து வெளிவரும் "நோத் ,ஈஸ்ற்,ஹெரல்ட்" எனப்படும் தமிழருக்குச் சொந்தமான ஒரு பத்திரிகை சிறிலங்கா இப்பொழுது தோல்வியுற்ற அரசுகளின் பட்டியலில் இல்லை என்று கூறுகிறது. புரிந்துணர்வு உடன்படிக்கை இலங்கைத்தீவை தோல்வியுறும் அரசு என்ற நிலையிலிருந்து காப்பாற்றிவிட்டது என்று மேலும் அந்தப் பத்திரிகை கூறுகிறது.

கோட்பாட்டளவில் இக்கூற்று சரியானதே. அதாவது இலங்கைத்தீவு சிதைவதைப் புரிந்துணர்வு உடன்படிக்கை தற்காலிகமாகவேனும் தடுத்து நிறுத்தியுள்ளது.

ஆனால் யதார்த்தத்தில் -முழு அளவு இயல்பு நிலையை உருவாக்குவதில் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குள்ள போதாமைகள் அல்லது இயலாமைகள் என்பவற்றின் அடிப்படையில் கூறுமிடத்து இலங்கைத்தீவு ஒரு தோல்வியுறும் அரசாக மாறுவதைத் தடுப்பதற்கு இன்னும் நீண்ட தூரம் போகவேண்டியிருக்கும் என்றே தோன்றுகிறது.

கொழும்பில் படைத்துறை உயர்மட்டத்தில் ஒரு பகுதியினர் புரிந்துணர்வு உடன்படிக்கையின் நோக்கம் யுத்த நிறுத்தத்தைப் பாதுகாப்பதே தவிர முழு அளவு இயல்பு நிலையை ஸ்தாபிப்பது அல்ல என்று விளக்கமளிப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.

அப்படியென்றால் - இயல்பு நிலையை உருவாக்குவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் அப்பால் ஒரு ஏற்பாடு வேண்டியிருக்கிறதா?

இது உத்தேச இடைக்கால நிர்வாக அமைப்பிற்கும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் இடையில் நிரப்பப்படவேண்டிய ஒரு பாரதூரமான இடைவெளி இருப்பதையே காட்டுகிறது.

தற்சமயம் தாய்லாந்தில் ஆரம்பித்திருக்கும் பேச்சுக்களின் ஆரம்ப கட்டங்களில் ஏதோவொரு இடைக்கால நிர்வாக அமைப்பைப் பற்றிய உரையாடல்களே அதிகம் முதன்மை பெறலாம் என்றொரு எதிர்பார்ப்பு பரவலாக உள்ள ஒரு பின்னணியில் அந்த உத்தேச இடைக்கால நிர்வாக அமைப்பிற்கும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் இடையில் காணப்படும் இடைவெளி மிகவும் ஆபத்தானது. எல்லாவற்றையுமே குழப்பிவிடக்கூடியது.

சமீபத்தில் பருத்தித்துறையில் நடந்த சம்பவங்களும் அதன்பின் பாதுகாப்பு அமைச்சு எடுத்த நடவடிக்கைகளும் இதைத்தான் காட்டுகின்றன.

பருத்தித்துறையில் சம்பந்தப்பட்ட இடங்களில் இப்பொழுது இராணுவத்திற்குப் பதிலாக பொலிஸ் நிறுத்தப்பட்டுள்ளது.

இது பிரச்சினைக்குத் தீர்வாகாது.

ஏனெனில் இராணுவமோ பொலிசோ நேவியோ எதுவோ அதைத் தமிழர்கள் "எங்களுடையது" என்று கருதவில்லை. சீருடையில் ஆயுதத்தோடு நிற்கும் அவர்களை தமிழர்கள் அந்நியர்களாகவே பார்க்கிறார்கள். அச்சுறுத்தலாகவே பார்க்கிறார்கள். "எங்கட பொலிஸ்" என்று பார்க்கவில்லை.

இதுதான் பிரச்சினை எங்கட பொலிஸ் , எங்கட ஆமி, எங்கட நேவி, எங்கட நிர்வாகம், எங்கட ஆட்சி என்று சனங்கள் அவர்களைப் பார்க்க முடியாத அவர்களோடு பழக முடியாத ஒரு இடைவெளி காணப்படுகிறது.

இந்த இடைவெளி உள்ளவரை இயல்புநிலை தோன்றாது.

பருத்தித்துறைச் சம்பவத்தைப் பற்றி எழுதும்போது கூடவே இன்னுமொன்றை இங்கே கூறவேண்டியுள்ளது. இம்மாதம் முற்பகுதியில் வட அயர்லாந்தின் பொலிஸ்மா அதிபர் இராணுவத்தின் பிடியில் உள்ள தமிழ்ப்பகுதிகளுக்கு ஒரு சுற்றுப் பயணம் செய்திருந்தார். இதன்போது அவர் அரச உயர் அதிகாரிகளிடம் புலிகளின் அரசியல் வேலைகளைத் தொடர்ச்சியாக கண்காணிக்கும்படி ஆலோசனை கூறியுள்ளார்.

**-நிலாந்தன்-**

முக்கியமாக "அரசியல்வேலை" என்றால் என்ன என்பதைத் திட்டவட்டமாக வரையறை செய்ய வேண்டும் என்றும் இல்லையென்றால் புலிகள் மக்களுக்கும்-படையினருக்கும் இடையில் மோதல்களைத் தூண்டிவிட முடியும் என்றும் இது அயர்லாந்திலும் நடந்தது என்றும் அவர் சிறிலங்காவின் பொலிஸ் உயர் அதிகாரிகளை எச்சரித்துள்ளார்.

மேலும் சிறிலங்காப் பொலிசை ராஜதந்திரம் மிக்க மெருகான ஒரு அமைப்பாக மாற்றி மக்களோடு நெருங்கிப்பழக விட வேண்டும் என்றுமவர் ஆலோசனை கூறியுள்ளார்.

அந்தப் பொலிஸ்மா அதிபர் வட அயர்லாந்தின் குருதிசொரியும் அநுபவங்களிலிருந்து எதையும் கற்றதாகத் தெரியவில்லை. இங்கே தனது சிங்களச் சிநேகிதர்களையும் அவர் கற்கவிடுவதாகத் தெரியவில்லை.

ஆனால் பொலிசாருக்கும் மக்களுக்கும் இடையில் இடைவெளி உள்ளது அவருக்குத் தெரிகிறது. அவர் நினைப்பது போல பொலிசை நவீனமயப்படுத்தி உளவியல் பயிற்சிகள் கொடுப்பதன் மூலம் இந்த இடைவெளியை நிரப்பிவிட முடியாது.

நிரவப்பட முடியாத இடைவெளி இது என்பதால்தான் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையும் அதற்குப்பிறகு பேச்சுவார்த்தைகளும் முடிவில் ஒரு இறுதித் தீர்வும் தேவைப்படுகிறது.

எனவே நிரவப்பட முடியாத இந்த இடைவெளியைக் கையாளும் மிக நவீன வழிவகைகள் பற்றிச் சிந்திப்பதைக் கைவிட்டு புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் இடைக்கால நிர்வாகத்திற்கும் இடையில் உள்ள நிரவப்படக்கூடிய ஒரு இடைவெளியை எப்படிக் கையாள்வது என்று சிந்திப்பதே சமயோசிதமானது பயன் பொருத்தமானது.

யுத்தத்திலிருந்து ஒரு சிவில் சமூகத்தை நோக்கிப்போகும் ஒரு இடைமாறு காலகட்டத்திற்குரிய தற்காலிக ஏற்பாடே இடைக்கால நிர்வாக சபை.

இடைமாறு காலகட்டத்திற்குரியது என்பதால் அந்த அமைப்பு இராணுவ அம்சங்களிலிருந்து முற்றிலும் விடுபடாததாகவும் அதே சமயம் சிவில் விழுமியங்களை இயலுமானவரை தன்வசப்படுத்த முயல்வதாகவும் காணப்படுவதே வழமை.

இதில் இராணுவ நோக்கு நிலைக்கா அல்லது சிவில் நோக்கு நிலைக்கா அதிகம் முக்கியத்துவம் கொடுப்பது என்பது அரசாங்கத்தின் முடிவுகளிலேயே தங்கியுள்ளது.

எவ்வளவுக்கெவ்வளவு இராணுவ நோக்கு நிலைக்கு முக்கியத்துவம் தரப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு யுத்தத்திற்குத் திரும்பிப் போகும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும். எவ்வளவுக்கெவ்வளவு சிவில் விழுமியங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு விட்டுக் கொடுக்கும் மனோநிலையும் பிரச்சினைகளைப் பேசித்தீர்க்கும் மனோநிலையும் வளரும்.

நாட்டை இராணுவ மயநீக்கம் செய்யும் வாய்ப்புக்களும் அதிகரிக்கும்.

இலங்கைத்தீவு ஒரு தோல்வியுறும் அரசாகிச் சிதைவதும் தடுக்கப்படும்.

அதாவது இச்சிறிய அழகிய தீவு பேரரசுகளின் குத்துச் சண்டைக்களமாக மாறுவது தடுக்கப்டும்.
(இப்பத்தி முதற்சுற்றுப் பேச்சுக்களின் உத்தியோகபூர்வ முடிவுகள் வெளிவர முன்பு எழுதப்பட்டது.)

★★

## தாய்லாந்துப் பேச்சுக்கள்...





தாய்லாந்து பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட புலிகள் தரப்புப் பிரதிநிதிகளை படத்தில் காணலாம்



தாய்லாந்து பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட இருதரப்புப் பிரதிநிதிகளுடன் நோர்வே பிரதிநிகளும் படத்தில் காணப்படுகின்றனர்.



அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அமைச்சர் ஜீ.எல்.பீரிசும் முக்கிய விடயம் பற்றி கலந்துரையாடுகிறார்கள்



தாய்லாந்து பேச்சுவார்த்தையினை ஒழுங்கமைத்த நோர்வே தரப்பு பிரதிநிதிகள்.



சமாதானத்துக்காக பிரார்த்தனை செய்யும் தென்பகுதி மக்கள்

அறிந்து கொள்; அல்லது அறிந்தோர்க்குச் செவிசாய்த்துத் தெரிந்து சொள். - பால்த்தாஸார் கிரேஷியன்

# பிறமுக அறிமுகம்

## 'துக்ளக்' பத்திரிகை ஆசிரியர் 'சோ'



இராமசாமி என்ற மனிதனை பலர்அறியாமல் இருக்கலாம். இந்தியாவில்—அதுவும் தமிழகத்தில் இராமசாமி என்ற பெயருடைய பேர்வழிகள் பல்லாயிரம் இருக்கையில் எந்த இராமசாமியை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்ற கேள்வியும் எழலாம். அவருடைய பெயரின் முன்னெழுத்தை மட்டும், பேரைத் தவிர்த்துவிட்டுக் கூறினால் உடனே அவரின் பிறமுகம் அறிமுகமான முகமாகிவிடும்.

'சோ' அந்தளவுக்கு பல பரிமாணங்களில் பிரபலமான முகத்திற்குரியவர்தான். வழக்கறிஞர், சட்ட ஆலோசகர், நாடக ஆசிரியர், நாடக மற்றும் திரைப்பட நடிகர், இயக்குநர், எழுத்தாளர், பத்திரிகையாசிரியர், அரசியல் விமர்சகர், பிராமணியச் சிந்தனையாளர், விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பாளர் இப்படி அவருக்குப் பல அவதாரம் உண்டு.

ஏக காலத்தில் பல அவதாரங்களில் இயங்கும் திறனும் உண்டு. இதுவே அவரது பிரபல பிறமுகத் தன்மைக்கும் காரணமாகும். ஒரு வழக்கறிஞராக கல்வி கற்கும் காலத்திலேயே தமிழகத்தின் நாடகமேடைகளில் ஒரு நகைச்சுவை நாடகாசிரியர், இயக்குநர், நடிகர் என்ற பல முகங்களில் தன்னை அறிமுகம் செய்துகொண்ட 'சோ'வின் 'அரசியல் நையாண்டி'த்தனமும் 'திருதிருவென' முழிக்கும் திருட்டு விழிகளைக்கொண்ட முகத்தின் அசட்டுக்கோமாளித்தன நடிப்பும் தமிழக மக்களை அதிலும் குறிப்பாக மத்தியதர மேல்தர வர்க்கத்தினர் மத்தியில் அவரைப் பிரபலமாக்கியது.

அரசியலை அதிலும் ஏற்கனவே கேலித்தனமான இந்திய—தமிழக அரசியலையும், கோமாளித்தனமான அரசியல்வாதிகளையும் மேலும் நையாண்டி செய்து விமர்சிக்கும் அவரது நாடகங்கள், எல்லாவற்றையும் பொழுது போக்காகவே பார்க்கும் தமிழகத்தின் தலைநகரத்தில் வாழும் மக்களிடையே பெரும்வரவேற்பை பெற்றதில் வியப்பில்லை.

நாடகத்தனமான இந்திய அரசியலில் கோமாளித்தனமான அரசியல்வாதிகளுக்கு குறைவேயில்லாததால் 'சோ'வின் அரசியல் நையாண்டி நாடகங்களுக்கான கருப்பொருளுக்கும் குறைவே இருக்கவில்லை...

கிட்டத்தட்ட சகல அரசியல்வாதிகளையும்அவர் தனது நாடகங்களில் அசையும் கேலிச்சித்திரங்களாக்கினார். அரசியல்வாதியாகத் தன்னை மாற்றாமல் அரசியல் பேசியே, அரசியலுக்குள் தன்னை ஒரு முக்கியஸ்தராக மாற்றிக்கொள்ள அவர் எடுத்த திரைமறைவு முயற்சிகள் அனேகம்.

ஆனால், அவரை எல்லோரும் ஒரு கோமாளியாகவே அடையாளப் படுத்திக்கொண்டதால்அரசியலில்அந்தக் கட்டத்தை விட்டு அப்பால் செல்ல அவரால் முடியவில்லை. அது இன்னொரு கோமாளி அரசியல்வாதி நடிகர் தமிழக அரசியலில் உருவாகும் ஆபத்தைத்தவிர்த்தது.

இல்லாவிட்டால் ஒரு நவீன முகம்மது பின் 'துக்ளக்' தமிழகத்தில் முதல்வராகி தமிழகம் படாதபாடு பட்டிருக்கும்.நாடகமேடை அவரை சினிமாவரை இட்டுச்சென்றது.

நடிகர், கதாசிரியர்,தயாரிப்பாளர், இயக்குநர், என கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்திற்கும் அதிகமான காலம் திரையுலகில் கொடிகட்டிப்பறந்தார்.

'துக்ளக்' பத்திரிகையின் தோற்றம் அவரை ஒரு அரசியல் நையாண்டி விமர்சகர் என்ற பிரபலத்தை பெற்றுக்கொடுத்தது. அவரின் பிராமணிய சிந்தனையும்,பற்றும்,திராவிட கட்சிகளின் தீவிர எதிர்ப்பாளராக்கியது.

ஆத்தீகக் கொள்கை வெறி, நாத்தீக கோட்பாட்டாளர்களை கடுமையாக விமர்சித்தது.

தேசியக்கட்சி முதல் மாநிலக்கட்சி வரை சகலதையும் உக்கிப்போகும் அளவுக்கு நையாண்டி செய்து விமர்சித்தார். அவரது சட்ட அறிவை தனக்கான பாதுகாப்பு கவசமாக்கிக்கொண்டார் ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சியே தனது கட்சி என பிரகடனம் செய்தார். எல்லாவற்றையும் தமிழ்மக்கள் அவரைக் 'கோமாளித்தனமாக' ரசித்து கைதட்டியதை-மக்கள் தனது கருத்தை ஆதரிக்கிறார் என நினைத்துக் கொண்டது தான் அவரது பலவீனம்....

ஈழத்தமிழர் போராட்டத்தையும்,விடுதலைப்புலிகள் அமைப்பையும் குறிப்பாக எமது தேசியத் தலைவரையும் கொச்சைப்படுத்துவதும் விமர்சிப்பதும் இவரது இலட்சிய பொழுது போக்கு.

இந்தியப்படை தமிழீழப் பிரதேசத்தில் நிலை கொண்டு ஆக்கிரமிப்பு யுத்தம் செய்த வேளை அதை நியாயப்படுத்தி ஊடகங்களூடாக உளறியவர்களில் இவர் முக்கியமானவர்.

இவரை சி.ஐ.ஏ.யின் முகவர் என ஒரு சாராரும் இந்திய'றோ' அமைப்பின் முகவர் என வேறொரு சாராரும் விமர்சிப்பது வழக்கம்.

சில காலம் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ஜெயராமின் அரசியல் ஆலோசகராகவும் இவர் இருந்துள்ளார் என்றால் இவர் எப்படிப்பட்டவர் என்பதை நீங்களே ஊகிக்க முடியும். கோமாளி ராணிக்கு கோமாளி மந்திரி பொருத்தம்தான் என்கிறீர்களா?

எல்லோரையும் கிண்டல் செய்து ஏமாளிகளாக்கிய இவரை இன்னமும் தமிழ் மக்கள் ஒரு கோமாளி என்ற ஸ்தானத்தை விட்டு இறக்காமல் இருப்பதுதான் 'சோ' வின் சித்தாந்தங்களுக்கு கிடைத்த படுதோல்வியாகும்.

'சோ'வின் சில கோமாளித்தனங்களை மறக்க மட்டுமல்ல மன்னிக்கவும் முடியாதுதான்...

# நறுக்கென ...

## விடைதேடும் வினாக்கள்





எதிர்பார்த்தபடி, எதிர்ப்புக்களுக்கு அப்பால் தாய்லாந்தில் சிறிலங்கா அரசு– விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையின் முதற்கட்டம் சுமூகமாக நடந்தேறியதாக வெளிவரும்செய்திகள் பேரினவாத சித்தாந்தவாதிகளுக்கு பேரிடியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கடந்த பல மாதங்களாகவே பொதுசன ஐக்கிய முன்னணி– ஜே.வி. பி. கூட்டுத்தலைமையில் சமாதானத்திற்கெதிரான சக்திகள் தமது அனைத்து அறிவையும் ஆற்றலையும் ஏன், அதிகாரத்தையும் கூடப் பயன்படுத்தி சமாதான நகர்வுகளை தடுக்கவும், இனப்பிரச்சினையை மீண்டும் தூண்டவும் சந்திரிகா அம்மையார் மேற்கொண்ட முயற்சிகள் செயலற்றுப் போனதில் பொதுசன ஐக்கிய முன்னணிக்குள்ளேயே விரிசல்கள் ஏற்படத்தொடங்கியுள்ளன.

ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தவும் குறிப்பாக பாராளுமன்றத்தை தன்னிச்சையாக கலைக்கும் நிறைவேற்று அதிகார வலுவை இல்லாதொழிக்கும் மசோதாவுக்கு பொதுசன ஐக்கிய முன்னணிக்குள்ளேயே ஆதரவுவலுத்து வருவது சந்திரிகாவுக்கு சினத்தையும், பயத்தையும் ஏககாலத்தில் ஏற்படுத்தியுள்ளது.

அந்த மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதத்திற்கு விட்டு பின்வாக்கெடுப்புக்கு விட்டால் தனக்கு தோல்வி நிச்சயம் என்பது மட்டுமல்ல அதுவே பொ.ஐ.முன்னணியின் அஸ்தமனத்தின் ஆரம்பமாகவும் ஆகிவிடும் என்ற அச்சம் சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆனாலும் சந்திரிகாவின் வாக்குறுதிகளை நம்ப எவரும்தயாராக இல்லை. கடந்த காலங்களில் அவர் எத்தனையோ தடவை வாக்குறுதிகளை எவ்வாறு இயல்பாக மீறியுள்ளார் அல்லது மறந்துள்ளார் என்பதற்கு ஏராளம் சான்றுகள் உள்ளன. இவை ஐக்கிய தேசிய முன்னணிக்கும் ரணிலுக்கும் தெரியாத விடயமல்ல.

இந்தநிலையில் முதற்கட்ட பேச்சுவார்த்தைகளில் ஏற்படக்கூடிய வெற்றி அல்லது திருப்தி என்பது மக்களிடம் சமாதானம் குறித்தும் ரணிலின் ஆட்சி குறித்தும் நம்பிக்கையை அதிகரிக்கும் நிலையில் சந்திரிகா என்ன செய்யப்போகிறார்.

சந்திரிகாவின் 'தந்திரி'கா வியூகத்தினுள் ரணில் சிக்குவாரா அல்லது அந்த வியூகத்தை உடைத்து மேலெழுவாரா? இதுவே பொதுமக்களையும், அரசியல்நோக்கர்களையும் விடைதேடவைத்துள்ள முக்கியவினாவாகும்.

நிலைமை எதுவானாலும் சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரம் என்ற மந்திரக்கோலின் அசைவுகளின் தன்மையில் தான் தமது அரசியல் எதிர்காலமே தங்கியுள்ளது என பேரினவாத சக்திகள் நம்பிக்கை கொள்வதில்வியப்பில்லை.....

நிறைவேற்று அதிகாரமா, பாராளுமன்ற ஆட்சி அதிகாரமா வெல்லப்போகிறது?

இப்படியும் கூடக்கேட்கலாம்–

போர் முனைப்பா,சமாதான எழுச்சியா வெல்லப்போகிறது? அடுத்துவரும் வாரங்கள் அதற்கான பதிலை சொல்லியே தீரவேண்டும்.

## ரத்வத்தையின் நிஜ வடிவம் ...





அந்த ஆர்ப்பாட்டமிக்க அரசியல் ஜெனரலின் வெற்றி நிச்சயம் (ஜெயசிக்குறுய்) என்ற வெட்கம்கெட்ட வீராப்புத்தனம் மெல்ல மெல்ல ஆட்டம்காணத் தொடங்கி அடிபெயரும் நிலைக்கே வந்துவிட்டது தெளிவாகத் தெரிகிறது.

தொண்ணூறுகளின் மத்திய பகுதிக்கு மேல் புதிய மிலேனிய ஆரம்பம்வரை சீருடை அணிந்த அந்தஅரசியல் வாதியின் சீரற்ற செயற்பாடுகளின் தில்லுமுல்லுத்தனங்களும் வில்லத்தனப்பக்கமும் ஒவ்வொன்றாக, மர்மக்கதையின் சுவாரஷ்யமான அத்தியாயங்களாக, வெளிவரத்தொடங்கியுள்ளதில் வியப்பிலும் வெறுப்பிலும் தென்னிலங்கை உறைந்து போயுள்ளது.

முன்னாள் சிறிலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர்அநுருத்த ரத்வத்தையின் கொட்டமும் கொற்றமும் இப்படியொரு அதலபாதாள வீழ்ச்சியை எட்டநேரும் என அவரே கனவுகூடக்கண்டிருக்க மாட்டார்.

ஜெயசிக்குறுவின் வீழ்ச்சியில் 'சூரியக்கதிரினால் சூட்டப்பட்ட ஜெனரல்கீரிடம்' அர்த்தமற்றதாகியது.

ஓயாத அலைகள் ஒவ்வொன்றும் அவரின் இராணுவ ஞானத்தின் வெறுமையை வெளியுலகிற்கு பறைசாற்ற வைத்தது.

தேர்தலில் பொ.ஐ.முன்னணிக்கு கிடைத்த தொடர்வீழ்ச்சிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் என்ற அவரின் பதவியின் பலவீனத்தை அவிழ்த்துக்காட்டியது.

உடத்தலவின்ன படுகொலைச் சம்பவங்கள் அவரையும் அவரின்வாரிசுகளையும் கொடிய – நிஜவில்லன்களாக உலகிற்கு அறிமுகம் செய்தது.

ஊழல்கள் மோசடிகள் என அவ்வப்போது ஐ.தே முன்னணி ஆட்சியாளர்களால் வெளிக்கொணரப்பட்டவைகள் ஜெனரல் பட்டமளித்து கௌரவித்த மருமகள் சனாதிபதி சந்திரிகாவே அவரைத் தனது அரசிலுள்ள மிகவும்மோசமான மோசடியாளன் என சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் முன்னிலையிலேயே பகிரங்கமாக பேரிழக்க வைக்கச் செய்தது.

இப்போது சுமார் 43 மில்லியன் ரூபாய் பெறுமதியான வங்கி வைப்புச் சான்றிதழ்களின் வெளிக்கொணர்கையானது அவரை ஒரு தேசிய மோசடியாளராகவே இனங்காட்டியுள்ளதென நோக்கர்களை விமர்சிக்க வைத்துள்ளது.

ரத்வத்தை குடும்பமே குற்றவாழிக்கூண்டில் நிற்கவேண்டியநிலை........

மாமாவின் கூத்துக்கள் மருமகளின் வீழ்ச்சியை துரிதப்படுத்தியுள்ளது தெளிவாகவே தெரிகிறது.

எல்லா நடவடிக்கைகளுக்கும் காலக்கெடுவிதித்து விறுவிறுப்புக்காட்டியவருக்கான காலக்கெடு விதிக்கும் வேளை நெருங்குவதாகவே தெரிகிறது.

சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரம் ஜெனரல்மாமாவை எந்தவகையிலாவது காப்பாற்றுமா?

ரத்வத்தை அதை எதிர்பார்க்கும் இழிநிலையிலேயே இப்போது உள்ளார் என்பதில் ஐயமில்லை.

## மஞ்சள் அங்கிகளுக்குளிருந்து மனிதக்குரல் ...





'ஜே.வி.பி. மட்டுப்படுத்தப்பட்ட ஆதரவுடைய சிறுபான்மை கட்சிமட்டுமே'.

'சிகல உறுமய செல்வாக்கில்லாத ஒரு சிறுபான்மைக் குழு மட்டும் பேரினவாதம்பேசுவோர் ஒருதொகையானவர்கள் மட்டுமே'

ஆகவே இவர்களைக்கணக்கில் கொள்ளவேண்டிய அவசியமேயில்லை. பேச்சுவார்த்தைக்கு முன் விடுதலைப் புலிகள்மீதான தடையை நீக்க வேண்டியது அவசியமேயாகும்.

போரை நடத்துவதில் பொ.ஐ.முன்னணி தோல்வியை அடைந்துவிட்டது உண்மையே. இப்போது இந்த நாட்டிற்கு சமாதானம் மட்டுமே தேவை.

இவ்வாறெல்லாம் யார் கூறியிருக்கிறார் என்று நினைக்கிறீர்கள் வேறு யாருமல்ல.....பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கும் பௌத்த மகா சங்கத்தைச் சேர்ந்தவரும் லங்கா சமசமாஜக் கட்சி அங்கத்தவருமான சாமித்த தேரர்தான்.

ஒரு காலத்தைய கம்யூனிஸ்ட் கட்சிகாரர் , ஜே.வி.பி ஆதரவாளர்....... சமகாலத்தில் பௌத்தபிக்கு பாராளுமன்ற உறுப்பினரென இரட்டை வேஷதாரி.

இனவாத மதவாதம் பேசுவோர் சிறுபான்மையினராகவே உள்ளனர் என்று கூறுகிறார்.

அப்படியானால் தனிச்சிங்களவரின் ஆட்சியை ஏற்படுத்த பௌத்த சிங்கள மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்று அறை கூவல்விடுக்கும்பௌத்தமத பீடாதிபதியையும் அவரது பக்தர்களையும்புறக்கணித்து அவர்களின் அரசியல் கருத்துக்களை உதாசீனம்செய்துவிடுங்கள் என பகிரங்கமாக தெளிவாக தென்பகுதி மக்களுக்கு ஒரு அரசியல்வாதியாகவல்லாது ஒரு பௌத்த துறவியாக நின்று உபதேசம் செய்வாரா?


இப்படிச் சிலர் கேட்கவே செய்கின்றனர். இதற்கு அவர் என்ன பதில் சொல்வாரோ தெரியாது. ஆனால் மஞ்சள் அங்கிக்குள் இருந்து அவர் வெளியிட்ட கருத்துக்கள் நிராகரிக்க முடியாத நியாயத்தன்மையைக் கொண்டிருப்பதை எவரும்மறுக்கவும் முடியாது.

மக்களைக் கூறுபடுத்தி வேறுபடுத்தும் மகாவம்ச அரசியல்பேசும் பிக்குமார்களுக்கிடையில் சிலரது குரல்கள் சமகால சமூக அரசியல் யதார்த்தங்களைப் புரிந்துகொண்டு பேசும் குரல்களும் எழவே செய்கின்றன.

தர்மம் பற்றி உபதேசிப்பவர் போரை நியாயப்படுத்துவதென்பது அதர்மமானதென இதற்கு முன்னரும் ஒருதடவை இவர் கூறியதை நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

அறிந்து கொள்; அல்லது அறிந்தோர்க்குச் செவிசாய்த்துத் தெரிந்து கொள். - பால்த்தாஸார் கிரேஷியன்

கிழக்கு,தென்கிழக்கு ஆசிய நாடுகள் சிலவற்றிற் காணப்படுகின்ற புலிப்பொருளாதார முறைமையை இலங்கையிற் கட்டியெழுப்ப சிறிங்காவின் அரச தலைவர்கள் ஆவலுறுவதாகவும் அதற்கு 'அவர்களது அபிலாசைகளை நாம்ஆதரிக்கிறோம்' என்றும் மேற்படி அங்குரார்ப்பண உரையில் புலிகள் தெரிவித்துள்ளனர். இது அமெரிக்காவிற்கு ஓர் இனிப்பான செய்தி. எனவே அமெரிக்கா புலிகளைச் சற்று அனுசரித்து இலங்கை அரசை பேச்சுவார்த்தையின்பால் மேலும் அழுத்தும். எனவே இம்முறை பேச்சுவார்த்தையின் ஆயுள் சற்றுப் பலமானது.



# பேச்சுவார்த்தைகளின் ஆயுள் முன்னரைவிடப் பலம்

## மு.திருநாவுக்கரசு

"உரிமை என்பது எமக்கு யாராலும் தரப்படுமொன்றல்ல; அது எம்முடன் கூடவே பிறப்பது"

ஆனால் தம்பதீபக் கோட்பாட்டின்படி தமிழர் பிறப்பால் உரிமையற்றவர்கள். எனவே இலங்கைத்தீவின் உள்நாட்டு வரலாற்றுப் போக்கின்படி சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற முடியாது.

ஆனால் உள்நாட்டை மேவி வெள்ளம் பாய்ந்துவிட்டது. இலங்கை சர்வதேசக் கடலில் கரைந்துள்ளது. சர்வதேச சக்திகளும் அவற்றின் தலையான அமெரிக்காவும்இலங்கை விவகாரத்தில் ஒரு தீர்க்கமான பாத்திரம் வகிக்க தலைப்பட்டுள்ளன. ஆதலால் புதிய சக்தியின்வருகையுடன் இலங்கை வரலாறு தொடர்ந்தும் பழைய போக்கிற்போக முடியாமல் புதிய இரசாயன மாற்றத்திற்கு உள்ளாகிவிட்டது.

எனவே இம்முறை பேச்சுவார்த்தை பகிடிக்கல்ல.வெற்றிக்கு நிகழ்கின்றது.

வரலாறானது எல்லா விருப்பு வெறுப்புக்களையும் கடந்து பேச்சுவார்த்தையை முன்தள்ளியுள்ளது.

வரலாற்றில் முன்புருவான ஒப்பந்தங்களெல்லாம் சிங்களத் தரப்பிலிருந்து காலங் கடத்தும்நோக்கில் எழுந்தன. அல்லது பொறிகளால் வடிவமைக்கப்பட்டன.

1983இன் பின் நிகழ்ந்த பேச்சு வார்த்தைகள்அனைத்துமே இருதரப்பிலும் மனமின்றி நிகழ்ந்தன. அல்லது சாக்குப்போக்கால் நிகழ்ந்தன.

1925ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஒப்பந்தம்கைச்சாத்தாகியதிற் தொடங்கி இப்போது 2002ம் ஆண்டு தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகள்வரை நீண்டு செல்கின்றது.

வடக்கு கிழக்கை ஓர்அலகாக வரையறுத்து அதனடிப்படையில் எழுந்த முதலாவது பிரதான ஒப்பந்தமாக 1925ம்ஆண்டு யாழ்ப்பாணத்தில் கைச்சாத்தான மகேந்திரா ஒப்பந்தம் அமைகின்றது. ஒருபுறம் சி.ஈ.விக்டர் எஸ். கொறியா தலைமையிலான குழுவினரும், மறுபுறம் டபிள்யூ.துரைசுவாமி தலைமையிலான குழுவினரும் இதிற்கைச்சாத்திட்டனர். இதன் பின் முறையே 1957ம்ஆண்டு பண்டா-செல்வா ஒப்பந்தமும், 1965ஆம் ஆண்டு டட்லி-செல்வா ஒப்பந்தமும், 1987ஆம் ஆண்டு ஜே.ஆர்- ரஜீவ் ஒப்பந்தமும் எழுந்தன. ஆனால் இவை எல்லாம் "பொய்யாய் பழங்கதையாய்" போயின.

ஆனால் 2002ம் ஆண்டு கைச்சாத்தாகியுள்ள ரணில்-பிரபாகரன் புரிந்துணர்வு ஒப்பந்தம், பிரபாகரன் - ஹக்கீம் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பனவும் அதன் தொடர்ச்சியான தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளும் பொய்யாய் பழங்கதையாய் போய்விடமுடியாத சர்வதேச சூழலும் , சர்வதேச அழுத்தமும் எழுந்துள்ளன.

யாழ்ப்பாணத்திற் கைச்சாத்திடுவதிற் தொடங்கி கொழும்பிற் கைச்சாத்துகள் பல நிகழ்ந்து பின்பு பிரச்சினை தீர்வுக்கு வெளியே சென்னை ,தென்மானிலங்களென பரவி விரிந்து புதுடெல்லியை அடைந்து அதன்பின் இந்திய எல்லையையும் தாண்டி திம்பு பேச்சுவார்த்தை என அகன்றது. இறுதியில் தென்னாசியாவின் மிகப்பெரிய நாடான இந்தியப் பிரதமரும், இலங்கை ஜனாதிபதியும் தமிழரின்பெயரால் ஒப்பந்தம்செய்து தோல்வியில் முடிந்தது. இவ்வொப்பந்தம் பிரச்சினையைத்தீர்க்க தவறியது மட்டுமன்றி எதிர்விளைவானதாயும் அமைந்தது.

பிரச்சினையை உள்நாட்டில் தீர்க்கத்தவறியமையானது பின்பு தென்னாசியாவரை பிரச்சினையை பெருப்பித்தது. தென்னாசியாவுக்குள்தீர்க்கத்தவறியமையானது மேற்குலகுக்கூடாக தென் கிழக்காசியாவரை பெருத்துள்ளது. நோர்வேயின் வரவுடன் பிரச்சினை நேரடியாக ஐரோப்பாவரை நீண்டதுடன் கடந்த மாதம் லண்டனில் அரச தரப்பு , புலிகள்தரப்பு உயர்மட்டச் சந்திப்புக்களும் நிகழ்ந்துவிட்டன. இப்போது பேச்சுவார்த்தை தாய்லாந்தில் களம்கொண்டுவிட்டது.

இப்பின்னணியில் பேச்சுவார்த்தைகள் அதிகம் சீரியதன்மை கொண்டவையாய் இருக்க வேண்டி உள்ளது. தாய்லாந்தில் பேச்சுவார்த்தை அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அதேதினத்தில் ஐரோப்பிய சமூகம் உத்தியோகபூர்வமாக பேச்சுவார்த்தைகளை வரவேற்றும் பாராட்டியும் அறிக்கைவிட்டதுடன் நிதியுதவி பற்றிய 'முன்னறிவித்தலையும் விட்டுள்ளது.இதைத்தொடர்ந்து ஆஸ்திரேலியா போர்ராளிகளின் நலன்காப்பிற்கான நிதியுதவி முன்னறிவித்தல் ஒன்றை விட்டுள்ளது. பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமடையுமிடத்து புலிகள் மீதான அமெரிக்கத்தடை நீக்கப்படுவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன என்று அமெரிக்க அதிகாரியொருவர் கோடி காட்டியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. இது புலிகளை பேச்சுவார்த்தையில் ஊக்குவிக்கும் நோக்கம்கொண்டதாகும்.

சுமாராக ஓராண்டு காலமாக இலங்கை அரசை அமெரிக்காவும் மற்றும்மேற்குலக நாடுகளும் சமாதானத்தீர்வின்பால் விடாப்பிடியாக வற்புறுத்தி வருகின்றன. இதில் மேற்குலகம் சமாதானத்தீர்வின்பால் இரு தரப்பினர் மீதும் அழுத்தம் ,ஊக்குவிப்பு எனும் இரு அலகு ராஜதந்திரத்தை பிரயோகித்து வருகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் கடந்த கால வரலாற்றுப் போக்குக்கு புறம்பாக மேற்குலகு எனும் ஒரு புதிய சக்தியின் வருகை இணைந்துள்ளது. அப்படியென்றால் மேற்குலகின் வருகையை புரிந்துகொள்வது என்பது இப்பேச்சுவார்த்தைகளை புரிந்துகொள்வதற்கான ஒரு புதிய நிபந்தனையாகின்றது.

இவ் விவகாரத்தில் மேற்குலகினது வருகையினதும்,தேவையினதும், நிலைப்பாட்டினதும் பொருள் என்ன?இதனைப் புரிந்துகொண்டால் பேச்சுவார்த்தைகளினது ஆயுட் பலத்திற்கான ஒரு முக்கிய கூற்றினை கண்டு கொள்ளலாம்.

கிளிங்டன் நிர்வாகத்தின் பிற்காலப்பகுதியில் அமெரிக்கா ஒரு தெளிவான கொள்கையை வகுத்துக்கொண்டது. அதாவது அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பிற்கு இருபெரும் அச்சுறுத்தல்கள் இருப்பதாக தேசிய பாதுகாப்பிற்கான கிளின்டனின் உதவியாளர்களும், ஆலோசகர்களும் அடையாளம் கண்டனர். இவ்வாறானவர்களுள் காமுவெல் ஆர்.பெகெரும் ஒருவர்.

அத்தகைய அச்சுறுத்தல்களாவன.

01. மிருதேசிய அச்சுறுத்தல் (supernational threat)

02. உபதேசிய அச்சுறுத்தல் (subnational threat)

என்பனவாகும்.

தத்தமது தேசிய எல்லைகளைக் கடந்த இராணுவ -அரசியல் அபிலாசைகளைக் கொண்டிருக்கும் தலிபான், அல்கொய்தா என்பன முதலாவது வகையைச் சார்ந்தவை தென்னாசியா, மத்தியாசியா என்பன தொட்டு தென்ரஷ்யா,மத்திய கிழக்கு, கிழக்கு ஆபிரிக்கா என்பனவரை இத்தகைய 'பயங்கரவாத' குழுக்களின் தொடர்பும் படர்ச்சியும் இருப்பதாக அமெரிக்கா அடையாளம்கண்டது. இத்தகைய 'பயங்கரவாத' சக்திகளின் 'நாசகார' தாக்குதல்களிலிருந்து அமெரிக்காவின் கம்பியூட்டர் முறைமையையும் ; நுணுக்கம் நிறைந்ததும் உயிரோட்டம் மிக்கதுமான அமெரிக்க உள்கட்டுமானங்களைப்பாதுகாக்க வேண்டும் என்றும் அடையாளம் காணப்பட்டது. இது செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு முன் அடையாளம் கண்டு வகுக்கப்பட்ட திட்டமாகும். அத்துடன்'திறந்த' , 'நாகரீகமிக்க', ' சகிப்புத்தன்மை நிறைந்த ' மேற்குலக சமூகமைப்பை பாதுகாத்தல் என்பதும் இதனுடன் கூடவே அமைந்ததில் மேற்கூறிய வகையான 'பயங்கரவாதக் குழுக்கள்' ஒன்றுடன் ஒன்று இணைந்தும் , தொடர்புற்றும் உலகமயமாகி ஓர் ஆபத்தான சக்தியாக தலையெடுப்பதாகவும்அமெரிக்கா அஞ்சத்தொடங்கியுள்ளது.

இந்தவகையில்தனக்கு எதிரான ஓர் அரசை வீழ்த்த,அல்லது தனக்கு எதிரான ஓர் ஆயுதம் தாங்கிய அமைப்பை வீழ்த்த இன்னொரு குழுவை ஆயுதபாணியாக்கி வளர்த்துவிடும். முன்னாள் ஜனாதிபதி றீகனின் கோட்பாடு இறுதியில் அமெரிக்காவுக்கே பாதகமாய் திரும்பிவிடக்கூடியதாய் உள்ளதாக அனுபவபூர்வமாக அமெரிக்கா உணர்ந்துள்ள நிலையில் ஆயுதம்தாங்கிய அமைப்புக்களை இனிமேல் வளர்த்துவிடக் கூடாது என்ற முடிவுக்கு அமெரிக்கா பெருமளவு வந்துள்ளது.

அடுத்து உபதேசியவாத அச்சுறுத்தலென்பது அதாவது ஓர் அரசிலிருந்து பிரிந்து செல்வதற்காக ஆயுதம்தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவை தமிழீழப் போராட்டம் இந்த வகையைச் சார்ந்தது இதனை விளக்கமாகப் பார்ப்போம். ஓர் அரசுடன் அமெரிக்கா அரசியற் பொருளாதார உறவை வலுவாக வைத்திருக்குமிடத்து அந்த அரசின் கீழ் உள்ள உபதேசிய இனம் அரசுக்கு எதிராகப் போராடுமிடத்து அந்தப்போராடும் இனத்தின் தேவையும், கோபமும் அந்த நாட்டில் உள்ள அமெரிக்காவின் நலன்களுக்கு எதிரானதாக அமைந்து அங்குள்ள அமெரிக்க பொருளாதார, அரசியல்இலக்குகள் மீது தாக்குதல் அமையும். இங்கு அமெரிக்கா உள்நாட்டில் அல்ல, வெளிநாடுகளில் உள்ள தனது நலன்களை பாதுகாக்க வேண்டியுள்ளது. மேலும் உள்நாட்டில் அமெரிக்கா மீது ஆத்திரமடையும் ஓர் உபதேசியவாதக் 'குழு' மிகுதேசியவாதக் 'குழுக்களுடனோ'அல்லது சர்வதேச கும்பல்களுடனோ (மாபியா,போதைவஸ்துக் கடத்தல் கும்பல்கள்போன்றவை) தொடர்புகொண்டு அமெரிக்காவிற்கு எதிராகச் செயற்பட்டிட முடியும். போன்ற அச்சங்களை இப்போது கொண்டுள்ளது. இதனால் உலகளாவிய ரீதியில் ஆயுதப்போராட்டங்கள் எழாமற் பார்த்துக்கொள்ளுதல் அவசியமென அது கருதுகின்றது. இத்னால் தேசிய இனப் பிரச்சினைகளுக்குள்ளாகி மோதுண்ணும் சமூகங்கள் மத்தியில் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்க பால்கன் ஸ்த்திர ஒப்பந்தத்தின் (Balkan Stability pact) அனுபவத்தை கருத்திற்கொண்டு சர்வதேச ரீதியிலான பரிகாரங்களை விரைவில் காண வேண்டுமென அமெரிக்கத் தரப்பிற் சிந்திக்கலாயினர் அமெரிக்காவின் சிந்தனையின் படியான ' சர்வதேச ரீதியிலான பரிகாரங்கள்' (International tools) எஙபது இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது. பிராந்திய நிலைமைகளுக்கேற்ப ஒரு வகைச் சமஷ்டித் தீர்வையே அதில் சிந்திக்கிறார்கள்.

இந்த வகையில் இலங்கை அரசை அமெரிக்கா மேற்குறித்த ஒருவகைத் தீர்வுக்கும் சமாதானத்திற்கும் வற்புறுத்துகின்றது. அதே வேளை ஆயுத மோதலைக் கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் சமாதான ரீதியிலான தீர்வொன்றைக் காணுமாறும் புலிகளைக் கேட்கின்றது.

தீர்வு காணாவிட்டால் நியூயோர்க் நகரைப்போல கொழும்பு நகரைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற ரணிலின் கனவு நிறைவேற முடியாது போய்விடும். ஆதலால் ரணில் அமெரிக்காவின் திட்டங்களுக்குப் பணிவாக இவ்விவகாரத்தில் நடந்து கொள்கிறார் என்பதால் இம்முறை தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளை சிங்கள அரசால் முன்போல் ஓர் ஏமாற்று நாடகமாக்க முடியாது.

அதேவேளை புலிகள் தரப்பை எடுத்துக்கொண்டால் அவர்களும்பேச்சுவார்த்தையில் தமது ஈடுபாட்டையும் விசுவாசத்தையும் தெரிவித்து வருகின்றனர். திம்புப் பேச்சுவார்த்தைகளுக்கு புலிகள்மறுப்புத் தெரிவித்திருந்தனர்; இறுதியில்மனமின்றிக் கலந்து கொண்டனர் அதேவேளை திம்புப் பேச்சுவார்த்தைகளுக்குத் தமிழர் தரப்பில் இருந்த பல்வேறு சக்திகளிடையேயும் எதிர்ப்புகள் இருந்தன. ஆனால் ரணில்- பிரபாகரன் ஒப்பந்தத்திற்கும், பிரபாகரன்- ஹக்கீம் ஒப்பந்தத்திற்கும், தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளுக்கும் தமிழர் தரப்பில் எம்மட்டத்திலும் எதிர்ப்பில்லை.

மேலும் திம்புப் பேச்சுவார்த்தைகளுக்கு புலிகள் மறுத்தது போலன்றி தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளுக்கு முதலிற் புலிகளே அழைப்பு விடுத்திருந்தனர். விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும் அரசியல் ஆலோசகருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளுக்கான அங்குரார்ப்பண உரையில் பின்வருமாறு கூறியுள்ள தைக்கவனிப்போம்.

"கடந்த வருடக்கடைசியில் நாம் ஒரு தலைப்பட்சமாக போர்நிறுத்தம்செய்த போது புதிய அரசும் அதனை சாதகமாக ஏற்று போர் ஓய்வை அறிவித்தது. இந்தச் சூழ்நிலையிற்தான் நோர்வே அரசாங்கம் ஆக்கபூர்வமான வழிகளைக் கடைப்பிடித்தது......

"சமாதானமே எமது மக்களின் ஆழமான அபிலாசையாக இருக்கிறது"


இவ்வாறு பேச்சுவார்த்தை , சமாதானத்தீர்வு என்பவற்றிற்கான கதவை முதலிற் புலிகளே தட்டினர் என்பதால் அவர்கள் பேச்சு வார்த்தையில் மனதார ஈடுபடுகின்றனர். ஆதலால் புலிகள் தரப்பில் பேச்சுவார்த்தை முறிய இடமில்லை.

மேலும் கிழக்கு,தென்கிழக்கு ஆகிய நாடுகள் சிலவற்றிற் காணப்படுகின்ற புலிப் பொருளாதார முறைமையை இலங்கையிற் கட்டியெழுப்ப சிறிங்காவின் அரச தலைவர்கள் ஆவலுறுவதாகவும் அதற்கு 'அவர்களது அபிலாசைகளை நாம்ஆதரிக்கிறோம்' என்றும் மேற்படி அங்குரார்ப்பண உரையில் புலிகள் தெரிவித்துள்ளனர். இது அமெரிக்காவிற்கு ஓர் இனிப்பான செய்தி. எனவே அமெரிக்கா புலிகளைச் சற்று அனுசரித்து இலங்கை அரசை பேச்சுவார்த்தையின்பால் மேலும் அழுத்தும். எனவே இம்முறை பேச்சுவார்த்தையின் ஆயுள் சற்றுப்பலமானது.

# சமாதானப் பேச்சுக்கான விட்டுக்கொடுப்பாக மக்களின் அவலங்களும் நெருக்கடிகளும்

ஞாபகன்

கடந்தவாரம் வடமராட்சியில் மாணவர்கள் பொதுமக்கள் இணைந்து மேற்கொண்ட போராட்டம் சிறிலங்கா இராணுவத்தின் என்றும் விடுபடாத இராணுவ மேலாதிக்கத்தை உணர்த்துவதாக அமைந்தது. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகிவற்றைச் சூழவுள்ள இராணுவ முகாம்,




காவலரண்கள், வீதித்தடைகள் என்பன அகற்றப்பட வேண்டும் என்று கோரி மும்முனைகளில் திரண்டு அப்போராட்டம் நடந்தது.

சிறிலங்கா இராணுவ வாத சிந்தனை இப்போராட்டத்தை எதிர்கொண்டவிதம் தொடர்ந்தும் மக்களின் இயல்பு வாழ்க்கையில் சிக்கல்களை ஏற்படுத்துவதாகவே அமைந்தது. மாணவர்கள், பொது மக்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீரப் புகைக்குண்டு வீச்சுக்கள் என்பனவற்றை நடத்தி அகிம்சை வழியிலான போராட்ட த்தை உச்ச வன்முறையை நோக்கிக்கொண்டு சென்றது.

இத்தகையை போராட்டங்கள் மூலம் மாணவர்களும் பொது மக்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத் திற்கமைய திறக்கப்படாத வீதிகளை ஏற்கனவே திறந்திருந் தார்கள். அவ்வாறானதோர் வெற்றியை இதிலும் அவர்கள் ஈட்டிவிடக்கூடாதென்ற உறுதி யோடு படைத்தரப்பு இவ் விடயத்தைக் கையாண்டுள்ளது என்றே தோன்றுகின்றது.

போராட்டத்தை வன்முறைக்கு கொண்டு சென்ற பின்னர் தமிழர் தேசியக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தோடு பேசிய பருத்தித்துறை 524வது பிரிகேட் பொறுப்பதிகாரி இரண்டு நாட்களின் பின் கோரியபடி வீதிகளைத் திறப்பதாக உறுதியளித்திருந்தார். இதனைத் தொடர்ந்து மாணவர்களும் மக்களும் திறக்காவிடில் மீண்டும் மறியலில் ஈடுபட நேரிடும் என்ற நிபந்தனையில் விலகிச் சென்றிருந்தனர்

இதன்படி கடந்த 5ம் திகதி பொலிஸ்நிலையம் முன் வீதி, சுப்பர் மடம் வீதி,கல்லூரி வீதி, கடற்கரை வீதி, மின்சந்தி வீதி ஆகியன எல்லோரதும் போக்குவரத்துக்காக திறக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இரண்டாம் திகதி மறியலில் ஈடுபட்டவர்கள் கலைந்தபின் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கை அதன் மேலாதிக்க வெளிப்பாடாய் அமைந்தது.

அன்றைய தினம் யாழ்மாவட்ட சிறிலங்கா இராணுவத்தளபதி சரத்பொன்சேகா ஹாட்லிக் கல்லூரி,மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகியவற்றை மறு அறிவித்தல் வரை மூடுவதாக அறிவித்திருந்தார். மாணவர்களின் அகிம்சை வழியான போராட் டத்தை அடக்குவதற்கு இராணுவம் மேற்கொண்ட இந்த நடவடிக்கை முதலாவது அல்ல. கடந்த ஆண்டு யூலை மாதத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர் கள் மேற்கொண்ட போராட்டம் ஒன்றை தடுத்து நிறுத்த பல்கலைக்கழகத்தை திடீரென மறு அறிவித்தல் வரை மூடுவதாக அறிவித்திருந்தது.

பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதினால் அத்தகைய முடிவு எடுக்கப்பட்டதாக அன்று கூறப்பட்டது. அதே காரணத்தையே புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளபோதும் கூறியிருக்கிறது. இத்தோடு இராணுவ அடக்குமுறை முடிந்துவிடவில்லை.

அன்றைய தினம்மக்களும் பத்திரிகையாளர்கள் இருவரும் தாக்கப்பட்டதைக் கண்டித்து மறுநாள் பருத்தித்துறை ,புலோலி பகுதிகளில் கடையடைப்பு இடம்பெற்றது. இதற்கு ஒரு பழிவாங்கல் நடவடிக்கை போல அப்பகுதியில் ஏற்கனவே திறக்கப்பட்டிருந்த வீதிகளை மூடியது. கொட்டடி முதலாம் குறுக்குத் வீதி, இரண்டாம் குறுக்குவீதி என்பவற்றைத் தடைசெய்தது. அப்பகுதி மக்கள் வெளியேறவும் உள்வரவும் தடைவிதித்தது.

முதல் நாள் மறியல் போராட்டம் நடத்திய வீதியின் மூன்று நுழை வாயில்களிலும் அனுமதியின்றி வருபவர்கள் சுடப்படுவர்என்ற எச்சரிக்கையும் வாசகங்களும் எழுதப்பட்டிருந்தன. இராணுவத்தின் இந்தச் செயற்பாடுகளுக்கு பல தரப்பில் இருந்தும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மக்களின் இயல்புவாழ்க்கையை ஏற்படுத்தக்கோரும் செயற்பாடுகளை ஒடுக்க இராணுவம் கடைப்பிடிக்கும் போக்கு மீறலிலும் மீறல் என கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இதன் பின்னர் கடந்த திங்கள் முதல் பாடசாலைகளைத் திறப்பதற் காகவும் கல்லூரி வீதியை மட்டுமே வழமையான விதிமுறைகளுக்கமைய மாணவர் களுக்கு மாத்திரம் திறந்துவிடலாம் என்று படைத்தரப்புக் கூறியது.

மாணவர்களின் கற்றல், கற்பித்தல்களுக்கு உளப்பாதிப்பை ஏற்படுத்தும் இராணுவ முகாம் கள், தடைகள் என்பன அகற்றப் பட வேண்டும். என்ற முக்கிய கோரிக்கைக்கான போராட்டத்தை இந்தளவில் அமுக்கிவிடப் படைத்தரப்புச் செயற்பட்டது. ஆனாலும் மாணவர்கள், மக்கள் மத்தியில் இருந்த மாற்றமில்லாத நிலைப்பாட்டின் மத்தியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

பருத்தித்துறை படையணி தலைமையகத்தில் பாடசாலை களின் அதிபர்கள், கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்ட இராணுவத்தின் கலந்துரையாடலில் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தமுடிவு இறுக்கமான இராணுவப் போக்கையே வெளிப்படுத்தியது. எனலாம்.

குறித்த இரு பாடசாலைகளும் அதியுயர்பாதுகாப்பு வலயத்தில் இருப்பதால் பாதைகளைத் திறக்கும் விடயத்தில்எந்தவித மாற்றங்களும்செய்யமுடியாது. கல்லூரி வீதி, சுப்பர் மடம் வீதி ஆகிய்ன அதி உச்சப் பாதுகாப்பு வலயத்தில் இருக்கின்றன. அத்துடன் துறைமுகப் பாதுகாப்புக்கு இவ்வீதிகளின்தடை அவசியமாகவுள்ளது. இப்பாதையை பொதுமக்கள் பாவனைக்கு உட்படுத்த வேண்டிய தேவையும் இங்கு இல்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட இரு பாடசாலை களின் அதிபர்களும் மாணவர் களின் சுதந்திரமான கற்றல் செயற் பாட்டிற்கு இப்பாதைகள் தடையாக உள்ளன. எனவே சாதகமான நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் மாணவர்கள் போராட்ட்தில் குதிக்கும்நிலை ஏற்படலாம் எனக் கூறியதற்கு அது மாணவர்களின் விடயம். அதில் நாம் தலையிட முடியாது என ஒஸ்ரின் கூறியுள்ளார்.

ஒஸ்ரின்பெர்னாண்டோவின் கருத்துக்கள் எல்லோர் மத்தியிலும் ஏமாற்றத்தை ஏற்படுத் தியதோடு கடும் விசனத்தையும் உண்டுபண்ணியுள்ளது. பரவலாக திரும்பத் திரும்ப ஒரே வகையான கேள்விகளை அவை எழுப்பின. மக்கள் பாவனைக்கு பாதை தேவையா இல்லயா என்பதை யார் தீர்மானிப்பது? மக்களே அப்பாதைகள் திறந்துவிடப்பட வேண்டும் என்று வீதிக்கு இறங்கிய போது அவற்றைப் பாவனைக்கு உட்படுத்த வேண்டிய தேவை இங்கு இல்லை என்று அவர் கூறியிருப்பது இன்னும் இராணுவ நலன் கருதிய தீர்மானங்களே மக்களின் தேவையாக அமைய வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றதா என்பது ஒரு கேள்வி.

சாதகமான முடிவில்லாத போது போராட்டத்தில் குதிப்பது மாணவர்களின் விடயம் என்று கூறியமையானது இன்னும் இவர்களை அதற்குள் தள்ளுவதற்குத்தானா என்று கேட்க வேண்டியிருக்கிறது. இவரின் கருத்து இப்படியாக அமைய பொலிஸார் மாணவர்களை வீதிக்கு இறங்கவிடக்கூடாது என்று அதிபர்களை வலியுறுத்திக் கடிதங்களை அனுப்பியுள்ளனர். ஒலிபெருக்கி மூலமும் எச்சரிக்கிறார்கள்.

இதற்குள் ஈ.பி.டி.பி பொது இடங்களில் இருந்து படையினரை வெளியேறக்கோரி பாடசாலை மாணவர்களும் மக்களும் வீதிக்கு இழுபடுவது தேவையற்றது என்று எப்போதும் போலவே எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத் தியுள்ளது.

சமாதானப் பேச்சுக்கள் தொடங்கியுள்ள நிலையில் அவற்றை சீர்குலைப்பதாக இத்தகைய போராட்டங்கள் அமையும் என்று கூறும் இத்தகை யோரின் கருத்துக்கள் இராணுவத் தரப்பால் செய்யப்பட வேண்டிய மக்களுக்கு அவசியமான இயல்பு வாழ்க்கையை வழங்குதல் என்ற விடயத்தைக்கைவிட்டு விடுகின்றன. ஒரு வகையில் இதுவரை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி படையினரால் நிறைவேற்றப் படாதுள்ளவை எல்லாம் சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பமாகும் போது அதற்கான மக்களின் மேலதிகமான விட்டுக் கொடுப்புக் களாகவே அமையப்போகின்றன.

அப்படியானால் அவலங் களையும் நெருக்கடிகளையும் விட்டுக்கொடுப்புக்களாக சிறிலங்கா அரசுக்கும் இராணுவத் திற்கும் தமிழ் மக்களே வழங்கவேண்டும் என்பது எந்தளவு நியாயம் என்று கருதுகிறார்கள். இப்போதுள்ளதை விடவும் இன்னும் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படக் கூடாதென்ற வகையில் இரு பாடசாலை மாணவர்களும் அவலங்களுக்கும் நெருக்கடி களுக்கும் மத்தியில் கல்வியைத் தொடங்கியிருக்கிறார்கள். ■■

# கருத்துப் பகிர்வு



1995-1996 காலப்பகுதிக்குப் பின்னர் தற்போதுதான் (2002) வெள்ளிநாதத்தை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. உண்மையில் அரசியல் ரீதியான பலம் என்பதற்கு மேலாக பத்திரிகைத்துறை, மற்றும் படைப்பிலக்கியத்துறையில் மேலோங்கி நிற்பதைப் பார்க்க முடிகிறது. உண்மையில் இந்நிலை வியப்புக்குரியதே என்பதுடன் பாராட்டப்பட வேண்டிதுமாகும்.

தொடர்ந்து இதுவரை பத்து இதழ்களை வாசித்துவிட்டேன். தரம் என்பது பொருள்வாங்குவோரின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதாகும். வெள்ளிநாதம் எங்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்யும் வண்ணமே அமைந் துள்ளமை கவனிப்பிற்குரியதாகும்.

குறிப்பாக நிலாந்தனின் கட்டுரைகள் ஆழமும் விரிவும் கொண்டவை என்பதுடன் எளிமையாகவும் இருக்கின்றன. அவர் ஒரு படைப்பாளி என்பதால் கலைத்துவமும் மிளிர்கிறது.

டொக்டர் ருத்திரன் போன்ற குறிப்பிடத்தக்க சிந்தனையாளர் களின் கட்டுரைகளைத் தொடர்ந்து பிரசுரித்துவந்தால் அது மிகவும் பயன்தரக்கூடியதாக அமையும்.

பிறமுக அறிமுகம் சிரிப்பூட்டும் சிந்தனைப் பகுதி என்பதற்கு மேலாக அவற்றை வாசிக்கும்போது பாலகுமார் அவர்களின் எழுத்துக்களை நினைவு படுத்துகின்றன. இன்னுமொன்று எங்கள் இளைய தலைமுறைக்கு இவற்றை ஆவணப்படுத்தி அறிமுகப்படுத்தவும் இது உதவும்.

சிறுகதைகள், கவிதைகளைப் பொறுத்தவரையில் இடைக்கிடை தான் தரமானவற்றை வாசிக்க முடிகிறது.

ஓயாத அலைகள்-01 சித்திரத் தொடர்கதையை எழுதிவரும் ராகவனுக்கு உளமார்ந்த பாராட்டுக்கள். அவரிடமிருந்து இதுபோன்ற இன்னும் பல சித்திரத் தொடர்கதைகளை எதிர்பார்க் கின்றோம். இவை இனிவரும் காலங்களில் சரித்திரங்களாகப் பேணிவைத்திருந்து இனிவரும் தலைமுறைக்கு 'கடத்தப்படுதல் இன்றியமையாததாகின்றது.

இன்னும், இளையநாதம், சிந்தனைத் துணுக்குகள், மதவடி மயிலர், வாத்தியார் வார்த்தை, பயஸின் கேலிச்சித்திரங்கள் மற்றும் ஓவியங்கள் என்பனவும் அவற்றிற்குரிய முறையில் சிறப்பாய் அமைந்து வருகின்றமை மகிழ்ச்சிதரும் விடயமாகும்.

இதனடிப்படையில் நாங்கள் இன்னுமின்னும்காத்திரமான நம்பிக்கையூட்டும் அம்சங்களை எதிர்பார்க்கின்றோம்.

இராகவன்.உமாக்காந்தன்,
தல்லையப்புலம்,கரவெட்டி.

அன்புடன் வெள்ளிநாதமே!

வன்னியிலிருந்து வெளிவரும் நாதமே நீ தாங்கி வரும் விடயங்கள் மிகவும் அழகானதும், கனமானதுமே! அரசியல் பார்வைகள் பல கோணங்களிலும் விபரிக்கப்படுவது பாராட்டுதற்குரியது.

'ஓயாத அலைகள்' தொடர் கட்டுரையானது மிகவும் தரம் வாய்ந்ததாகவும், சண்டையை நேரில் பார்த்த மாதிரியும் உள்ளது. பிறமுக அறிமுகம் ஒவ்வொரு அரசியல்வாதிகளையும், அவர்களின் உள் உருக்களையும் விரித்துக் காட்டுகிறது. மற்றும் இலக்கியப் பகுதியில் வரும் சிறுகதைகளும் கருத்துச் செறிவுள்ளதாகவே உள்ளது. வெளிவரும் நூல்கள் பற்றிய நோக்கு கட்டாயம் வரவேண்டியதே. ஒவ்வொரு நூலும் எவ்வாறுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் அனைத்துப் பக்கங்களும் நன்றாகவேயுள்ளது. இதுபோல் நன்கு வளர்ந்து வர எனது வாழ்த்துக்கள்.

இ.அச்சுதன்,
புதுக்குடியிருப்பு.

☞ அறிவு வாய்மையை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல; தவறையும் ஆதாரமாகக் கொண்டது தான் - கார்ல் கஸ்தாவ் ஜங்



**பரீட்சைத்தாள் உங்களது கையில் கிடைத்து விட்டால், பதட்டமோ, அவசரமோ இருக்கக் கூடாது. அப்பிடியிருந்தால் அதனைத் தற்காலிகமாக இடை நிறுத்திவிட்டு, சாதாரணமாக உங்களை நிலைப்படுத்திக் கொண்டுதான் வினாத் தாள்களுக்கான விடையினை எழுத ஆரம்பிக்க வேண்டும்.**

# பரீட்சையில் விடையளிப்பது எப்படி?


பொதுவாக மாணவராகிய நீங்கள் வினாக்களுக்கு விடையளிக்கும் போது எப்படி? ஏன்? எவ்வாறு? விடையளிக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெளிவாகவும் உறுதியாகவும் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். அப்போது தான் நேர்த்தியாகவும், விளக்கமாகவும் உங்களால் வினாக்களுக்கேற்ற விடைகளைக் கொடுக்கமுடியும்.

நீங்கள் சிலவேளைகளில் மனஞ்சலித்தும், சில ஆசிரியர்களை மனங்கோணவைத்தும் இருப்பீர்கள். இது உங்களது புரிந்துணர்வற்ற தன்மையைத்தான் வெளிப்படுத்துகின்றது. "என்ன கஸ்ரப்பட்டு எழுதினாலும் இந்த வாத்திக்கு ஒழுங்காகத்திருத்தவும் தெரியாது, புள்ளி போடவும் தெரியாது, இவரையெல்லாம் யார் ஆசிரியரென்று அங்கீகரித்தார்கள்" எனக் கூறும் மாணவர்களும் உள்ளனர். அவர்கள் விடையளிப்பதில் எங்கோ, ஏதோ தவறைச் செய்துவிட்டோம் என்பதை உணரமறுப்பது தான் முக்கியமானதாகும்.

நீங்கள் வினாவுக்கு விடையளிக்கும்போது என்ன செய்கின்றீர்களோ.... ஏது செய்கின்றீர்களோ... தெரியாது. சில விடயங்களை ஒவ்வொரு மாணவனும் அறிந்திருக்க வேண்டும். இதைக் கருத்தில் கொள்ளாது உங்களது பாட்டில் விடையளிக்க முற்பட்டால் முடியுமா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நீங்கள் பரீட்சை மண்டபத்தை அண்மித்ததும் நாடி நாளமெல்லாம் கட்டுப்பாடின்றி இயங்கத் தொடங்கிவிடும். இது ஒவ்வொரு பரீட்சாத்திக்கும் இருக்கும்இயல்பான ஒரு வெளிப்பாடு தான். பரீட்சைக்கான நேரம் அறிவிக்கப்பட்டு பரீட்சைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளர் கொடுக்கத்தொடங்கியதும் மனதுக்குள்ளே பெரிய பரபரப்பு ஏற்பட்டு, பின் அமைதிகொள்வதை அனைவரும் உணர்ந்திருப்பீர்கள்.

பரீட்சைத்தாள் உங்களது கைளில் கிடைத்துவிட்டால், பதட்டமோ, அவசரமோ இருக்கக் கூடாது. அப்பிடியிருந்தால் அதனைத் தற்காலிகமாக இடை நிறுத்திவிட்டு, சாதாரணமாக உங்களை நிலைப்படுத்திக் கொண்டுதான் வினாத்தாள்களுக்கான விடையினை எழுத ஆரம்பிக்க வேண்டும். பரீட்சைத் தாள் கைக்குக் கிடைத்து விட்டது, என்ன செய்வது? எனத் தலை கால் புரியாமல் விடையளிக்க முற்படுவது உங்களது தவறு. முதலில் வினாத்தாளை முழுமையாக மனதில் பதியக் கூடியவாறு தெளிவாக வாசிக்க வேண்டும். அங்கே கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தலைத் தெளிவாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும் . உங்களுக்கு வினா புரிந்துவிட்டது, 'இதற்கு



இதுதான் சரியான விடை' என உங்களது மனம் கூறினால் ' உடனடியாக எழுத ஆரம்பித்துவிடவேண்டும்' என நினைத்தால், அதுவும் உங்களது தவறுதான்.

சரி நீங்கள் விடையளிக்க ஆரம்பித்துவிட்டால், பொதுவாக அனைவரும், விடை தெரிந்ததும்' எங்கு...? எப்படி? எழுதுகிறோம்' எனத் தெரியாமல் எழுதத் தொடங்கி விடுவார்கள். விடைஎழுத ஆரம்பிக்குமுன், சுட்டிலக்கம், பெயர், பக்க இலக்கம்' இவைகளைச் சரியாக இட்டுவிட்டீர்களா என்பதைப் பாருங்கள். 'முதல் எந்த வினாவுக்கு விடையளிக்கிறீர்கள்' என்பது உங்களுக்கு நினைவிருக்க வேண்டிய ஒன்று. இதற்கு நீங்கள் உடனடியாகச் செய்ய வேண்டியது வினா இலக்கம் இடுவதுதான். இதன்பின்புதான் விடையளிக்க ஆயத்தமாக வேண்டும். அப்படி நீங்கள் விடையை எழுதும்நோக்கில் அதனோடு ஒன்றியிருக்கும் போது, நேரம் முடிவடைந்தது கூடத் தெரியாமல் போகும் சூழ்நிலை ஏற்படும். அப்போது உங்களால் வினா இலக்கம் இட்டுக்கொடுக்க முடியாத நிலையை ஏற்க மனமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டி வரும்.

**வி.தேவபாணு**

எழுத ஆரம்பித்தால் அவசரஅவசரமாக எழுதி, எழுத்துக்களைக் குப்பையைக் கிளறி விடுவதுபோன்றுஅழகற்று எழுதுவதாலும், நீங்கள் பெறுபேற்றில் பாரிய பின்னடைவைச் சந்திக்க நேரும். சில வேளை சந்தித்தும் இருக்கலாம். 'என்ன? விடையைத்தானே? அதுவும் சரியாகத்தானே எழுதினேன்: ஆனால்,பெறுபேறு குறைந்துள்ளது' என நினைத்தால், அதில்பெரிய தவறொன்று உங்களால் விடப்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உங்களது விடைத்தாளைத் திருத்துகின்றவர்என்ன செய்வார்? நீங்கள் தெளிவாகத்திருத்தமாக எழுதாவிடின், ஒருதடவை, இரு தடவை முயலலாம்.. முடியாது போனால் அது உங்களது துர் அதிஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.அவ்வதிஷ்டம் பெறுபேற்றில் மோதிவிட்டுத்தான் நிமிர்ந்து பார்க்கும். அது நிமிரும்போது நீங்கள் தலைகுனிய வேண்டியநிலை ஏற்படும். சரி, உங்களால் அழகாக எழுத முடியவில்லையென்றால் சொற்களிற்கான இடைவெளிகளை தேவையான அளவு விட்டு எழுதிப்பாருங்கள்:அதன் தெளிவுத் தன்மை உங்களுக்கே புரியும்.

மிகமிக முக்கியமானது நேரம்தான். 'நேரம்பொன்னானது' 'போன நேரம் திரும்பிவராது' என்று எல்லாம் சொல்லுவார்கள். இப்படிப்பட்ட நேரத்தை எத்தனைபேர் மதிக்கின்றார்கள் என்றால்,மிகக் குறைவுதான். அனுபவ ரீதியாகக் கண்டிருக்கக் கூடிய உண்மை இது. ஒவ்வொரு வினாவுக்கும் எவ்வளவு நேரம் என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, பகுதி ஒன்றுதான் எல்லோருக்கும் முதலில் விடையளிக்கக் கிடைப்பது. நாம் அதனை முழுமையாக வாசிக்க வேண்டிய தேவையென்பது இங்கே மாத்திரம் தேவையற்றது. உடனடியாகவே வினாவை வாசித்து சரியான விடையினைக் கொடுக்க வேண்டியதுதான். விடை தெளிவில்லையாயின் குறித்து விட்டு, அடுத்த வினாவுக்கு ஓடுங்கள். தெரியாததோடு நின்று நேரத்தைப் போக்கினால் ஏனைய தெரிந்த வினாக்களிற்கும் விடையளிக்க முடியாமல்ப் போகலாம். ஏனோதானோ என்று விடையளிக்கக்கூடாது. 'சிறுதுளி பெருவெள்ளம்' இவற்றால் கிடைக்கும் ஒன்றிரண்டு புள்ளிகளால் மேல்நிலைப் படிப்பிற்கான சந்தர்ப்பம் கூட கைகூடிவரும்.

பகுதி இரண்டில் ஆறு வினா என வைத்துக்கொண்டால் மொத்தம் இரண்டு மணிநேரத்தில் எந்தக் கேள்விக்கு அதிகம் நேரம், எந்தக்கேள்விக்கு குறைவான நேரம் தேவையென்பதைக் கணக்கிட்டுக் கொள்வது உங்கள் கைகளில் தான் உள்ளது. உங்களுக்குக் கற்பித்த ஆசிரியரோ அல்லது சக நண்பர்களோ ஏன்? பரீட்சை மண்டப மேற்பார்வையாளரோ நேரத்திட்டமிடலை உங்களுக்குக் கூறமாட்டார். அது உங்கள் பொறுப்பென்பதை மறக்கக் கூடாது. நேரத்தைப் பாராது எழுத ஆரம்பித்த பின் நேரம் முடிவடைந்து விட்டதே எனக் கவலைப்படுவதால் போன நேரம் திரும்பி வரப்போவதில்லை...! மூன்று வினாக்களுக்குத் தான் விடையளிக்க முடிந்ததே, மீதிக்கு விடையளிக்க முடியவில்லை என வேதனைப் படுவதால் எந்தப் பயனும் கிடைக்காது. நேரத்திட்டமிடலின்மை எப்படியெல்லாம் ஒருவரை முன்னுக்குக் கொண்டு வரும், பின்னுக்குத் தள்ளும் என்பதைக் காணக் கூடியதாக உள்ளதல்லவா...?

ஒவ்வொரு வினாவுக்கும் எத்தனை புள்ளிகள் வழங்கப் படுகின்றன என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஏனென்றால், பத்துப்புள்ளிகள் வழங்கப்படும் வினாவுக்கும், பதினைந்து புள்ளிகள் வழங்கப்படும் வினாவுக்கும் ஒரே அளவிலான விடையைக் கொடுப்பதென்பது நன்றன்று. புள்ளிகளிற்கேற்றவாறு விடையளிக்க வேண்டும். அப்போது தான், உங்களின் கேள்விக்குரிய முழுப்புள்ளிகளையும் பெற்றுக் கொள்ள முடியும். இல்லாவிடின் நினைத்தது எதுவோ, நடந்ததெதுவோ ஆகத்தான் அமையும்.


நீங்கள் விடையளிக்கும் போது 'விரைவு' என்பது தேவை. 'நாங்கள், குறிக்கப்பட்ட எந்த அளவிற்காவது வாகனத்தைச் செலுத்தலாம். ஆனால், நிதானமிழக்காமல் இருந்தால் சரி' இதே போன்று தான் பரீட்சையில் நிதானமாக, விரைவாக விடை எழுதுவதால், அதிக நன்மையை உங்களால் பெறமுடியும். குறிப்பாக மீண்டும் விடைகளைப் பரிசீலிக்க முடியும். எழுத்துப் பிழைகளைத் திருத்த முடியும். தற்செயலாக மாறி இடப்பட்ட வினா இலக்கத்தைத் திருத்த முடியும். விடைத்தாள்களை ஒழுங்காக அடுக்க முடியும். இவை போன்ற நன்மைகள் இருக்கின்றன என்பதால், நீங்கள் இதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்பதை உங்களால் தெரிந்து கொள்ள முடிகிறதா?

சில வினாக்களிற்கு விடையளிக்க முடியாதென வைத்துக்கொள்வது மிகத்தவறு. நீங்கள் அந்த வினாவுக்குரிய பாட அலகை என்றோ கற்றிருக்கலாம். அல்லது அதனை ஒத்த, மாதிரி வினாத்தாள்களைக் கூட மீட்டலின் போது சந்தித்திருப்பீர்கள். ஆனால், இப்பொழுது முடியவில்லை என்ற பதட்டம் உங்களை சற்று முட்டிப் பார்க்கலாம். அதற்கு ஒரு நல்ல வழி உண்டு. என்னவென்றால், மீண்டும் மீண்டும் வினாவை வாசிப்பதன் ஊடாக அவ்வினாவை, ஆழ்மன நினைவகத்திலிருந்து, நினைவுக்குக் கொண்டுவருவதன் மூலம் ஊகித்து, சரியான விடையைத் தெரிவு செய்து கொள்ள முடியும். உங்களை ஒரு தடவை இப்படிப் பரிசீலித்துப் பார்த்தால், வெற்றி கிடைக்குமென்பதை தெரிந்து கொள்ளலாம்.

எப்படித்தான் மேற்கூறப்பட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு, விடையளிக்க முற்பட்டாலும் மொழிநடை என்பதைத்தான் கவனிக்கத் தவறி விடாதீர்கள். மொழிநடை விளங்காது விடுவது 'பாதை விலகிய புகையிரதம்' போன்றதாகி விடும்.மொழி நடை என்பது மிகவும் முக்கியமான பங்கு வகிக்கின்றது. உங்களுக்குத் தெரியும், ஒவ்வொரு எழுத்தாளனும், தனக்கென்றொரு தனிப்பாணி கொண்ட மொழி நடையைக் கையாள்வான். அதே போன்று தான் நீங்களும் விடையளிக்கும் போது முடிந்த வரை விளங்கக் கூடிய வகையில் சொந்த மொழி நடையில் எழுத வேண்டும். இது உங்களுக்கும் நல்லது. உங்களுடைய பெறுபேறு சிறப்பாக அமைவதற்கும் ஊன்றுகோலாகவும் அமையும்.

மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களையும் நீங்கள் கடைப் பிடித்திருந்தாலும், முக்கியமாக முழுமையாக விடையளிப்பதற்கு கற்றுத் தேர்ந்திருக்க வேண்டும். அப்போது தான் முழுமையாக விடையளித்து, சிறந்த பெறுபேற்றை உங்களுடைய முத்திரையாகப் பதிக்க முடியும். அதைவிட்டு 'கசடறக் கற்காது' அங்கே போய் அமர்ந்தால்' 'பரீட்சை மண்டபக் கூரையைத்' தான் நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவீர்கள்.

ஒவ்வொரு மாணவனும் விடையளிப்பது தொடர்பாக சில விடயங்களை கட்டாயம் தெரிந்து வைத்திருக்கவேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டிருப்பீர்கள். ஏற்ற வழிமுறைகளூடாக அணுகாது, எங்களுக்கேற்றவாறு விடையளிக்க முற்படுவதால் எவ்வளவு பாதிப்பை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா? சிறந்த வழிகளினூடாக பரீட்சைத்தாளை அணுகித் தரமான விடையை எழுதி, சிறந்த பெறுபேற்றை உங்களுடைய தாக்கலாம் என்பது தெளிவான ஒரு விடயமாக உங்களுக்கு இப்போது புலப்பட்டிருக்கலாம் என நம்புகிறேன்.



## உள்ளத்தை உருக்குபவை

வீதிகளில் வாகனங்களின் போக்குவரத்து அதிகரித்துக் கொண்டே போகிறது. இதற்கு பிரதான காரணங்கள் பல.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வாகனங்கள் பல்வேறு நோக்கங்களோடு வந்து போகின்றன.

இதே நேரத்தில் துவிச்சக்கர வண்டிகள் மூலம் நீண்ட தூர பிரயாணங்களை மேற்கொள்ளும் மனிதர்களும் அதிகம்.

அதிகரித்துள்ள வாகனங்களின் எண்ணிக்கையோடு சேர்த்து செப்பனிடப்படாத வீதிகளில் கிளம்பும் புழுதிப் படலமும் அதிகம்.


துவிச்சகரவண்டி, மோட்டார் சைக்கிள் என்பவற்றை பிரயாணம் மேற்கொள்ளும் வேளைகளில் எதிரில் வருகின்ற வாகன சாரதிகள் தங்களது வாகனங்களின் "கெற் லைட்டுக்களை டிம் செய்யாது " (எமது மக்களின் பேச்சு வழக்கு) அசமந்தமாக வாகனங்களை ஓட்டுகின்றனர்.

வாகனங்களின் வேகம் காரணமாக கிளம்பும் புழுதிப் படலம் ஒரு பக்கம் நிமிர்ந்து பார்க்க முடியாத அளவிற்கு கண்களைக் குத்தும் " லைட் வெளிச்சம்" இன்னொரு பக்கம் என பெரும் கஷ்டங்களையும் விபத்துக்க ளையும் சந்தித்து வருகின்றனர்.

அவலப்பட்டுப் போய் நிற்கும் பாதசாரிகளின் துன்பங்களைப் போக்க சாரதிகளால் மட்டுமே முடியும்.

வாகனச் சாரதிகள் இதனைக் கவனத்தில் கொண்டால் எத்தனை பேரின் துன்பங்களை போக்க முடியும். விபத்துக்களை தவிர்க்க முடியும்.

-வேழினி-



சிறுகதை

# ஒரு வெற்றியினுள்ளே...

த. சுகுணன்



"எனக்கு ஆறு வயசுக்குப் பிறகுதான் தங்கச்சி பிறந்தவள். நான் அப்ப... பாலர் வகுப்புத்தான். ஒவ்வொருநாளும் பள்ளிக் கூடத்தாலே வீட்டுக்கு வரேக்கை, தங்கச்சி நித்திரையெண்டால் பக்கத்திலையே இருந்திடுவன், நித்திரையாலை எழும்பி என்னைப் பாத்தபிறகுதான் நான் சாப்பிடவே தொடங்குவேன். அதுவரைக்கும் பட்டினிதான். ஏனோ தெரியாது அப்பிடிச் செய்யிறதிலை எனக்கு ஒரு சந்தோஷம் அப்பவே இருந்தது"

மதியவன், இருபத்தினான்கு மணித்தியாலங்களுக்கு முன்னர் கூறிய வார்த்தைகளை உள்ளம் நடுங்கப் பலதடவைகள் அவன் விரும்பாத போதிலும் கூட பிறைசூடியின் .மனம் எண்ணிப்பார்த்து அவனோடு விளையாடிக் கொண்டிருந்தது.!

தன் சக பெண் போராளிகளை 'வாடா, போடா, டேய்' என்று ஆண்பாலாக்கி அழைப்பதன் ரகசியம் தங்கையில் கொண்ட பாசத்தின் அத்திவாரத்திலிருந்தே எழுப்பப்பட்டிருக்கின்றது என்பது எவ்வளவு மகிழ்வைப் பிறைசூடிக்குப் பெற்றுக் கொண்டிருந்ததோ அதைவிடப் பன்மடங்கு வேதனையை அது இப்போது கொடுத்துக் கொண்டிருந்தது.

"நித்திரையாலை எழுப்பிறது, பேஸ்ற் பிறஸ் குடுக்கிறது, குளிக்கவாக்கிறது ரீ, சாப்பாடு குடுக்கிறது....... உடுப்புகள் அயன் பண்ணுறது... இப்பிடியே... இரவிலை படுக்கை விரிக்கிறது வரைக்கும் எல்லாமே நான்தான் செய்யவேணும்! இரவிலை நித்திரை முழிச்சுப் படிக்கிறதைக் கூட என்னாலை தாங்கேலாது.! பிறை அவள் என்னை அண்ணனாப் பாக்கேல்ல அம்மாவாத்தான் பாத்தவள். நானும் அப்பிடித்தான் பிறை"

விழிகள் மலர உற்சாகமாய்த் தொடங்கிக் கண்ணீரோடு மதியவன் என்றோ ஒருநாள் சொல்லியது, பிறைசூடிக்குப் இப்போது நெஞ்சுக்குள் வலித்தது.

"உன்ர பிள்ளை அவன்ரை தங்கச்சியை விட்டுட்டு நிக்கமாட்டான் கெதியாய் வீட்டை வந்துடுவான் எண்டுதான் அம்மாவுக்கு எல்லாரும் ஆறுதல் சொன்னவையாம். தங்கச்சி எனக்குப் போட்ட கடிதத்திலை எழுதியிருந்தவள். நான் இயக்கத்துக்கு வந்ததே அவள் நல்லா வாழவேணும் எண்டதற்காகத்தானெண்டு பாவம் ஒருத்தருக்கும் தெரியாது தானே!"

"பிறை, அவரவரை அவரவர்தான் பாதுகாக்க வேணும். எங்கடை மண்ணிலை எத்தினை தியாகங்கள்! எத்தினை பெற்றோர் பிள்ளையளை இழந்துட்டு இருக்கினம். அந்த தியாகங்களுக்கும், அர்ப்பணிப் புகளுக்கும் மேலை ஏறிநிண்டு என்னாலை வாழேலாது பிறை! நாளைக்கு எங்கட மண்ணிலை என்ர தங்கச்சியும் தலைநிமித்தி வாழ வேணும் எண்டா எங்கட வீட்டிலையும் ஒரு போராளி வேணும் பிறை இல்லையெண்டா வாழுறதை விட சாகிறது மேல்"

மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான் பரம்பரை என்பார்களே! அந்தப் பரம்பரைக்குச் சொந்தமானவர்கள் யார் என்பதை எங்கள் மண் அவ்வப் போது ஞாபகமூட்டிக் கொண்டுதான் இருக்கிறது. தங்கைக்குப் பாதுகாப்பும், கௌரவமான வாழ்வும் எப்போதும் இருக்க வேண்டுமென்பதற்காக தன் உயிரைக்கூடத் தியாகம் செய்ய நினைத்த மதியவனை நினைக்கப் பிறைசூடிக்குப் பெருமையாக இருந்தது. அதுவே இப்போது 'வேதனைக்கும்' களம் அமைத்து விட்டது.

வாழ்ந்து பார்த்துப் புறந்தள்ளுவதை விட, அந்த வாழ்வின் சுகங்களை நுகர்ந்து கூடப் பாராமல் அந்த வாழ்வைப் புறந்தள்ளி தான் சேர்ந்த இனத்துக்காக உயிர்விடுவதென்பது சாதாரணமான விடயமல்ல. அது ஒரு புனிதமான துறவறம். எங்கள் மண்ணில் அழியாச் சின்னங்களாக மடிந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் அந்தவகையான புனிதத் துறவிகள் தான். இவர்கள் எல்லோருமே "ரெட்" வெட்டும், "அப்பாஸ்" ஜீன்சும் பொருந்தக் கூடிய வயதில்தான் இந்தத் துறவிகள் ஆனார்கள். இதமான மாலைப் பொழுதில் ஏன் போகிறாய், எங்கே போகின்றாய் என்ற கேள்விகளுக்கிடமில்லாமல், அடையாள அட்டையை எடுத்துவிட்டோமா என்று ஒன்றுக்கு ஆயிரம் தடவை உறுதி செய்து செல்ல வேண்டிய நிலையில்லாமல், சோதனைச் சாவடிகளில் இறங்கி ஏறுவது எப்படியானது என்பதை உணரும் சூழல் ஏற்படாமல் புதுக்குடியிருப்பு ரவுண்பக்கமோ, விசுவமடுச் சந்திப்பக்கமோ ஒரு குட்டி'மூஸ்' போய் வரக்கூடிய வயதில்தான் இவர்கள் இந்தத் துறவறத்தினுள் புகுந்து கொண்டார்கள்.

பகல், இரவு வேறுபாடு இவர்களுக்குத் தெரியாது. ஓய்வு என்பது இவர்களுக்குக் கல்லறைகளில்தான் கிடைக்கக் கூடும், காடு மேடுகள் முட்கள், புதர்கள் இவர்களின் நாளாந்த நடைபாதைகள். கணுக்கால் நீர்தானே இறங்கிச் செல்வோம் என்றெண்ணி இறங்க அது பல்கிப் பெருகிக் காட்டாறாகிப் பாயும் சமயங்களில், உடல் முழுதும் கொண்ட சுடுகலன்களின் சுமையோடு எதிர்நீச்சல் போட்டுக் கரைசேர்ந்து, நீரில் நனைந்த ரொட்டித் துண்டுகளைப் பிழிந்து உலர வைத்துச் சுவைத்து உண்ட கதைகளை, அவர்கள் கடந்து வந்த பாதைகளிலுள்ள பறவைகள், மரங்கள், பாறைகளுக்குப் பேசும் சக்தியிருந்தால் அவை கண்ணீர் கசியக் கூறிக்கொள்ளும்.

இன்னும், இன்னும் ஏராளமானவற்றைச் சந்தித்து நாட்கணக்கில் நடந்து பெரியதொரு வெற்றிக்காக அவர்கள் எதிரிகளைச் சந்திக்கக் காத்திருந்த பொழுது... எந்தவாயால்

"இயக்கத்துக்கு வந்ததுக்கு இன்னும் தங்கச்சியை நான் காணேல்லை பிறை" என்று சொன்னானோ அந்த வாய்ச் சொல்லின் ஏக்கத்தை நிறை வேற்றுவோமோ என்று யார் நினைத்தார்களோ அவனது தங்கையை அதே களத்தில் கண்டேயாக வேண்டுமென்று என்ன நிர்ப்பந்தம் இருந்ததோ?

வெங்காயம் உரித்துக் கண்கள் எரிவதைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாமல், தங்கையை வெங்காயம் உரிக்கச் சொன்ன தாயுடனேயே சண்டை பிடிக்கின்ற மதியவன், கொடியதான அந்தப் போர்க்களத்தில் அதே தங்கையைக் கண்டபோது

"கண்ணா...! நீ எங்கையடா... எப்பிடியடா இங்கை..." இவ்வளவைத்தான் அவன் வாய் உச்சரித்தது. அது அதிர்ச்சியால் வெளிவந்ததா? இல்லைத் தவிப்பால் எழுந்ததா? அவற்றை யெல்லாம் தாண்டிவிட்ட உணர்வலைகளால் எழுப்பப்பட்டதா? உயிரைக் கொடுத்து நேசித்த ஒரேயொரு குலக்கொழுந்தை சமர்க்களத்தில் சந்திப்பதால் எழுகின்ற உணர்வுகளை வார்த்தைகளுக்குள்ளும், எழுத்துக்களுக் குள்ளும் அடக்குவது என்பது முடியாத காரியம். அநுபவித்துப் பார்த்தாலும் கூட அதே உணர்வின் தன்மையை அறிவது என்பது முழுக்க முழுக்கச் சாத்தியமானதல்ல.

"நானும் இந்தச் சண்டைக்குத் தானண்ணா... உங்களைச் சந்திப்பனெண்டு நான் கொஞ்சம் கூட நினைக்கேல்லையண்ணா... எவ்வளவு சந்தோஷமாக் கிடக்கு..."

அவள் உற்சாகமாகக் கூறி அண்ணனைக் கண்ட சந்தோஷத்தை வெளிப்படுத்திய காட்சிகளும், பின்னர், அவள் தன் அணியோடு களத்தை நோக்கி சென்றதும் மதியவன் துடித்த காட்சிகளும் பிறைசூடியின் கண்களைக் குளமாக்கியது. அவனை அறியாமலேயே அவனது கைகள் கண்களைத் துடைத்துக் கொண்டன. அவளை எப்படியாவது மீண்டும் ஒரு தடவை சண்டை தொடங்க முன்னர் சந்தித்தேயாக வேண்டுமென்று அடம்பிடித்த மதியவானனை

" பொறுமையாய் இரு மதி... இப்ப என்னண்டு மச்சான் சந்திக்கிறது... அங்கை பாரடா எல்லாரும் வெளிக்கிட்டுட்டாங்கள்... சண்டை முடிய சந்திப்பம் மச்சான்... வெளிக்கிடு நேரமாச்சடா"

என்றுதான் அப்போது தேற்றியிருந்தான்! ஆனால் இப்போது என்ன சொல்லப் போகின்றான்.

"சண்டை முடியப் பாக்கலாமெண்டாயேடா... யாரையடா பாக்கிறது... ஆரோடையடா பேசுகிறது பிறை சொல்லண்டா... தங்காவைப் பேசச் சொல்லடா... என்னோட என்ன கோவம் எண்டு கேட்டுச் சொல்லடா... முகத்தைக் கூடக் பாக்க முடியாமக் கிடக்கேயடா..." இனி, அவளின் வித்துடல் பேழைமேல்ப் புரண்டு மதியவன் இப்படித்தான் கதறப்போறான்.

"பிறை ஆருக்காவடா நான் இனி உயிரோடை இருக்கவேணும் தடி அடிச்சாக்கூடத் துடிச்சுப் போவனேயடா... நெஞ்சிலை குண்டு பாஞ்சிருக்கேயடா எப்பிடித் துடிச்சிருப்பானடா... ஐஞ்சு வருசமடா என்ரை உயிரை நான் கண்டு ஐஞ்சு வருசம்... ஏன்ரா எனக்கிந்தக் கொடுமை சொல்லடா பிறை... திறக்கச் சொல்லடா பிறை பெட்டியைத் திறக்கச் சொல்லடா... நான் அவளைப் பாக்க வேணுமடா பிறை திறக்கச் சொல்லடா..."

பிறைசூடியைப் பிடித்து உலுக்கி உலுக்கி மதியவன் இப்படித்தானே கதறப் போகின்றான். மதியவனுக்கு ஆறுதல் வார்த்தைகளைப் பிறைசூடியால் தேடமுடியவில்லை.

"மதியவனை யாராவது பாருங்களேன்... எவராவது முடிந்தால் அவனைத் தேற்றமாட்டீர்களா..." என்று கதறவேண்டும் போலப் பிறைசூடிக்கு இருந்தது. இனி இது நடக்கத்தான் போகிறது. இனியோசித்துப் பயனில்லை. எல்லாம் தான் நடந்து விட்டதே.

'மதி, உன்ரை செல்வம் மூடிய பெட்டிக்குள்ளை திறக்கமுடியாமல் படுத்திருக்கிறானடா' என்று



பிறைசூடி மதியவனுக்குச் சொல்லித்தானாக வேண்டும், அதன் பிறகு மதியவன் துடிதுடித்து துன்பப்படுவதையும், சகித்துத் தானாக வேண்டும் என்று பிறைசூடி நினைத்துக் கொண்டது அவன் வைத்திருந்த தொலைத் தொடர்புக் கருவியில் ரகு பேசும் வரைக்கும் மட்டும்தான்!

மதியவனை எப்படித் தேற்றப் போகிறோமோ என்று கலங்கியவனுக்கு, இப்போது அந்தத் தேவை இல்லாமல் ஆக்கப்பட்டிருந்தது.

"பிறை... மதி... எங்களெல்லாரையும் விட்டுட்டுப் போட்டானடா..." ரகு பேசினான்.

எங்கோ வெடித்த வெடியோசை பிறைசூடியின் காதுகளைச் செவிடாக்கியது. இது வெளியில் வெடித்ததா இல்லையேல் அவன் மனதுக்குள் வெடித்ததா பிறைசூடியால் உணர முடியவில்லை.

வரும்போது ஒரே தாய் வயிற்றில் வந்து போகும் போது ஒரே தாய் மண்ணுக்குள் ஒரே நேரத்தில் போக வேண்டும் என்பது இவர்களது சகோதர பாசமா? இல்லையேல் அந்தச் சகோதரத்தோடு சேர்ந்து விட்ட தாய் நாட்டுப்பற்றா... இப்போது பிறைசூடிக்கு எல்லாமே இருண்டு விட்டது போன்று இருந்தது.

இடையிடையே கேட்ட எதிர்ப்பில்லாத வேட்டொலிகளும், வாகனங்களின் இரைச்சல்கள் ஆயுதங்களை அள்ளிச் செல்கின்றவர்களின் ஆரவாரங்களும், உற்சாகமான உரையாடல்களும் அந்தக்களம் வீழ்ந்து விட்டதை, மீட்கப்பட்டு விட்டதை தெளிவுபடுத்திக் கொண்டிருந்தது.

ஒன்று மூடியபடியும், இன்னொன்று திறந்து விட்டபடியும், கம்பீரமான புலிச்சின்னங்கள் போர்த்தப்பட்டிருக்க மௌனித்து துயில் கொள்ளப் பெற்றெடுத்தவள் புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்த காட்சிகளும், வளர்த்தவர் கைகட்டி வாய்விட்டுச் சொல்லிச் சொல்லிக் கதறிய கோலங்களும் ஊரே கலங்கிக் கண்ணீர்விட நடந்தேறிய அந்த இரு பிறப்புக்களினதும் இறுதிப் பிரியாவிடையும் பிறைசூடியின் மனதில் ஐந்து வருடங்களுக்குப் பின்னரும் ஆறாத ரணமாக இருந்தது!.

'சாவு எல்லாருக்கும் வரும்தம்பி... இப்ப எனக்குக் கொள்ளி வைக்கக் கூட ஒருத்தரும் இல்லை... என்ரை பிள்ளையள் பாம்பு கடிச்சோ பல்லி விழுந்தோ சகேல்லை... அதுகள்... தேசத்துக்காக... அதுவும் ஒண்டா உயிரைக் குடுத்திருக்குதுகள் இதைவிடப் பெத்தவன் எனக்கு வேறென்ன பெருமை வந்திடப் போகுது..."

எந்தக்கைகலால்ச் சோறூட்டிச் சீராட்டி வளர்த்தாரோ? எந்தக் கைகளால்த் தன் பேரப்பிள்ளைகளை ஆரத்தழுவி ஆனந்தப்பட வேண்டுமென்ற கற்பனைகளோடு வாழ்ந்தாரோ, என்றோ ஒரு நாளைக்காவது என் செல்வங்களை என்னோடு சேர்த்துவிடு என்று எந்தக் கைகளை எடுத்துத் தெய்வத்தை வேண்டினாரோ அதே கைகளால் அவரது செல்வங்களுக்கு உரித்து மண் போட்டு நிமிர்ந்து பிறைசூடியின் தோளில்சாய்ந்து கண்ணீர் விட்டுக் கதறிக் கதறி அந்தப் புனிதர்களைப் பெற்றவர் சொன்ன வார்த்தைகளைப் பிறைசூடி இப்போது ஐந்து வருடங்களுக்குப் பின்னர், எந்தக் களம், அவர்களைப் பலியெடுத்ததோ அதே களத்தில் நின்று நினைத்துப் பார்த்துக் கொண்டான்.

அது இப்போது போர்க்களமல்ல. சுதந்திரக்காற்றைச் சுவாசிக்கும் மீட்கப்பட்ட பிரதேசம்! களனிகள் விளைய, ஆ நிரைகள் மேய, கடல் அன்னைமடியில் மீனவர்கள் தவழ்ந்து வர எல்லாமே செழிப்பாகிப் புதுப் பொலிவுடன் பூத்துக் குலுங்கியது அந்தப் பிரதேசம்.

பிறைசூடி அந்த இடத்தில் நின்று கொண்டு மதியவனை, அவன் தங்கையை நினைத்துப் பார்க்கிறான். அந்த மீட்புச் சமரில் விதையாகிப் போனவர்களை எண்ணிப்பார்க்கிறான் அந்தப் புண்ணியவான்களைப் பெற்றுத்தந்த பெருமைக் குரியவர்களை பணிவோடு நினைத்துப் பார்க்கிறான். கூடவே ஐந்தாண்டுகளுக்கு முன்னர் நாங்கள் தலை வைத்துக் கூடப் பார்க்க முடியாமல் இருந்த இடத்தில் இப்போதுள்ள மகிழ்வைப் பாக்கிறான், நிறைவைப் பாக்கிறான். மனம் சோகத்துக் குள்ளும் ஒரு நிறைவைக் காண் கிறது.

"எங்கட எல்லா இடமும், இப்படி ஒரு மகிழ்ச்சியை, நிறைவைப் பெறும், ஏனெண்டா நீங்கள் எல்லாரும் காரணமில்லாமல் சாகேல்லை... அர்த்தத்தோட ஆகுதியாயிருக் கிறியள்... உங்கட அம்மா அப்பா அநுபவிக்கிற தெல்லாம் அந்த நிறைவுக்காக, மகிழ்ச்சிக்காகக் கொடுக்கப்படுகிற விலைகள்".

தனக்குள்ளே நிறைந்துள்ள அந்த உறவுகளோடு பிறைசூடி பேசிக் கொண்டு கடற்கரைவழியே நடக்கத் தொடங்கினான். அவன் அதிகநேரம் எங்கேயும் நிற்கமுடியாது. ஏனெனில் அவனுக்கும், அவனைப் போன்றவர்களுக்கும் அடுத்த களம் காத்துக் கிடக்கின்றது!

****

## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

இரணைமடு குளத்து பாசனத்துக்குரிய உறுதிக்காணி LB 2-D5 காணி LOT 41A வயலுடன் மேட்டுக்காணி 12 ஏக்கர் (கரடிப்போக்குச் சந்தியில் இருந்து 1KM தூரத்தில்) விற்பனைக்குண்டு தொடர்புக்கு: சாந்தன் C/O அறிவமுது பொத்தகசாலை, யாழ்சாலை, கிளிநொச்சி. (2462)

### சுரேஷ் பல் கட்டும் நிலையம்

மல்லாவி, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் 6 வருடகாலமாக இயங்கி வந்த சுரேஷ் பல் கட்டும் நிலையம் தற்போது சங்கர் கிளினிக் கிளிநொச்சி 25.09.02, 26.09.02 ஆகிய திகதிகளில் பல் கட்டுதல், கிளிப்போடுதல் சிறந்த முறையில் உடன் செய்து கொள்ளலாம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். (2467)

### யாழ் அதிரடி வெளியீடு

O/L 2002 மாணவர்களிற்கான

**வணிகக்கல்வியும் கணக்கீடும்**

* முற்றிலும் எதிர்பார்க்கும் 100 பயிற்சிக் கணக்குகள்

ஆக்கம். த.தனேந்திரன்
B.Com.(Hons)M.M.Spl, H.N. Dip In. Acc

LOGIC

2002 வினா மாற்றத்திற்கு அமைவாக முற்றிலும் எதிர் பார்க்கும் வினா உட்பட தயார் செய்யப்பட்ட

**விஞ்ஞானிகளும் கொள்கைகளும்**

By.P.கமல் - B.A.
(Cey) Spl.TRD.Com.

**20 பிரதிகளே இங்கு**

வன்னியில் சகல அறிவமுது புத்தகசாலை
வவுனியாவில் - கவிதா புத்தகசாலை.

(2464)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - மன்னார்

வழக்கிலக்கம்:-98/02
தன்மை:- மணநீக்கம்

சி.அந்தோனிப்பிள்ளை
கரடிக்குன்று அம்மன் கோயிலடி நாச்சிக்குடா (வழக்காளி)
-எதிர்-
அந்தோனிப்பிள்ளை மேரிஜெனிற்றா
கரடிக்குன்று நாச்சிக்குடா (எதிராளி)

இடைக்காலத்தீர்வை

இந்த 2002ம் ஆண்டு 08ம் மாதம் 23ம் நாள் இவ்வழக்கின் வழக்காளியும் அவரது சட்டத்தரணியும் சமுகமாயிருக்க இம்மன்றின் நீதியாளர் திரு. சி. தில்லை அவர்கள் முன்னிலையில் மன்றின் திறந்த அமர்வில் வழங்கப்பட்ட தொடர் சட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் அமைந்த ஒருமுகத்தீர்ப்பின்படி, எதிராளியானவர் 21-06-2002 அன்று ஈழநாதம் பத்திரிகையின் வெள்ளிநாத இதழில் பகிரங்கமாகப் பிரசுரிக்கப்பட்ட பகிரங்க அறிவித்தலுக்கமைய தான் நேரடியாகவோ அல்லது தனது நிலையில் சட்டப்படியான அக்கறையுடையோர் ஊடாகவோ மன்றில் தோன்றி எவ்விதமான சட்ட நடவடிக்கைகளையும் உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளாமையால் வழக்காளியின் கோரிக்கையை ஒருமுக விளக்கத்தின் அடிப்படையில் ஏற்று 1987ம் ஆண்டு வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் ஊரறிய இடம்பெற்ற திருமண உறவை இரத்துச்செய்து வழக்காளியும் எதிராளியும் திருமணத்திற்கு முன்பிருந்த சட்ட நிலையை அடைகின்றார்கள் என வெளிப்படுத்தி இவ்விடைக்காலத்தீர்வை பதியப்படுகின்றது.

இந்த 2002ம் ஆண்டு 09ம் மாதம் 03ம் நாள்

வரைந்தவர்
திரு. இரா.சரவணபவானந்தன்
வழக்காளியின் சட்டத்தரணி, பூனகரி.

திரு. சி. தில்லை,
மாவட்ட நீதியாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று, மன்னார்.

(2466)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - மன்னார்.

வழக்கிலக்கம்:- 98/02
தன்மை:- மணநீக்கம்

சி.அந்தோனிப்பிள்ளை
கரடிக்குன்று அம்மன் கோயிலடி நாச்சிக்குடா (வழக்காளி)
-எதிர்-
அந்தோனிப்பிள்ளை மேரிஜெனிற்றா
கரடிக்குன்று நாச்சிக்குடா (எதிராளி)

பகிரங்க அறிவித்தல்

மேற்படி எதிராளிக்கு,

இவ்வழக்கின் வழக்காளியானவர் எதிராளியான உமக்கு எதிராக தனக்கும் உமக்கும் இடையிலான திருமண உறவை இரத்துச் செய்யுமாறு கோரி மணநீக்க வழக்கை 2002-05-11 அன்று மன்றில் தாக்கல் செய்த போது மன்று இவ்வழக்குத் தொடர்பான வழக்கறிக்கைப் பிரதியை உமக்கான அழைப்பாணையுடன் சேர்ப்பிக்க நடவடிக்கை எடுத்து 2002-06-06 அன்று இவ்வழக்கைக் கூப்பிட்ட போது எதிராளியான நீர் மேற்படி முகவரியில் இல்லை என்று முறைநிறைவேற்றுநரின் அறிக்கை மூலம் உறுதி செய்யப்பட்டதால் மன்று, நீர் இவ்வழக்கில் தோன்றும் வகையில் பகிரங்க அறிவித்தல் பிறப்பித்து அப்பகிரங்க அறிவித்தல் 2002-06-21 அன்றைய நாள் ஈழநாதத்தின் வெள்ளிநாத இதழில் பிரசுரமாகியும், குறிப்பிட்ட நாட்களுக்குள் நீர் நேரடியாகவோ உமது நிலையில் சட்டப்படியான அக்கறையுடையோர் ஊடாகவோ மன்றில் தோன்றி எவ்விதமான சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமையினால் மன்று இவ்வழக்கை 2002-07-18 அன்று கூப்பிட்டு ஒருமுக விளக்கத்திற்கு தவணையிட்டு 2002-08-01 அன்று ஒருமுகவிளக்கம் இடம்பெற்று அதன் அடிப்படையில் 2002-08-23 மன்றினால் வழங்கப்பட்ட ஒருமுகத்தீர்ப்பின்படி வரையப்பட்ட இடைக்காலத் தீர்வையின் பிரதி இத்துடன் இணைத்து இப்பகிரங்க அறிவித்தலுடன் உமக்கு பகிரங்கப்படுத்தப்படுகின்றது. எனவே இவ்இடைக்காலத்தீர்வை தொடர்பில் உமக்கு ஆட்சேபனையிருப்பின் அல்லது இத்தீர்வையை முற்றான தீர்வையாக்க முடியாது என்பதற்கு காரணம் இருப்பின் இப்பகிரங்க அறிவித்தல், இடைக்காலத்தீர்வை என்பன வெளிப்படுத்தப்பட்ட தினத்தில் இருந்து 03 மாத காலத்திற்குள் மன்றில் தோன்றித் தெரிவிக்குமாறு இவ்வழக்கின் தன்மையைக் கருதி சட்டப்படி உமக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. தவறின் இவ்இடைக் காலத்தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதை உமக்கு இப்பகிரங்க அறிவித்தல் ஊடாக அறியத்தருகின்றோம்.

வரைவு
திரு. இரா. சரவணபவானந்தன்.
வழக்காளியின் சட்டத்தரணி, பூனகரி.

மன்றின் கட்டளைப்படி
அ. கேதீஸ்வரன்,
உப பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று, மன்னார்.

(2465)

## அழகன் ஓப்செற் பதிப்பகம்

வன்னி மண்ணில் உங்கள் சகல விதமான அச்சுப் பதிப்புக்களை

**தரமான முறையில் கணனி முறையில் குறித்த தவணையில்**

செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே பதிப்பகம்
அழகன் ஓப்செற் பதிப்பகம்
யாழ். சாலை,கிளிநொச்சி

## வாடகைக்கு விடுவோருக்கான அறிவித்தல்

**தொலைக்காட்சிப்பெட்டி, வீடியோ, டெக் மின்பிறப்பாக்கி என்பவற்றை வாடகைக்கு வழங்கும் போது திரைப்பட வெளியீட்டுப் பிரிவில் பதிவு செய்து அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும். இவ்வனுமதியைத் திரைப்பட வெளியீட்டுப் பிரிவின் தொடர்பகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது**

திரைப்பட வெளியீட்டுப் பிரிவு,
நடுவப் பணியகம்,
கிளிநொச்சி.

(2463)

## ஓராண்டு நினைவு நாளில்

தாயின் மடியில்
13
05
1978



தாயக மண்ணில்
23
09
2001

## கடற்புலி - மேஜர் - திருமலை

**உருத்திரசிங்கம் - ரவிநந்தன், ஏழாலை வடக்கு, யாழ்.**

பகையழிக்கப் படகேறி பவனி வந்தவன்
பார்போற்றும் கடற்புலிகள் அணியில் நின்றவன்
அலைகடலே வாழ்க்கையென அணைத்துக் கொண்டவன்
அழுகுதமிழ் மண்ணுக்காய் உயிர் கொடுத்தவன்.

எரிமலையாய் இவன் உணர்வு எழுந்து நின்றது
இவன் பெயரோ எதிரிகளை நடுங்க வைத்தது
திருமலையாய் தலைநகரின் பெயர் சுமந்தவன்
தேசத்தை நேசித்து உயிர் துறந்தவன்.

தமிழீழக் கடலெங்கும் தடம் பதித்தவன்
தலைவனது ஆணையினை முடித்து நின்றவன்
கடலேறி வந்த பகை அழித்து நின்றவன்
கடற்புலிகள் சேனையிலே புகழ் பதித்தவன்
ஏழாலை மண்ணுக்குப் புகழ் கொடுத்தவன்
ரவிநந்தனாய் இருந்து புலியாகிச் சென்றவன் - தான்
வாழாமல் நாட்டுக்காய் உயிர் கொடுத்தவன்
வாழும் அவன் நாமம் எக்காலம் வரைக்கும்.

*இன்றைய நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.*

இல.740. யோகபுரம்.
மல்லாவி.

குடும்பத்தினர்.

(2402)

## 1ஆம் குறுக்குத் தெருவில் அமைந்த

**பருத்தித்துறை**
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்க புதிய கட்டடத் தொகுதி**

# திறப்பு விழா

**எமது சங்கத்தின் நடுவப்பணியகம், களஞ்சியம், லொறித் தரிப்பிடம் என்பன**

**எதிர்வரும் 25.09.2002ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு**

**தலைவர் சி.வி.கே. சிவஞானம் அவர்களால்**

(யாழ். மாவட்ட வி. நூ. கூ. ச. சமாசம்)

**திறந்து வைக்கப்படவுள்ளது.**

சங்க அங்கத்தவர்கள்,பொதுமக்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

**பணிப்பாளர்களும், பணியாளர்களும்**
**பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்.**

(சி-6761)

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை




துன்னாலை வடக்கு- புலோலி, பருத்தித்துறை

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் : 20.09.2002






## நாடிவருவோர்க்கெல்லாம் வாரிவழங்கிடும் வல்லிபுர மாயவன்

பருத்தித்துறைப் பிரதேசத்தின் வல்லிபுரப் பகுதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயமானது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மிகப் பழமை வாய்ந்த வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றாகும். பருத்தித்துறை ~ மருதங்கேணி வீதியின் கிழக்குத்திசையின் பரந்த வெளிப் பகுதியையொட்டி அமைந்துள்ளது இவ்வாலயம்.

அலைகள் ஆர்ப்பரிக்கும் பாக்குநீரிணை ஓரத்திலே நர்த்தனந்தனாக எழுந்தருளி மக்கட் கெல்லாம் அருளாட்சி செய்து, மாய விந்தைகளால் அவர்களைக் கட்டி, அவர்கள் திருநாமம் இத்தலத்தில் உள்ள ஒரு குளத்திலிருந்து எடுக்கப்படுவதான சிறப்பும் இத்தலத்திற்கு உண்டு.

1981ம் ஆண்டில் 71 அடி உயரத்துக்கு ஏழு நிலை மாடங்களுடன் கூடிய இராஜகோபுரம் நிறுவப் பட்டது. அதிலுள்ள சிலைகளும், சிற்பங்களும் தல வரலாற்றைச் சுட்டி நிற்கின்றன. கோபுர தரிசனம் கோடி புண்ணியம். காத்தற் கடவுளாம் கண்ணனின் சந்நிதியில் கோபுர தரிசனம் கிடைக்க யாமும் நீவிரும் பெரும் பேறு பெற்றுள்ளோம். வாஹயர் கோபுரத்திற்கு உட்புறமாக அதனுடன் போட்டியிட்டபடி மாபெரும் வசந்த



முழுப்பேற்றினையடைய அருள்பாலிக்கும் வல்லிபுரமாயவனாக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் குடிகொண்டுள்ளார். இவ்வாலயம் வரலாற்றுப் பெருமை மிக்கது. பல தசாப்தங்களாக வளர்ந்து அருள் சொரிந்துவரும் இவ்வாலயம் இன்று பூரண பொலிவு பெற்றுத் தெய்வீகம் கமழ்ந்து கொண்டிருக்கின்றது

சக்கரத்தை மூலக்கருவறையில் வைத்துத்தாபித்து வழிபடும் ஒரே யொரு தலம் என்னும் சிறப்பு இவ்வாலயத்திற்குண்டு. இதன் அமைப்பு இந்தியாவில் உள்ள ஸ்ரீரங்கம் அரங்கநாதர் ஆலய அமைப்பை ஒத்திருக்கின்றது.பெருமானின் தசாவதாரங்களுள் ஒன்றாகிய மச்ச அவதாரம் இங்கு நிகழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது. தலவிசேடமும், மூர்த்தி விசேடமும் , விசேடமான தீர்த்தத்திற் குரிய அமைவிடமும் பொருந்தப் பெற்று மூர்த்தியும் தலமும், தீர்த்தமும் சிறப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வைகஷ்ணவ சின்னங்களில் ஒன்றான மண்டபம் எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளது. அலை எனத் திரளும் அடியவர்கள் ஒருங்கே இருந்து மாயவனின் பூஜை நிகழ்வுகளில் கலந்து அருள் பெற அம்மண்டபம் பேருதவியாகவுள்ளது.

எழில் கொஞ்சும் இவ்வாலயத்திற்கு நாடிவருவோர் வாடி வதங்காமல் கோடி நன்மைகளை வாரிவழங்கிடும் ஆயர்பாடிக் கண்ணன் திருப்பாற் கடலருகே சக்கரத் தாழ்வாராக வீற்றிருந்து தன் நல் லடியார்களைக் காத்தருள்கின்றான். இவர் எமது கண்கண்ட தெய்வம். சித்திரபாநு வருடம் புரட்டாதி மாதம் 04 ஆம் நாள் (20.09. 2002) சித்திரத் தேரில் எழுந்தருளி கேட்டவர்க்குக் கேட்டபடி வாழ்வுநல்கும் "கீதை சொன்ன கண்ணன்" நம் எல்லோர்க்கும் அருள்பாலிப்பாராக.

மலராக்கம் : காரையூரான்

## வினைதீர்ப்பான் வெண்ணெய் உண்ட நாயகன்

வல்லிபுர நகராளும் மாயவன்—கிழக்கே
வந்துவிளையாடும் அலை அருகில்; தெய்வ
நல்லருள் தந்தெமைக்காத்திடுவான்—தனை
நாடுவோர் நோய்நொடி தீர்த்திடுவான்; கெடு
வல்லமையுள்ளவர் திமிரழிப்பான்—வாழும்
வலிமையற்றவர் இடர்களைவான்; என்றும்
நல்லதைச் செய்யும் தன் அடியவர்க்கு—அன்பன்
நலமுடன் இறையருள் கொடுத்திடுவான்.

****

கண்ணனை மனதுள் நினைப்பவர் வாழ்வில்—எழும்
கஷ்டங்கள் யாவும் கலையும்; தூய
எண்ணமதோடு அவன் இருப்பிடம் நோக்கில்—சூழ்
இருள் நீங்கி-நல்லொளி பரவும்; திரள்
வெண்ணெயை உண்ட நாயகன் அருள் என்றும்—சோதனை
விளைகின்ற நேரத்தில் தெரியும்; தன்
கண்ணிமைபோல வரும் பக்தரைக்காக்கும்—நீலக்
கண்ணனை உலகென்றும் அறியும்.

~ அலெக்ஸ்பாண்டியன்.

புல்லாங்குழல் இசைக்கும் பரந்தாமனின் பொங்கும் அருள் இன்று எல்லோர்க்கும் கிடைத்திடப் பிரார்த்திக்கின்றோம்.



உங்கள் எண்ணம் போல்
கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்!



முத்துமாரி நகைமாடம்

78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வன்னியில் நாச்சிக்குடாச்சந்தியில் செயற்பட்டு வந்த எமது நிறுவனம் தற்போது பெயர் மாற்றத்துடன் யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்றது. (சி.6776)



புதுப்பொலிவுடன் மின்னும்
அழகிய தங்க நகைகளைப் பெற்றிட
நங்கையர் என்றும் நாடுமிடம்



சிறி கருமாரி நகையகம்

177-D, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


முன்னர் கிளிநொச்சியில் இயங்கி வந்த எமது நிறுவனம் தற்போது யாழ்ப்பாணத்தில் சேவையாற்றுகிறது. (சி.6777)

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை

துன்னாலை வடக்கு- புலோலி, பருத்தித்துறை

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் : 20.09.2002



வெண்ணெய் உண்ட கண்ணன்; மேலும்
வீரம் தர வேண்டும்; எம்மை வீழ்த்திடாது காத்து
வெற்றி அருள வேண்டும்.

## ஆ.மு.சு.மணி

அடைவு பிடிப்பகம்

உங்கள் நம்பிக்கைக்கு உத்தரவாதமளிக்கின்றோம்.

முதன்மைச்சாலை, (சி-6762) கிளிநொச்சி.

---

கவசநாயகனாம் கண்ணனின்
இன்றைய தேர்த்திருநாளில்
தேசமெங்கும் இறையருள் பல்கிப் பெருகட்டும்

வன்னி மாவட்டத்திற்கான
பன்ரா, கொக்கோ கோலா, ஸ்பரைட்,
போற்லோ, லயன் கிறீம், லயன் இன்ஜிபியர்
ஏக விநியோகஸ்தர்கள்

## கோபி என்ரபிறைஸ்சஸ்

முதன்மைச்சாலை, (சி-6763) கிளிநொச்சி.

---

786



கோகுலத்து நாயகன் — எழும்
கொடுந்துன்பம் தீர்ப்பான்; இரு
கரம் கூப்பித் தொழுதுவரின் — அவன்
கோடியருள் தருவான்.



## ஆர்.பி(B) பஸ் ஆசனப் பதிவகம்

(அரச அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனம்)

15, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

நவீன சந்தை,
வைரவர் கோவில் அருகாமை,
யாழ்ப்பாணம்.

- பல வருடகால அனுபவமிக்க யாழ்—கொழும்பு, திருமலை, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கான பஸ்,வான் சேவைகளைத் திறம்பட நடாத்தி வருபவர்கள்.
- சுற்றுலா செல்லும் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கு விசேட சலுகைக் கட்டணம்

(சி-6764)

---

அடியார் துயர் அகல வேண்டும், கண்ணா!
இங்கு அடிமை நிலை மாற வேண்டும்.
சாந்தி, அமைதி நிலவ வேண்டும்.
சந்தோசம் எங்கும் மலர வேண்டும்.

DSI, RANPA பாதணிகளை கொழும்பு விலையில் வழங்கும்
யாழ்ப்பாண ஏக விநியோகஸ்தர்கள்



## சுப்ப ஷூஸ்



75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வியாபாரிகள் விசேட கழிவில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-6765)

---

வல்லிபுர நகரினிலே —தேரில்
வலம்வரும் நாயகனே!
எல்லையில்லாத வரமளிப்பாய்
பல தொல்லையில் இருந்து எமைக் காப்பாய்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான

இலங்கை உரம் (லக்பொஹொர)

விற்பனையில் ஏக உரிமை பெற்றவர்கள்

## வே. கணேசமூர்த்தி

353, முதன்மைச்சாலை, (சி-6766) கிளிநொச்சி.

---

அகரம் முதல், என்றும்
அழியாப் பொருளாய் விளங்கும்
வல்லிபுரக் கண்ணனின்
கடைக்கண் பார்வை கிடைக்க
வேண்டுவோர்.



---

அனைத்து அச்சு வேலைகளுக்கும் எம்மை நாடுங்கள்

## தமிழ்ப் பூங்கா மல்ரி ஓப்செற் பதிப்பகம்

மற்றும் உங்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களைப் பெற்றிட

## தமிழ்ப் பூங்கா புத்தகசாலை

முதன்மைச்சாலை, நெல்லியடி, கரவெட்டி.

(சி-6775)

---

உங்கள் தேவைகள் எதுவாகினும் நிறைவேற்றக் காத்திருக்கின்றோம்

## லவ்லி கூல்பார்
## லவ்லி ஒலி, ஒளி பதிவுக்கூடம்
## லவ்லி "பஸ்" ஆசனப்பதிவகம்

முதன்மைச்சாலை, (சி-6774) நெல்லியடி.

---

நம்பிக்கை நாணயம் உத்தரவாதத்துடன் அழகிய தங்கநகைகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## வைஷ்ணவி நகைப் பூங்கா

முதன்மைச்சாலை, (சி-6773) நெல்லியடி.

---

தலைவர், பணியாளர்கள்

## வடமராட்சி வடக்கு
## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

பருத்தித்துறை

(சி-6772)

---

உங்கள் இல்லங்களை அலங்கரிக்கும் பாவின் வகைகளை
மலிவான விலையில் வழங்குபவர்கள்

## விண்மீன் அங்காடி

முதன்மைச்சாலை, (சி-6771) நெல்லியடி.

---

தலைவர், பணியாளர்கள்

## புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

எமது சங்கத்தில் செயற்பட்டுவந்த வாகனசுத்திகரிப்பு நிலையம் புனரமைக்கப்பட்டு மீண்டும் வெகு விரைவில் சிறப்பான முறையில் செயற்படவுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம். (சி-6770)

---

அழகிற்கு அழகுசெய்யும்
அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு

## நதியா நகை மாடம்

இல.02, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-6769) T.P: 021- 2223479

---

மின்சாரப் பொருட்கள், கட்டடப் பொருட்கள்
பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

## ராஜன் எலெற்றிக்கல்ஸ்

முதன்மைச்சாலை, பருத்தித்துறை.

(சி-6768)

---

ரீவி, றேடியோ, வீடியோ, ஓடியோ கசட்டுக்கள்
பெற்றுக் கொள்ள எம்மை அணுகுங்கள்

## கீறோ சிறப்பு பல்பொருள் அங்காடி

முதன்மைச்சாலை, நெல்லியடி, கரவெட்டி.

எம்மிடம் தரமான வீடியோ படப்பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-6767)

# 1ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
17 - 07 - 1975



தாயக மண்ணில்
23 - 09 - 2001

கடற்கரும்புலி மேஜர் நல்முத்து/சிவாகரன்
(கார்த்திகேசு செந்தில்குமார்)
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

உடலினை அழித்து மா வீரரானாய்
உலகமே வியந்திடும் மா ஜோதியானாய்
விழிகளில் எழுதிடும் மா பேருமானாய்
படித்திட நாளும் மா பாயிரமாய்
நல்ல முத்தெனும் மா சொத்தாய்
திக்கும் நாத மா வெற்றியாய்
எப்போதும் நெஞ்சில் மா வீரனாய்
ஒளிபரப்பும் நல்லமுத்துவே
உன்போன்றோர் ஈகத்தால் காண்போம் தமிழீழத்தாய்.

இவருடன் காவியமான கப்டன் புலிமகளையும் இந்நாளில் நினைவுகூருவதோடு எதிர்வரும் 23.09.2002 (திங்கட்கிழமை) எமது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு நிறைவு நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர். நண்பர்கள், சக போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த. முகவரி:
கா.பாஸ்கரன், கா.விக்னேஸ்வரன்,
நிவேதினி வெதுப்பகம், முல்லைத்தீவு. (2212) குடும்பத்தினர்.

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் வடக்கு, கிழக்கு மாகாண தொழில்துறை திணைக்களமும்

## இணைந்து கிராம அபிவிருத்தித் திணைக்களம், விவசாயத் திணைக்களம், விலங்கு வேளாண்மைத் திணைக்களம், உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஆகியவற்றின் பங்களிப்புடன் நடாத்தும்

# "வாழ்வாதாரம்"

கண்காட்சியானது இன்று கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் (வட்டக்கச்சி செல்லும் சந்திக்கு அருகில்) மு.ப 10.00மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கைத்தறி, கைப்பணிப் பொருள் உற்பத்தியாளர்கள், கைத்தொழில் முயற்சியாளர்கள் இதில் தங்கள் பொருட்களை கண்காட்சிக்கு வைக்கவுள்ளனர்.

உள்ளூர் வளத்தை சிறப்பாக பயன்படுத்தவும், மனித வளத்தை மேம்படுத்தவும் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யவும் இக் கண்காட்சி உதவுகின்றது. இக்கண்காட்சி கைத்தறிப் பிரிவு, கைப்பணிப்பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு, விவசாயப்பிரிவு, தொழில் முயற்சியாளர் பிரிவு, உள்ளூர் உற்பத்தியாளர் பிரிவு என பல்வேறு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.

கணினி தகவல் தொழில்நுட்ப அறிவை மாணவர்களிடையே உட்புகுத்தவும், மாணவர்கள் கூடுதலான நன்மை பெறவும் கணினி கண்காட்சி தினமும் 2.00மணி தொடக்கம் 4.00மணிவரை மாணவர்கட்கு இடம்பெறவுள்ளது. பி.ப 4.00மணி தொடக்கம் இரவு 9.00மணிவரை பொதுமக்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதுடன் தங்களுக்குத் தேவையான கைத்தறி, கைப்பணிப் பொருட்களையும் கொள்வனவு செய்ய முடியும்.

**இக்கண்காட்சியானது இன்று தொடக்கம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் பி.ப.2.00மணி தொடக்கம் இரவு 9.00மணி வரை நடைபெறும்.**

(சீ7377)

# புத்தக கண்ணோட்டம்

நூல் : அக்கினிச் சிறகுகள்
[சுயசரிதம்]

எழுதியவர்:
ஏ.பி.ஜே. அப்துல் கலாம்
ஆங்கிலத்தில்: அருண் திவாரி
தமிழில்: மு.சிவலிங்கம்




தற்போது இந்தியாவின் சனாதிபதியாகவும், முன்னாள் இந்திய தலைமை விஞ்ஞானியாகவும் இருந்த, இருக்கின்ற அப்துல் கலாம் அவர்களின் சுயசரிதம்தான் ''அக்கினிச் சிறகுகள்'' சுயசரிதங்கள் எப்போதுமே சுவையானவைமட்டும் அல்ல. சிலரின் வாழ்க்கையில் பெரும் திருப்புமுனையாகவும் அமைந்து விடுவதும் மறுப்பதற்கில்லை.

அவ்வாறெல்லாம் அக்கினிச் சிறகுகள் மற்றவர்களுக்கு உபயோகப்படுத்துவதற்கு அப்பால், இந்தச் சிறகுகள் மூலம் தன்னையொரு முஸ்லிம் தமிழனாக மட்டுமல்லாமல் தன்னையொரு தமிழனாகவும் காட்டிக்கொள்ள முற்படுகின்றார். அது மட்டுமல்லாமல் அவர் தமிழ்மீது மிகுந்த பற்றுக்கொண்டவரும்கூட. (அவருக்குத் தமிழ்பேசத் தெரியாது என்பது வேறுவிடயம்) அவருக்குப் பிடித்த நூல் திருக்குறள், அவருக்குப் பிடித்த பெரியார் திருவள்ளுவர் என்பதில் இருந்து இது தெளிவு. எனினும், அவர் தான் தமிழ்நாட்டின் மிகவும் பின்தங்கிய ஒரு பகுதியில் பிறந்த முஸ்லிம் தமிழன் என்பதை இன்னும் மனதில் கொண்டிருக்கிறாரா அல்லது, தான் ஒரு இந்தியத் தமிழன் என்று மட்டும் நினைத்துக் கொண்டிருக்கிறாரா என்பது புரிய முடியாத வினா என்பதோடு நிறுத்திக்கொண்டு சிறகுகளுக்குள் நுழைவோம்.

சராசரி மனிதர்கள் தங்களின் தாழ்வு மனப்பாண்மையை போக்கி தங்களுக்குள் ஓர் இலட்சியத் தீயை என்றும், அணையாத சுடர் தீபமாய் ஏற்றி வைப்பவர்களாயின் அவர்கள் தங்கள் முன்னுள்ள மலை போன்ற தடைகளை யெல்லாம்தாண்டி விண்மீன்கள் மத்தியில் பிரகாசிக்கும் வெண்ணிலாப்போல தங்களை ஆக்கிக்கொள்ளலாம் என்பதைத் தான் அப்துல் கலாம் அவர்களின் ''அக்கினிச் சிறகுகள்'' மிகவும் தத்ருபமாக சமுகத்திற்கு எடுத்துச் சொல்லும் செய்தியாகும்.

''உடல் ரீதியான உணர்வு பூர்வமான தளைகளில் இருந்து ஒருவர் தம்மை விடுவித்துக் கொள்ளும்போதுஅவருடைய விடுதலை யாத்திரை ஆரம்பமாகிறது'' என்ற சொல்வீச்சுடன் கலாமின் வாழ்க்கைப் பரிமாணங்களை விபரிக்க ஆரம்பிக்கும் இந் நூலானது எமது சமுகத்திற்கு தற்போதைய சூழ்நிலையின் பொருத்தமானது மட்டுமல்ல அவசியமானதும்கூட. ஏனெனில், எம் சமுகங்களிடையே இந்த உணர்ச்சித் தளைகளானது மிகவும் வருத்தப்படவேண்டிய அளவில் பரந்து பட்டுக் காணப்படுகின்றது. ஒவ்வொரு தனி மனிதனதும் லட்சியங்கள் மிகவும் குறுகிய வட்டத்தில் சுயநலநோக்குடன் காணப் படுவதுடன் தவறானதும் நேர்த்தியற்றதும் ஆழுமை அற்றதுமான சமுகமொன்று உருவாகிவருவதை நாம் காண்கின்றோம்.

இந்நூலானது திறமைமிக்க மனிதனாக ஒருவன் தன்னை கட்டியயெழுப்பிக்கொள்ள அல்லது அவ்வாறு தன்னை மாற்றி அமைத்துக்கொள்ள பேருதவி புரிகிறது. சாதாரண பத்திரிகை வியாபாரியின் உதவியாளனாக தனது தொழிலைஆரம்பித்த அப்துல் கலாம் இந்திய ஏவுகணைத் திட்டத்தின் தலைமை விஞ்ஞானியாகி பின்னர் அத்திட்டத்தின் தந்தையாகத் தன்னை ஆக்கிக்கொள்ளும் வரை சந்தித்த சவால்கள் என்பது எண்ணிலடங்காதவை. எனினும், அவர் தன்னை நோக்கி காலதேவனால் ஏவி விடப்பட்ட சவால்களிற்கு எதிராக எதிர் நீச்சல் போட்டார் இறுதியில் அவர் காலத்திடம் வெற்றி பெற்றார். வழமையாக தனது காலடியில் மனிதர்களை கரைக்கும் காலம் கலாமின் காலடியில் தன்னை சிறைப்படுத்திக் கொண்டு விட்டது.

இந்நூலை கற்பதன் மூலம்ஒருதனி மனிதனானவன் சமுகத்தின் உயர்ந்த நிலை அடைய வேண்டுமாயின் எவ்வாறான தொரு மனப் பக்குவத்தைப் பெறவேண்டும். எப்படிப்பட்ட பிரச்சினை களையும் மனிதர்களால் எதிர் கொள்ள முடியும் என்பவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

அப்துல்கலாம் இந்திய ஏவுகணைத்திட்டத்தின் தந்தை யாகுவதற்கு அவரிடம் காணப் பட்ட தொழில்நுட்ப ஆற்றல் மட்டும் காரணமல்ல. அவரிடம் அளவுக்கதிகமான பொறுமை காணப்பட்டது. அனைவரையும் அணைத்துச் செல்லும் திறமை மிகுந்திருந்தது. சுருக்கமாகச் சொல்வதானால் பலதரப்பட்ட திறமைகளையும், முற்றிலும் வேறுபட்ட குண இயல்புகளையும் கொண்டிருந்த விஞ்ஞானிகள் குடும்பத்தை ஒரே புள்ளியை நோக்கி அழைத்துச் செல்லும் திறமை அபரிதமாய் இருந்தது.

முயற்சி உள்ளவனின் முன்னேற்றத்திற்கு பக்கபலமாய் இருக்கக் கூடிய இந்நூலை எம் ஒரே சமுகம்கற்றறிவதன் மூலம் எதிர்காலத்தில்தமது குறிக்கேளை பயனுள்ளதாக்கிக் கொள்ளலாம். தமது வாழ்க்கை யையும் அவ்வாறு மாற்றி அமைத்துக்கொண்டு நம்பிக்கையான எதிர்காலத்தை நோக்கி தங்களை நகர்த்திச் செல்லலாம். ஏனெனில், இந்நூலானது 'அப்துல் கலாம்' என்ற தனியொரு மனிதனின் சுயசரிதத்தோடு மட்டும் நின்றுவிட வில்லை. அதனைக் கற்பவர்களுக்கு ஓர் உன்னத வழிகாட்டியாக: உற்ற நண்பனாக அமைந்துள்ளதால் சிறுமைத் தனங்களால் சிதறுண்டு போயுள்ள எமது இளைய தலைமுறை யானது ஆற்றலும், ஆளுமையும் நிரம்பப்பெற்ற தலைமுறையாய் சிறந்த சிற்பிகளாய் ஓர் தலைமையின் கீழ் கற்பனா சிந்தனையுடன் பணியாற்றக் கூடியவர்களாய் உயர்த்திக் கொள்ள உறுதுணை புரியும்.

தனது இளைய பராயத்தில் அறிவுப் பசியால் துடித்துக் கொண்டிருந்த அப்துல்கலாம் அந்தப் பசியை இந்நூலைக் கற்பவர்களுக்கு ஏற்படுத்த முற்பட்டுள்ளார். ''எல்லா நல்ல மனிதர்களும் உலகிற்கு தகுந்தபடியாகத் தங்களை மாற்றி அமைத்துக்கொள்கிறார்கள். ஒருசிலர் முரண்பட்ட மனிதர்கள் மட்டுமே தங்களுக்கு ஏற்றபடி உலகை மாற்றி அமைத்துக் கொள்வதில் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். உலகின் எல்லாவித முன்னேற்றங்களும் இப்படிப்பட்ட முரண்பட்ட நபர்களையும் அவர்களின் புதுமைக் கண்ணோட்டத்தையும் நம்பியிருக்கின்றன. என்ற கலாமின் உணர்வின் வரிகள் மூலம் இது புலனாகிறது. இதன்மூலம் அவர் தொழில் நுட்பத்துறையில் மட்டுமல்ல, ஆன்மீக ரீதியிலும் ஓர் உன்னதத்தை உலகிற்கு காட்டியுள்ளார் என்பது தெளிவாகிறது.

சற்று அளவுக்கதிகமாக மதங்களின் பெருமை பேசப்பட்டிருப்பதுடன் ஏனோ தெரியவில்லை சில இறுக்கமான இடங்களில் கலாம் ஒளித்து விளையாடியிருப்பது உண்மைதான். உதாரணமாக கலாம் தான் தலைமை விஞ்ஞானி ஆவதற்கு முன்னர், தான் தன்னைச் சூழ இருந்தோரிடம் பல எதிர்ப்புக்களை சந்தித்ததாக கூறியுள்ளதுடன் தனது தாய் நாட்டில் குறிப்பாக தனது பிறந்த ஊரில்கூட பல இலட்சக்கணக்கான மக்கள் ஒரு வேளை உணவுக்குக்கூட பரிதவிக்கும் நிலையில் இந்தியாவை ஒரு இராணுவ ரீதியிலான வல்லமைக்கு கட்டியெழுப்ப முற்பட்டமை இந்தியாவின் ஒரு பக்கச்சார் புத்தன்மை போன்றவற்றில் அவருடைய நோக்கங்கள் புதிராகவே உள்ளன.

எது எப்படியிருப்பினும் கலாம் கூறியதுபோல ''காலத்தின் மணற்பரப்பில் காலடிச் சுவடுகளை பதிக்க விரும்பினால்'' ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுள் ஓர் இலட்சியத்தை அக்கினிச்சுவாலையாக அணையாமல் சுடர்விட்டு பிரகாசிக்கச் செய்ய வேண்டும். இந்த நூலை கற்பதன் மூலம் இதனைநாம் புரிந்து கொள்ளலாம்.

அத்துடன் தமிழகத்தின் தமிழ்கொழிக்கும் தென்பகுதியில் பிறந்த அப்துல்கலாமாய் இந்நூலைத் தமிழில் எழுத முடியாமல் போனது வேதனையே. அந்தவகையில் இந் நூலைத்தமிழில் மொழிபெயர்த்த திரு மு. சிவலிங்கம் அவர்கள் தமிழ் இளைய சந்ததிக்குக் கிடைத்த வரப்பிரசாதமே.

குறிப்பு: இந்நூல் அப்துல் கலாமின்நெருங்கிய நண்பர்களில் ஒருவரான அருன்திவாதி என்ற இந்திக்காரரால் ஆங்கிலத்தில் முதலில் எழுதப்பட்டது.

குணாளன்
○○○



# படுவான் கரைக்கு

-வ.ஐ.ச. ஜெயபாலன்

காடு தேனிக்கு
வயல் மீண்டும்
நீராடும் பெண்கள் தழுவ
பாடிப் பறிந்தோடும் நீருக்கு
மான் வற்றல் காயும் முற்றமோ
பாட்டி மடி தொற்றி
பண்டைக் கதைகள்
மகிழும் மதளைகட்கு
கோடிப் புறம்
கடந்து செல்வோர்
தாம் என்றோ தென்கிழக்கில் கேட்ட
கவி நினைந்து புன்னகைக்க
தலைமறையும் காதலற்க்கு
அதிகாலை பாற்கோலம் கீறி
பசு நடந்த தெருவோ
முன்னர் அரங்கத்தில்
அரிச்சுனனே நாண
வில்லைசைத்த பாட்டன் வியக்க
வடமோடிக் கூத்தோடு
துள்ளல் நடையில்
திரிகின்ற விடலைகட்கு
யாரும் துணியாத
என் தாய் மண்ணின் நெடுங்கதவாம்
வா கரையின் வெண்மணலோ
அடம்பன் கொடி பரப்பும்
மரகத மணிகளின் மேல்
பவளம் பறிக்க
ஓடும் சிறாருக்கு
இந்த அமைதியின் எல்லாப் புகழும்
வடமுனைய கடந்து சென்று
வன்னியிலே மயிர் பிடுங்க
வந்தோர் தலை பிடுங்கி
கல்லான உன் மாவீரக் குழந்தைகட்கும்
நாளையோ
அகதி முகாம்களிலே
மீண்டும் உறுகாமம் காண..
ஏங்கிக் கிடப்பவரை உசுப்பும்
''மன்னிப்பீர்
இன்னும் தயக்கமேன்
இது உங்களதும் தாய்மண்
கேளாமல் வாருங்கள்''
என்கின்ற மந்திரச் சொல்
மனசு நிறைய
வைத்திருக்கும் நாயகர்க்கு
காவியமோ
எல்லா நெருப்பும் அணைத்து
சாம்பரிலே புத்துயிர்க்கும்
என் படுவான் கரை தாய்க்கு.


❖

# இரவா பகலா?



யோ.சேனன்

விடிகின்ற் பொழுதெல்லாம் சோகத்தில்
அழகிய நட்சத்திரங்களை – வட்ட
வான் நிலாவை – இலை
விளிம்புகளில் வடிகின்ற பனித்துளியை
எல்லாம் இல்லாமல் செய்து – தன்
வெப்பத்தால் மனிதனை வாட்ட நினைக்கின்ற
இந்த சூரியனை விரும்பவா அல்லது
வெறுக்கவா
பாருங்கள்
இந்த விடிகாலையை
பூத்துக் குலுங்க காத்திருக்கின்ற – அந்த
பூவின் மொட்டு இதழ்களை
விரியச்செய்கின்றது
கூடுகளில் செல்ல மொழி பேசும் அந்த
குருவிக் கூட்டங்களின் சங்கீதத்திலும்
ஓய்வுக்காக வீடுகளில் உறங்கும் – அந்த
உழைப்பாழியின் இன்று பகலும்
வேலை செய்தால் ஐம்பது நூறை
சந்தோசத்தையும்
வெள்ளை உடைகளில் கூட்டம்
கூட்டமாக பாடசாலை போகின்ற
மாணவர்களையும் – ஆகா
எது அருமை பகலா இரவா
ஏதாவது ஒரு காலை எனக்காக
இரண்டு ஒன்றாக சங்கமிக்கின்ற
ஒரு காலை விடியாதா?



# இளையநாதம்

## குட்டிக்கதை


## வெள்ளம் வரும் முன்...

குமாரும் கண்ணனும் நல்ல நண்பர்கள். என்றாலும் குமாரை விட கண்ணன் படிப்பில் கெட்டிக்காரன். ஆனாலும் குமார் படிப்பில் குறைவு தான். கண்ணன் என்ன விடயம் என்றாலும் முன் கூட்டியே தயார்ப் படுத்திக் கொள்வான். குமார் என்ன தான் இருந்தாலும் இழுத்தடித்து விட்டு கடைசி நிமிசத்திலேயே செய்வான்.

இவர்கள் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தனர். பரீட்சைக்குரிய நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது. கண்ணனோ பரீட்சைக்குரிய தயார்ப்படுத்தலில் இருந்தான். குமாரின் பெற்றோர் அவனைப்படி படி என முன்கூட்டியே கூறினாலும் எதையும் அவசரத்தில் கடைசி நேரம் செய்து பழகி விட்டதனால் பரீட்சைக்கு இன்னும் இரண்டு நாள் இருக்குத்தானே என அலட்சியமாகவே இருந்து விட்டான்.

இப்படியே நாட்களும் ஓடி நாளைக்கு பரீட்சை என்று தெரிந்தும் இரவுக்குப் படிக்கலாம் என படிப்பதைத் தள்ளிப் போட்டான். அன்று இரவு அவர் களின் உறவினர் கள் நீண்ட நாட் களுக்குப் பின் வந்திருந்தனர். குமாரின் வயதை யொத்த சிறுவர் களும் வந்திருந் தனர். கேட்கவா வேண்டும் குமாருக்கு பரீட்சைக்குப் படிக்க வேண்டும் என்பதை மறந்து விளையாடிக் கொண்டிருந்தான். அவனின் தாயார் பரீட்சையை நினைவு படுத்திய போது நாளை விடிந்ததும் எழும்பிப் படிக் கிறேன் என்று விட்டு அவர் களுடன் தன் விளையாட்டுக்களைத் தொடர்ந்தான்.

இரவு நேரம் போனதே தெரியாது



விளையாடிவிட்டு உறங்கப் போனார்கள்- விடியவும் நேரம் செல்லவே குமாரால் எழும்ப முடிந்தது. படிப்பதற்கு வாய்ப்பே இல்லாது போய்விட வந்தவர்கள் புறப்பட ஆயத்தமானார்கள். அவர்களை வழியனுப்பிவிட்டு பாடசாலைக்கு வெளிக்கிடவும் நேரம் சரியாக இருந்தது.

சரி கண்ணன் வந்திருப்பான் அவனிடம் சில கேள்விக்கான விடைகளைக் கேட்டுவிட்டு எழுதலாம் என வந்தான் குமார். வந்தவனுக்கு ஒரே ஏமாற்றம் தான் காத்திருந்தது. அங்கு கண்ணன் பரீட்சை தொடங்கும் நேரம் பார்த்து ஐந்து நிமிடம் இருக்கவே வந்தான்.

பரீட்சைக்குரிய நேரம் வந்து எல்லோரும் மண்டபத்திற்குள் இருந்தனர். ஆசிரியர் வினாத் தாள்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார். மாணவர்கள் எல்லோரும் தங்கள் வினாக்களுக்குரிய விடைகளை எழுத ஆரம்பித்தனர். ஆனால் குமாருக்கு என்ன விடை எழுதுவது என்று தெரியாது யோசித்துக் கொண்டிருந்தான். இந்த முறை நான் பாஸ் பண்ணமுடியாது அப்பாவிடம் நல்லா அடி வாங்கப்போகிறேன். வகுப்பாசிரியரின் முகத்தில் எவ்வாறு முழிக்கப் போகிறேன் என வேதனையுடன் விடை எழுதாது வினாத் தாள்களை ஆசிரியரிடம் கொடுத்து விட்டு வெளியில் வந்தான்.

பரீட்சை எழுதிவிட்டு வந்த கண்ணன் டேய் குமார் "வெள்ளம் வரும் முன் அணைகட்ட வேண்டும்"என்ற தலைப் பில் வந்த கட்டுரையை நான் நல்லா எழுதினேன். "நீ"? என்று கேள்வியோடு நிறுத்தினான்.

கண்ணன் கேட்ட கேள்வியின் அர்த்தத்தை புரிஞ்சுகொண்ட குமார் என்னைப் படிபடி என்ற பெற்றோரின் சொல்லையும் கேட்காது நாளைக்குப் படிக்கலாம் என அலட்சியமாக இருந்ததன் பயன் இப்போது புரிந்து கொண்டேன் என எண்ணிக் கொண்டு வீடு நோக்கி நடந்தான்.

*–சிந்து*

# ரதனும் சுதனும்



சுதன்:- பூமியின் எடை எவ்வளவு? அதனை எப்படி எடை போடுவது

ரதன்:- பூமியின் எடை 6ஒ$10^{24}$ கிலோகிராம். 6 என்ற எண்ணை எழுதி அதன் பின்னால் 24 பூச்சியங்களைச் சேர்த்தால் பூமியின் எடை கிலோ கிராமில் கிடைக்கும்.

புவிசர்ப்பு விசையிலிருந்து பூமியின் எடை கணக்கிடப்படுகிறது. இரு பொருட்களுக்கு இடையே யுள்ள விசை. அவற்றின் பொருண் மைக்கு நேர் விகிதத்திலும் இடைப் பட்ட தொலைவின் வர்க்கத்திற்கு எதிர் விகிதத்திலும் இருக்கும்.

சூரியன் பூமியை ஈர்ப்பதால், பூமி சூரியனைச் சுற்றி வருகிறது. பூமி சூரியனைச் சுற்றி வருவதற்கு எடுத்துக் கொள்ளும் கால அளவி லிருந்து பூமிக்கும் சூரியனுக்கும் .இடையிலுள்ள ஈர்ப்பு விசையை அளவிடலாம். இந்த விசையிலிருந்து பூமியின் எடை கணக்கிடப்படுகின்றது.

# மாலை



மாலைப் பொழுது வந்தது
வையம் ஒளியை இழந்தது
காலை இரைச்சல் ஒழிந்தது
கடமை எங்கும் முடிந்தது

பூக்கள் கண்ணை மூடின
புவியைப் பார்க்க மறுத்தன
ஈக்கள் பறந்து ஓடின
இரைச்சல்யாவும் மறைந்தன

பறவை கூடு அடைந்தது
பார்ப்புக் குணவு கொடுத்தது
இறகைக் கோதி மகிழ்தது
இன்பப் பெருக்கில் திளைத்தது

ஆடு மாடு அடங்கின
காகம் கோழி முடங்கின
வீடு வாசல் இருண்டன
வீதி இருளில் கிடந்தன

மக்கள் வீடு சேர்ந்தனர்
மனமும் உடலும் சோர்ந்தன
தத்தம் கடமை முடித்தனர்
தக்க ஓய்வு பெற்றனர்.

கொக்கட்டர் கிளார்

# "கணிதம்" பிரியமா? பயமா?




கணித பாடம் என்பது எமது வாழ்க்கையின் ஆரம்பம் முதல் முடிவுவரை தேவையானது. சிலருக்கு கணிதம் என்றால் பயம்.சிலருக்கு கணிதம் என்றால் பிரியம். கணிதம் பயப்படும் ஒரு தேவையற்ற பாடமல்ல. இது எமது வாழ்க்கையின் உயிர்நாடி. கணிதத்தில் சுட்டிகள், மடக்கைகள். தேற்றங்கள் என்ற பாடம் ஆரம்பித்தாலே சில மாணவர்கள் சில நொண்டிச் சாட்டுச்சொல்லிவிட்டு வகுப்பைவிட்டு ஆங்காங்கு சென்று விடுவார்கள். இதற்குக் காரணம் அவர்கள் கணிதத்தில்கொண்ட பிரியமல்ல பயமேயாகும். பயத்தை எதிர்த்து எதிர்நீச்சல் அடித்தால் பயம் பிரியமாகி விடும். "கணிதத்தைக் கற்றார் வாழ்க்கையில் வென்றார்"

கு.குகன்
தரம்-$10^{A}$
மு/யோ/ம/வி

# வரலாற்றில் தடம் பதித்த விஞ்ஞானி

# லூயி டாகர்

"சீந்துக்குட்டி" '∴போட்டோ' மாமாவைப் பார்த்து ஒருக்காச் சிரியுங்கோ" எண்டு ஒரு அம்மா தன்ரை குழந்தையிட்டையும், "எடி! எங்கடை பானுவின்ரை பிறந்தநாள் '∴போட்டோ' வந்திட்டுது. அந்த மாதிரி இருக்குது!" எண்டு ஒரு தோழி இன்னுமொரு தோழியிட்டையும், "இஞ்சரப்பா கனகம்! எங்கடை பிள்ளையின்ரை கல்யாண வீட்டு '∴போட்டோ' வந்திருக்குது. வந்து பாருமன், ரதி-மன்மதன் தோத்துப் போயிடுவினம்" எண்டு ஒரு கணவன் தன் மனைவியிட்டை, சொன்னதையும் கேட்டதையும் நேரிலை காணாட்டிலும் கேள்வியாவது பட்டிருப்பியள் தானே!

இதெல்லாம் இருக்க, இவை எல்லாரும் இந்த ∴போட்டோவைப் பற்றித்தானே கதைச்சிருக்கினம். ஆனா நான், இந்த '∴போட்டோ' எடுக்கப் பயன்படுத்திற 'கமெரா' வைப் பற்றிச் சொல்லப்போறன்! சரிதானே.

இப்படியான திறமான போட்டோக்களை எடுக்க பயன்படுத்திற இந்தக் 'கமெரா'வை கண்டுபிடிச்சவர் 'லூயி டாகர்' என்றவர்தானாம். இவர் 1787ஆம் ஆண்டு பிறந்து, தன்ரை 30ஆவது வயசிலை தனிச் சிறப்புடைய ஒளி விளைவைக் காட்டும், 'டயோராமா' (Diorama) எண்டு அழைக்கப்படும் அற்புதமான அகல் பரப்புக் காட்சி வண்ண ஓவியங்களை வடிவமைச் சாராம். இப்பிடி ஓவியங்களை வரைஞ்சு கொண்டிருக்கேக்கை தான் வண்ணமும் தூரிகையும் இல்லாமல் உலகக் காட்சிகளை அப்பிடியே தானாக படம் பிடிக்கக் கூடிய சாதனமான 'கமெரா'வை உருவாக்க முனைஞ்சாராம். இப்பிடியாக 'டாகரோ டைப்' (Daguerreo type) எண்டு அழைக்கப்படும் பாதரச ஆவி மூலம் ஒளிப்படமெடுக்கும் முறையைக் கண்டு பிடிச்சாராம்.

இந்த 'டாகருக்கு' கமெராவை கண்டுபிடிச்சதாலை ஒரு அதிஷ்டம் அடிச்சுதாம் பாருங்கோ! என்னெண்டா, ∴பிரெஞ்சு அரசு,



இவரை கௌரவப்படுத்தியதோடை மாதாமாதம் ஒரு தொகைப் பணத்தையும் குடுத்திச்சுதாம், சாகும்வரை!

என்ன! பிடியுங்கோ நாயை நானும் ஒரு சாதனையை செய்து காட்டுறன் எண்டு கற்பனையிலை இறங்கிட்டியளோ? கற்பனை வேண்டாம் 'சோதரரே' நிஜமாகவே ஒரு 'டாகர்' எண்டில்லாட்டிலும் 'ரைகர்' ஆகவாவது ஆகிற வழியைப் பாருங்கோ. அம்மா, அப்பாக்களே எனக்கு அடிக்க வராதீங்கோ, நான் 'ராணி காமிக்ஸ்' இல வார 'ரைகரை'த்தான் சொன்னனான்.

-கல்யாணி.-

# வாரம் ஒரு குறள் அறிவோம்



ஒருவர் எமக்குச் செய்த உதவியை நாம் மறக்காது நன்றியுடையவர்களாக வாழ்வது தமிழர் மரபு. அதே போல் நாமும் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

சிறியவர்களாயினும் பெரியவர்களாயினும் மற்றவர்களுக்கு உதவி செய்வது முக்கிய கடமையாகும்.


ஒருவர் எம்மிடம் உதவியை நாடும் போது நாம் அதை உதாசீனம் செய்யக் கூடாது.

நாம் எப்பொழுதும் குறிப்பறிந்து உதவி செய்யப்பழக வேண்டும். அதாவது ' சொல்லிச் செய்வர் சிறியார் சொல்லாமல் செய்வர் பெரியார்' என்ற வாக்கு மூலம் நாம் குறிப்பறிந்து மற்றவர்களுக்கு உதவி செய்வதன் பயனை கூறுகின்றது.

யாராவது நம்மிடம் உதவி கேட்கும் முன்பே நாமாக உணர்ந்து உதவி செய்வதே மிக மிகச் சிறந்தது.. அத்தோடு எதிர்பார்ப்புக்களோடும் நாம் உதவி செய்யக் கூடாது. ஒருவர் எமக்கு பகைவராக இருந்தால் கூட அவர் தவிக்கும் நேரத்தில் நாம் உதவி செய்ய முன்வரவேண்டும். திருவள்ளுவர் அழகாக இதை கூறியுள்ளார்.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

# திராட்சைப்பழம்



கொத்துக் கொத்தாய்
இருக்குமாம்
கொடியில் மேலே தொங்குமாம்
அத்தனையும் பறிக்கவே
ஆசையாக இருக்குமாம்
காற்றில் ஆடி அசையுமாம்
கற்கண்டைப் போல இனிக்குமாம்
பார்க்கப் பார்க்க எட்டியே
பறித்துத் தின்னத் தூண்டுமாம்
பச்சைக்கிளி போலவே
பளபளப்பாய் இருக்குமாம்
நிச்சயமாய் வாயிலே எச்சில்
ஊறச் செய்யுமாம்
திராட்சைப்பழம் நல்ல
திராட்சைப்
பழம் தின்னத் தின்ன
இனிமையான திராட்சைப்பழம்.

தெ. மோகனதாசன்
கிளி/புன்னைநீராவி
வித்தியாலயம்.

அறிவின் மீது அளவுக்கு மீறிய ஆசை கொள்ளாதே; அதில் மனக்கலக்கமும் ஏமாற்றமும் பெருமளவில் அடங்கியுள்ளன. -தாமஸ் ஏ கெம்பிஸ்










### சிரிக்கத் தெரிந்த வாழ்க்கை

எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் சிரிக்கத்தெரிந்தவர்களுக்கு வாழ்க்கை மகா இனிமையானது. சிலர் எந்த இக்கட்டான நிலையிலும் தன்னால் எதுவும் செய்ய முடியாது. அல்லது அப்படிச் செய்தாலும் பயன் ஏதுமில்லை என்ற கட்டத்திலும் நகைச்சுவை உணர்வைக் கைவிட்ட வர்கள் இல்லை.

ஒரு முறை சாம் மானக்ஷா பிரிகேட் கொமாண்டராக இருக்கும்போது சில இராணுவ அதிகாரிகளுடன் சட்லெஜ் நதியை இயந்திரப் படகு மூலம் குறுக்கே கடந்துசென்று கொண்டிருந்தார். நதியில் அப்போது பெரும் வெள்ளம். திடீரென்று படகின் எஞ்சின் நின்றுவிட்டது. படகோ சுழித்தோடும் வெள்ளத்தில் சிக்கி, சுழன்று நீர்பாயும் பயங்கர மான பள்ளத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்துவிட்டது.

படகில் இருந்த மற்ற அதிகாரிகள் தாங்கள் அணிந்திருந்த கனமான சப்பாத்துக்கள், துப்பாக்கிகள் எல்லாவற்றையும் கழற்றி எறிந்து விட்டு நீரில் குதித்து நீந்திக் கரைசேர ஆயத்தமாகிவிட்டார்கள். ஆனால் மானக்ஷாவோ எந்தவித ஆயத்தமும் காட்டாமல் தான் இருந்த இடத்திலேயே இருந்து மீசைஷ்ய முறுக்கியபடி உட்கார்ந்திருந்தார். இதற்கிடையே சிலர் இயந்திரப்படகு வெள்ளத்தில் சிக்கிக்கொண்டு தவிப்பதைப் பார்த்து விரைவாக ஒரு இயந்திரப் படகொன்றை உதவிக்குக் கொண்டு வந்தார்கள். அந்தப் படகில் இருந்த அனைவரும் மாறி பத்திரமாக கரைசேர்ந்தார்கள்.

ஸ்டா.ஃ.ப் கேப்டனுக்கு வியப்பு தாளவில்லை. "சேர் இவ்வளவு பெரிய ஆபத்திலும் நீங்கள் தைரியமாய் உட்கார்ந்திருந்தீர்களே" அடேயப்பா! என்று வியப்புடன் கேட்டார். அதற்கு அவர் "மற்றவர்களைப் போல நானும் சப்பாத்துக்களை கழற்றி ஆயத்தமாகி என்ன லாபம்? எனக்குத்தான் நீந்தத்தெரியாதே!" என்றார் புன்னகையோடு.

### லஞ்ச ஒழிப்பு

தென்னமெரிக்க நாடு ஒன்றில் உயர் அதிகாரி ஒருவர் ஜனாதிபதியிடம் சென்று "ஐயா! நம் நாட்டில் லஞ்சப்பேய் அடியோடு அழிக்கப்பட்டுவிட்டது." என்று கூறினார்.

ஜனாதிபதி நல்ல செய்திதான். லஞ்சம் வாங்குபவர் களையெல்லாம் தீர்த்துக்கட்டி விட்டார்களா? என்றார்.

அதிகாரி பதில் கூறினார். அப்படி இல்லை. நாட்டில் இனி கொடுக்கவோ வாங்கவோ பணம் என்பதே கிடையாதே.

### தேசபக்தர்கள்

புகழ்பெற்ற இரண்டு ஜேப்படித் திருடர்கள் இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்குச் சென்று குடியேறினார்கள். அங்கு ஒரு இந்தியர்கள் சங்கத்தில் உறுப்பினர் ஆவதற்கு விண்ணப்பித்திருந்தனர். நுழைவு படிவத்தில் " உங்கள் தகுதி என்ன?' என்ற கேள்விக்கு அவர்கள் எழுதிய பதில் இது:'நாங்கள் உண்மையான தேச பக்தர்கள் ஏனெனில் எங்கள் தாய்நாடு நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காக அதைவிட்டு நிரந்தரமாக வெளியேறி னவர்கள்!

அறிவுக்கு ஏற்றதும், ஒழுக்கத்துக்கு ஏற்றதும், எப்பொழுதும் ஒன்றாகத்தான் இருக்கும். - லியோ டால்ஸ்டாய்

# நெடுஞ்சாலை விபத்துக்கள்

-கலாநிதி-
க. சோமஸ்கந்தன்-

சாலைகள் பலவகையாக இருந்தாலும் விபத்துக்கள் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. சாலை விபத்துக்கள் தற்செயலாக நடப்பதில்லை. தனிக்காரணம் அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட கூட்டுக் காரணங்களால் விபத்துக்கள் நடக்கின்றன. சாலையைப் பயன்படுத்தும் பாதசாரிகள் வாகன ஓட்டுநர்களின் அறிந்த அல்லது அறியாத தவறுகள் விபத்துக்களுக்கு மூலகாரணமாக அமைகின்றன. சாலையின் சீரின்மை வாகனங்களின் தகுதியின்மை துணைக் காரணங்களாக அமைகின்றன. நெடுஞ்சாலைகளில் நடக்கும் விபத்துக்கள் சம்பந்தமான சில தரவுகளை மனனம் செய்யக்கூடிய விதத்தில் இங்கு சுருக்கித் தருகின்றோம்.

1) விபத்துக்களுக்குக் காரணமாகும் வாகனக் குறைபாடுகள்.

i. பழுதடைந்த அல்லது வாகனத் தாயாரிப்பாளர் சிபார்சு செய்யாத ரயர்கள்.

ii. சீரற்ற நிறுத்திகள் (பிறேக்)

iii. வெளிச்சம் இல்லாத இரவு ஓட்டம் அல்லது மங்கலான வெளிச்சம்.

iv. மின்சாரத்தில் இயங் கும் திசைகாட்டிகள் நிறுத்தும் அறிகுறிகள் இல்லாமை.

v. அடிசட்டம், உடற் பகுதி அதிர்ச்சி தாங்கிகள் திருப்பும் அலகு புகைக்கும் இயந்திரம் அழுக்கடைந்த முன் கண்ணாடி மற்றும் பின் கண்ணாடி போன்றவற்றில் காணப்படும் குறைபாடுகள்.



2) வாகன ஓட்டுநரின் குறைபாடுகள்

i. கட்டுப்பாடற்ற வேகச் செலுத்தும் பிற வாகன ஓட்டுநர்களின் உரிமை களை மதியாமை.

ii. வேகம் சம்பந்தமான வீதி விதிமுறைகளை மதியாமல் ஓட்டுதல்.

iii. உடற் தகுதியின்மை-கண் பார்வை சரியில்லாமை, காது கேளாமை, நோயின்தாக்கம், கைநடுக்கம், மன நோய்கள் கோபாவேசத்துடன் ஓட்டுதல்.

iv. பலத்த இசையுடன் ஓட்டுதல் காவும் தொலைபேசியில் பேசியபடி ஓட்டுதல் பயணிகளுடன் திரும்பிக் கதைத்தல், ஒழுக்கமற்ற நடவடிக்கையில் ஈடுபடுதல் சாலைமீது கண் பதியாமல் ஏனோ தானோ என்று ஓட்டுதல்.

v. மதுபோதையில் ஓட்டுதல் விழிப்புணர்வு இல்லாமல் தூக்க நிலையில் ஓட்டுதல்.

vi. குறிப்பிட்ட வாகனத்தை ஓட்டுவதற்குரிய பயிற்சி மற்றும் தகுதிக்கு அத்தாட்சியாகப் பெறுமதியான உரிமம் இல்லாமை.

3) சாலையின் நிலவரம் ஏற்படுத்தும் விபத்துக்கள்.

i. மேடு, பள்ளம், குழிகள் போன்றவற்றுடன் சாலையின் சீரைக் கெடுக்கும் அந்நியப் பொருள்களும்.

ii. சாலையின் விளிம்பு இறுக்கமில்லாமல் சறுக்கும் நிலையில் இருத்தல்.

iii. சாலை வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவிதத்தில் ஓரேவித அகலமாக இல்லாமல் ஒடுங்கியும் விரிந்தும் இருத்தல்.

iv. சாலை பற்றிய விபரங்களைக் கூறும் அறிக்கைப் பலகை இல்லாமை. உதாரணம் சாலையின் தன்மை திருப்பங்கள், ஒடுக்கங்கள் வேகக்கட்டுப்பாடுகள் சம்பந்தமான காவல்துறை அறிவிப்புக்கள்.

v. நெடுஞ்சாலையில் வந்து ஏறும் ஒழுங்கைகள் பற்றிய அறிவிப்புக்கள் இருத்தல் வேண்டும் நெருக்கமான கட்டிடப்பகுதி, சந்தை, பள்ளிக்கூடம், மருத்துவ நிலையம் போன்றவற்றின் அறிவிப்பு இல்லாமை.

4) மிதி வண்டிகள்

i. பள்ளிச் சிறார்களும் இளவட்டங்களும் உல்லாச நிலையில் சாலையை அடைத்துக் கொண்டு ஓடுதல்.

ii. பிறேக், மணி வெளிச்சம் போன்றவை இல்லாமை.

iii. குறுக்கு நெடுக்காக தமது பக்கத்தில் இருந்து விலகி ஓடுதல்.

iv. தெருவில் கவனமில்லாமல் சிரித்துப் பேசி பிற பாவனையாளர்களுக்கு தொல்லை கொடுத்தல் மணி அடித்துப் பாதை கேட்போரை மதித்து நடவாமை.

v. சாலைப் போக்குவரவு விதிமுறை களை அறிந்திராமை.

vi. விறகு போன்ற பெரும்பொதிகளைச் சுமந்து செல்லல். ஐஸ்கிறீம் விற்பனைக்காக மிதி வண்டியில் ஒலி பெருக்கியைப் பொருத்தி சூழல் அமைதியைக் கெடுத்தல்.

5) உந்துஉருளிகள், முச்சக்கர வண்டிகள்.

i. உரிமம் பெறாதவர்கள், பயிற்சி காலத்தை நிறைவேற்றாதவர்கள் ஓட்டப்போட்டியில் பங்கு பற்றுவது போல் ஓட்டிச் செல்லுதல்.

ii. சாலை விதிமுறைகள் பற்றிய அறிவின்மை.

iii. வேகக் கட்டுப்பாடுகளை மதித்து நடவாமை.

iv. வாகனக் குறைபாடுகள்- நிறுத்திகள் சீரின்மை, ரயர்கள் பொருத்தமின்மை, வெளிச்சம், அதிர்ச்சி தாங்கி திசைகாட்டிகள் போன்றவற்றில் தவறுகள்.

v. சாலைப் பாவனையில் சமுதாய உணர்வின்மை வெறித்தனமான போக்கு.

6) பார ஊர்திகள்.

i. வாகனத் தயாரிப்பாளர்கள் சிபாரிசு செய்த எடைக்குமேல் ஏற்றிச் செல்லல்.

ii. எரு, விறகுக் குற்றிகள் போன்றவற்றை ஏற்றிச் செல்லும் பார ஊர்திகளில் பயணிகளையும் ஏற்றிச் செல்லல்.

iii. எடைக்குத் தகுந்த வேகத்தை மீறி சவாரி ஓடுதல்.

iv. பிறவாகனங்களுக்கு வழிவிடும் போது சாலையின் அமைப்பை கருத்தில் எடுக்காமல் போகும்படி கை காட்டுதல்.

v. பார ஊர்திகள் செல்வதற்கான பொருத்தமற்ற சாலை, ஒழுங்கை, பாதை என்பவற்றில் ஓட்டுதல்.


vi. வாகனக் குறைபாடுகள் என்ற இதன்மேலுள்ள 1ஆம் பகுதியில் குறிப்பிட்ட வாகனக் குறைபாடுகள்.

vii. மிகவும் முக்கியமாக பார ஊர்தி ஓட்டுவதற்குத் தகுதிவாய்ந்த உரிமமும் பயிற்சி அனுபவமும் ஓட்டுநருக்கு இருக்க வேண்டியது அவசியம்.

viii. இதன்மேலுள்ள பகுதி 2இல் விவரிக்கப்பட்ட ஓட்டுநர் குறைபாடுகளுடன் பார ஊர்தியைச் செலுத்துதல்.

ix வாகனத்தின் தன்மையையும் ஏற்றிச் செல்லும் பொருளின் எடையையும் அறிந்து ஓட்டுதல்.

7) சாலையில் கால்நடையாகச் செல்வோரின் தவறுகள்.



i. நெரிசல் மிகுந்த காலங்களில் சாலையை ஊடறுத்துக் கடத்தல், கடந்து செல்வதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை உதாசீனம் செய்தல்.

ii. நடைபாதை, காலடிப்பாதை என்பவற்றை பயன்படுத்தாது சாலை ஓரமாக நடந்து செல்லல்.

iii. சாலை ஓரமாக நின்று கூடிக் கதைத்தல் அங்கும் இங்குமாகப் பார்த்தல்.

iv. சொப்பிங் பாக் போன்றவற்றை சாலையில் எறிதல்.

v. வாகனங்களின் ஓட்டத்திற்கு இடையூறு விளைவித்தல்.

vi. பாதசாரிகள் அதாவது கால்நடையாகச் செல்லும் நபர்கள் பாதை விதிமுறைகளுடன் வாகன ஓட்ட விதிமுறைகளையும் அறிந்திருக்க வேண்டும். விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு இது உதவும்.

8) பாதை ஓரமாகவுள்ள நிலச் சொந்தக்காரர்களின் தவறுகள்.

i. சாலை ஓரத்தில் கால் நடைகளைக் கட்டி மேய்த்தல். நீளமான கயிற்றால் பிணைக்கப் படும்போது கால்நடைகள் நடுத்தெருவரை வந்து விபத்துக்களை ஏற்படுத்துகின்றன.

ii. வேலி ஓரத்தையும் வேலி மரங்களையும் துப்புரவு செய்து வைக்கத் தவறுதல்.

iii. வெளியேறும் போது அவதானமாக வாயிற் கதவைத் திறத்தல் திடீரென்று திறந்து வெளியேறும் போது சாலை ஓரமாகச் செல்வோர் அதிர்ச்சி அடைகின்றனர்.

9) சாலை முகாமைத்துவக் குறைபாடுகள்

i. சாலைகளைப் பராமரிப்பதற்குப் பொறுப்பானவர்கள் விடும் தவறுகள். விபத்துக்களை உண்டு பண்ணுகின்றன: உதாரணத்திற்கு நடைபாதைகளையும் சாலைகளையும் நேரகாலத்திற்கு செப்பமிட்டு வைக்கத் தவறுதல்.

ii. நடைபாதையிலுள்ள தடைகளை அகற்றத் தவறுதல். நடைபாதை வியாபாரிகள் நடைபாதையை ஆக்கிரமிக்கக்கூடாது. வர்த்தக நிலையங்கள் தமது காட்சிப் பொருள்களை நடைபாதையில் வைக்க அனுமதிக்கக் கூடாது.

iii. சாலை ஓரமாகக் கட்டிடங்கள் கட்டப்படுவதைத் தடுக்க வேண்டும். சாலையின் எதிர்கால விரிவுக்குள் வழிவிடும் விதத்தில் கட்டிட அனுமதி வழங்கப்பட வேண்டும்.

iv. நீர் வடிகால், நடைபாதை என்பன பராமரிக்கப்பட வேண்டும்.

v. சாலையின் பக்கமாகத் தொங்கும் மரக்கிளைகளை வெட்டி அகற்ற வேண்டும். இவை போக்குவரவைத் தடை செய்வதோடு வெளிச்சம் படுவதையும் தடுக்கின்றன.

vi. வாகனங்கள் பாதுகாப்பாக நிறுத்துவதற்கு உகந்த நிலத்தை ஒதுக்கிக் கொடுத்தல்.

vii. சாலைகளையும் பிறபாதைகளையும் திட்டமிட்டு அமைக்க வேண்டும்.

viii. பஸ் தரிப்பு நிலையங்களைத் திறக்க வேண்டும்.

10) சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு.

i. இறுக்கமான கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்த தவறுவதால் சாலை விபத்துக்கள் நிகழ வாய்ப்புண்டு.

ii. வேகக் கட்டுப்பாடுகளை மீறுவோர் தண்டிக்கப்பட வேண்டும்.


iii. சாலையில் ஓடுவதற்குப் பொருத்தமற்ற வாகனங்கள் தடை செய்யப்பட வேண்டும்.

iv. திட்டமிட்ட நடவடிக்கை மிக அவசியம். இன்று இறுக்கமான நடவடிக்கைகள் நாளை தளர்வு என்று இருக்கக் கூடாது.

v. பள்ளிக்கூடங்களுக்கு தவணை முறையில் சென்று சாலை விதிமுறைகளைப் புகட்ட வேண்டும்.

vi. நடைபாதையில் செல்லும் முறை தெருவைக் கடக்கும் வழிமுறை போன்றவற்றைப் பாதசாரிகள் அறியச் செய்ய வேண்டும்.

வருடமொன்றுக்குச் சராசரி 2000 உயிரிழப்புக்கள் சிறிலங்காவின் நெடுஞ்சாலைகளில் நடக்கின்றன. மதுபோதையில் வாகனம் ஓட்டுதல் இதற்கு முக்கிய காரணம் என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. சாலை விபத்துகளைத் தவிர்க்கும் கூட்டு முயற்சியில் நாமெல்லோரும் இணைந்து செயற்பட வேண்டும். தமிழீழ நெடுஞ்சாலைகளின் பாதுகாப்பை நாம் உறுதிப்படுத்த வேண்டும். ♦♦



# மதவடி மயிலர்

செய்தி:- ''அரசு புலிகள் பேச்சுவார்த்தை மக்களைத் தப்பான வழியில் இட்டுச் செல்லும் முயற்சி'' என்கிறார் சந்திரிகா...

மயிலர்:- பேச்சுவார்த்தைக்கு முன்னர் அதை குழப்பவும் நிறுத்தவும் எத்தனையோ குத்துக்கரணங்கள் அடித்த அம்மையார் கடைசியாக உதிர்த்திருக்கிற வார்த்தைகள் இவை... கடந்த ஏழாண்டு காலத்தில் அம்மணியின் அரசு விடுதலைப் புலிகளோடு யுத்தம் செய்த வேளையில் மட்டும் மக்கள் சரியான வழிக்கு இட்டுச் செல்லப்பட்டிருக்கிறார்கள் என்று மறைமுகமாக அவர் சொல்கிறார் போலிருக்கிறது...

மக்களை அவர் சரியாக வழி நடத்தியத்திற்காகத்தான் அவரது பொதுசன ஐக்கிய முன்னணிக்கு தேர்தலில் சரியான பாடத்தை மக்கள் புகட்டியிருக்கிறார்கள் என்ன நான் சொல்லுறது சரிதானே பாருங்கோ...!

செய்தி:- முழுமையான சிங்கள ஆட்சியை உருவாக்க சிங்களத் தலைமைகள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்கிறார் மகாநாயக்க தேரர்.

மயிலர்:- மகாநாயக்கரின் பௌத்த தர்ம சிந்தனையில் உருவான தத்துவத்தின் பிரகாரம் சிங்களத் தலைமைகள் இயங்கினால் அரசாட்சியை விட்டு அரசமரத்தின் கீழ் ஆன்மீக ஆட்சியை நடத்திய புத்தபகவான் அந்த அரச மரத்திலேயே தூக்குப்போட்டுக் கொண்டாலும் அதிசயமில்லைப் பாருங்கோ... அஹிம்சையைப் போதிக்க வேண்டிய ஞானிகள் அரசியலுபதேசம் செய்ய வந்தால் என்ன நடக்கும் என்பதற்கு கடந்த நாற்பது ஆண்டுகால சிறிலங்காவின் வரலாறு உலகுக்கு ஒரு எடுத்துக் காட்டு.

எனக்கென்னவோ நாட்டுமக்கள் அனைவரையும் பிச்சாபாத்திரம் ஏந்த வைக்கும் தத்துவ உபதேசமாகத் தான் எனக்கு இது படுகுது பாருங்கோ... பாவம் சிங்கள மக்கள்...

செய்தி:- சி.ஐ.டியினர் கைப்பற்றிய வங்கி வைப்புச் சான்றிதழ்கள் சட்டபூர்வமானவை என்கிறார் ரத்வத்தை.

மயிலர்:- ஐயா சொன்னா பிழைக்காது பாருங்கோ... ஏழாண்டு கால பிரதிபாதுகாப்பு அமைச்சராக சிறிலங்காவை பிச்சைக்கார நாடாக மாற்ற அயராது உழைச்சு தன்னை கோடீஸ்வரராக்கிய இந்தப் போலி ஜெனரல் மெய் சொன்னதாக வரலாறே கிடையாது பாருங்கோ... அறிக்கை விடுவதில் மன்னரான ரத்வத்தை வங்கிப் பெட்டகத்துள் பாதுகாப்பாக வைத்த இவ்வளவு பணமும் சிறிலங்கா பாதுகாப்பு படையினரின் உயிர்களைப் பலி கொடுத்து சேர்த்த ஊழல்மோசடிப் பணம்தான் என்பதை சிங்களமக்கள் தான் புரிஞ்சு கொள்ளவேணும் பாருங்கோ...

செய்தி:- போர் நிறுத்த உடன்படிக்கையில் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக ரணிலை எச்சரித்து கடிதம் அனுப்பியுள்ளார் சனாதிபதி சந்திரிகா.......

மயிலர்:- போர்க்காலத்தில் சிறிலங்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலே கிடையாது என்று அம்மணி கூறுவது போலல்லவா இருக்குது பாருங்கோ... என்னமோ அம்மையாருக்கு அண்மைக் காலமாக ஒரு வகையான மாறாட்டம் ஏற்பட்டிருக்கிறது போலத் தெரியுது பாருங்கோ...

முன்னுக்குப்பின் முரணாக பேசுவது அவரின் இயல்பாகி விட்டது... ஆனாலும் சண்டிராணித்தனம் மட்டும் குறையேல்லைப் பாருங்கோ...

ஆனாலும் அம்மையார் என்ன மிரட்டினாலும் ரணிலும் அசையிறதாகத் தெரியேல்லை... அதுதான் அவவுக்கு ஆத்திரம் இப்ப அந்த ஆத்திரத்திலை அலம்பத் தொடங்கீட்டா... கூடாத கூட்டங்களோட கூட்டு வைச்சால் இப்படி ஒப்பாரியும் ஓலமும் வைக்கத்தான் வேண்டிவரும் பாருங்கோ...

செய்தி:- அநுராவின் செயற்பாடுகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிளவுபடுவதற்கே வழிவகுக்கும் என மூத்த கட்சி உறுப்பினர்கள் எச்சரிக்கை...

மயிலர்:- என்ன சொன்னாலும் அநுரா பண்டா பரம்பரையின் வாரிசெல்லே... சந்திரிகாவின் தம்பியெல்லே மூத்த உறுப்பினர் என்ன கூறியும் என்ன... அநுரா புகுந்த கட்சி உருப்படாது என்று தெரிந்தும் அக்கா சந்திரிகா அந்த ஆளை உள்ளுக்கு கொண்டு வந்திட்டா... கேடு வரும் போது மதி கெட்டு வரும் எண்டது சரிதான் பாருங்கோ... பிறகென்ன... சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அஸ்தமனக் காட்சி ஆரம்பமாகி விட்டது எண்டு சொன்னால் பிழையில்லைப் பாருங்கோ... ❖

எதையும் நீ முழுமையாக அறிய வேண்டுமானால், அதை மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடு. - ட்ரையான் எட்வர்ட்ஸ்



# பேருந்துப் பணிகளின் புதிய நேர விரிப்பு



## 23.09.2002 ஆம் நாளில் இருந்து தொடங்கும்

### இராமநாதபுரம் - கந்தபுரம்

| இராமநாதபுரம் | வட்டக்கச்சி | கிளிநொச்சி | கோணாவில் | அம்பலப்பெருமாள்சந்தி | கந்தபுரம் |
|---|---|---|---|---|---|
| காலை 07.00 | 07.30 | 08.00 | 08.45 | 09.30 | 09.45 |

### கந்தபுரம் - இராமநாதபுரம்

| கந்தபுரம் | அம்பலப்பெருமாள்சந்தி | கோணாவில் | கிளிநொச்சி | வட்டக்கச்சி | இராமநாதபுரம் |
|---|---|---|---|---|---|
| மாலை 03.30 | 03.45 | 04.30 | 05.00 | 05.45 | 06.15 |

குறிப்பு: கிளிநொச்சியில் 15 மணித்துளிகள் நிற்கும்

### கிளிநொச்சி - பூநகரி - பள்ளிக்குடா

| கிளிநொச்சி | கரடிப்போக்குச்சந்தி | உருத்திரபுரம் | குஞ்சுப்பரந்தன் | நல்லூர் | ஆலங்கேணி | தம்பிராய் | 4ம்கட்டை | செம்மன்குன்று | 04ம்கட்டை | பள்ளிக்குடா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாலை 03.30 | 03.40 | 04.10 | 04.25 | 05.00 | 05.05 | 05.15 | 05.30 | 05.45 | 06.00 | 06.15 |

### பள்ளிக்குடா- பூநகரி -கிளிநொச்சி

| பள்ளிக்குடா | 4ம்கட்டை | செம்மன்குன்று | 04ம்கட்டை | தம்பிராய் | ஆலங்கேணி | நல்லூர் | குஞ்சுப்பரந்தன் | உருத்திரபுரம் | கரடிப்போக்குச்சந்தி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 07.00 | 07.15 | 07.30 | 07.45 | 08.00 | 08.10 | 08.15 | 08.50 | 09.05 | 09.35 | 09.45 |

### புதுக்குடியிருப்பு - கிளிநொச்சி - முறுகண்டி - கந்தபுரம்

| புதுக்குடியிருப்பு | விசுவமடு | வட்டக்கச்சி | கிளிநொச்சி | முறுகண்டி | அம்பலப்பெருமாள்சந்தி | கந்தபுரம் |
|---|---|---|---|---|---|---|
| காலை 07.00 | 07.45 | 08.30 | 09.15 | 10.00 | 11.00 | 11.15 |

### கந்தபுரம் - முறுகண்டி -கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு

| கந்தபுரம் | அம்பலப்பெருமாள்சந்தி | முறுகண்டி | கிளிநொச்சி | வட்டக்கச்சி | விசுவமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|---|
| காலை 09.00 | 09.15 | 09.55 | 10.45 | 11.45 | 12.30 | 01.15 |

குறிப்பு: கிளிநொச்சியில் 15 மணித்துளிகளும், முறுகண்டியில் 20 மணித்துளிகளும் நிற்கும்.

### புதுக்குடியிருப்பு - பரந்தன் - கிளிநொச்சி - கோணாவில் - கந்தபுரம்

| புதுக்குடியிருப்பு | விசுவமடு | பரந்தன் | கிளிநொச்சி | கோணாவில் | அம்பலப்பெருமாள்சந்தி | கந்தபுரம் |
|---|---|---|---|---|---|---|
| மாலை 03.00 | 03.45 | 04.45 | 05.00 | 05.35 | 06.00 | 06.15 |

### கந்தபுரம் - கோணாவில் -கிளிநொச்சி - பரந்தன் - புதுக்குடியிருப்பு

| கந்தபுரம் | அம்பலப்பெருமாள்சந்தி | கோணாவில் | கிளிநொச்சி | பரந்தன் | விசுவமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|---|
| காலை 07.15 | 07.30 | 07.55 | 08.15 | 08.45 | 09.45 | 10.30 |

குறிப்பு: கிளிநொச்சியில் 15 மணித்துளிகள் நிற்கும்.

### புதுக்குடியிருப்பு - கேப்பாபுலவு - முள்ளியவளை - முல்லைத்தீவு

| புதுக்குடியிருப்பு | கேப்பாபுலவு | முள்ளியவளை | முல்லைத்தீவு |
|---|---|---|---|
| காலை 07.00 | 07.30 | 08.00 | 08.30 |

### முல்லைத்தீவு - முள்ளியவளை - கேப்பாபுலவு - புதுக்குடியிருப்பு

| முல்லைத்தீவு | முள்ளியவளை | கேப்பாபுலவு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|
| மாலை 04.30 | 05.00 | 05.30 | 06.00 |

### முழங்காவில் - புளியம்குளம்

| முழங்காவில் | செயபுரம் | வன்னேரி | அம்பலப்பெருமாள்சந்தி | கந்தபுரம் | அம்பலப்பெருமாள்சந்தி | முறுகண்டி | மாங்குளம் | புளியம்குளம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 05.30 | 06.00 | 06.45 | 07.15 | 07.30 | 07.45 | 08.25 | 09.25 | 09.55 |

குறிப்பு: செயபுரத்தில் 15 மணித்துளிகளும், முறுகண்டியில் 20 மணித்துளிகளும் நிற்கும்.

தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப் பணியகம்,
விசுவமடு.

[சி.7369]

## புளியம்குளம் - முழங்காவில்

| புளியம்குளம் | மாங்குளம் | முறுகண்டி | அம்பலப்பெருமாள்சந்தி | கந்தபுரம் | அம்பலப்பெருமாள்சந்தி | வன்னேரி | செயபுரம் | முழங்காவில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாலை 05.30 | 06.00 | 06.40 | 07.40 | 07.55 | 08.10 | 08.40 | 09.10 | 09.40 |

குறிப்பு: முறுகண்டியில் 20 மணித்துளிகள் நிற்கும்.

## முழங்காவில் - மல்லாவி

| முழங்காவில் | செயபுரம் | வன்னேரி | அம்பலப்பெருமாள்சந்தி | கந்தபுரம் | அம்பலப்பெருமாள்சந்தி | துணுக்காய் | மல்லாவி | பாலையடி |
|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 07.00 | 07.30 | 08.00 | 08.30 | 08.45 | 09.00 | 10.00 | 10.15 | 10.45 |

## மல்லாவி - முழங்காவில்

| பாலையடி | மல்லாவி | துணுக்காய் | அம்பலப்பெருமாள்சந்தி | கந்தபுரம் | அம்பலப்பெருமாள்சந்தி | வன்னேரி | செயபுரம் | முழங்காவில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாலை 02.30 | 03.00 | 03.15 | 04.15 | 04.30 | 04.45 | 05.15 | 05.45 | 06.15 |

## புதுக்குடியிருப்பு - குமுழமுனை

| புதுக்குடியிருப்பு | கேப்பாபுலவு | முள்ளியவளை | குமுழமுனை |
|---|---|---|---|
| பகல் 02.30 | 03.00 | 03.30 | 04.45 |

## குமுழமுனை - புதுக்குடியிருப்பு

| குமுழமுனை | முள்ளியவளை | கேப்பாபுலவு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|
| காலை 07.30 | 08.15 | 08.45 | 09.15 |

## புதுக்குடியிருப்பு - புளியம்பொக்கணை

| புதுக்குடியிருப்பு | உடையார்கட்டு | விசுவமடு | புளியம்பொக்கணை |
|---|---|---|---|
| மாலை 05.00 | 05.30 | 05.45 | 06.10 |

## புளியம்பொக்கணை - புதுக்குடியிருப்பு

| புளியம்பொக்கணை | விசுவமடு | உடையார்கட்டு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|
| காலை 07.00 | 07.25 | 07.40 | 08.10 |

## புதுக்குடியிருப்பு - முள்ளியவளை

| புதுக்குடியிருப்பு | கேப்பாபுலவு | வற்றாப்பளை | முள்ளியவளை | தண்ணீரூற்று |
|---|---|---|---|---|
| மாலை 05.30 | 06.00 | 06.15 | 06.30 | 06.45 |

## முள்ளியவளை - புதுக்குடியிருப்பு

| தண்ணீரூற்று | முள்ளியவளை | வற்றாப்பளை | கேப்பாபுலவு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|
| காலை 06.30 | 07.00 | 07.15 | 07.30 | 08.00 |

## புதுக்குடியிருப்பு - உயிலங்குளம்

| புதுக்குடியிருப்பு | விசுவமடு | புளியம்பொக்கணை | வட்டக்கச்சி | கிளிநொச்சி | முறுகண்டி | அம்பலப்பெருமாள்சந்தி | வன்னேரி | செயபுரம் | முழங்காவில் | இலுப்பைக்கடவை | பள்ளமடு | உயிலங்குளம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 10.30 | 11.15 | 11.50 | 12.00 | 12.45 | 01.30 | 02.30 | 03.00 | 03.30 | 04.00 | 05.00 | 05.30 | 06.00 |

குறிப்பு : கிளிநொச்சியில் 15 மணித்துளிகளும், முறுகண்டியில் 20 மணித்துளிகளும் நிற்கும்.

## உயிலங்குளம் - புதுக்குடியிருப்பு

| உயிலங்குளம் | பள்ளமடு | இலுப்பைக்கடவை | முழங்காவில் | செயபுரம் | வன்னேரி | அம்பலப்பெருமாள்சந்தி | கந்தபுரம் | முறுகண்டி | கிளிநொச்சி | வட்டக்கச்சி | புளியம்பொக்கணை | விசுவமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 09.00 | 09.30 | 10.00 | 11.00 | 11.30 | 12.00 | 12.30 | 12.45 | 01.55 | 02.45 | 03.45 | 04.05 | 04.30 | 05.15 |

குறிப்பு : கிளிநொச்சியில் 15 மணித்துளிகளும், முறுகண்டியில் 20 மணித்துளிகளும் கந்தபுரத்தில் 15 மணித்துளிகளும் நிற்கும்.

## செயபுரம் - உயிலங்குளம்

| செயபுரம் | முழங்காவில் | இலுப்பைக்கடவை | பள்ளமடு | ஆண்டாங்குளம் | உயிலங்குளம் |
|---|---|---|---|---|---|
| காலை 06.30 | 07.00 | 08.00 | 08.30 | 08.45 | 09.00 |

## உயிலங்குளம் - செயபுரம்

| உயிலங்குளம் | ஆண்டாங்குளம் | பள்ளமடு | இலுப்பைக்கடவை | முழங்காவில் | செயபுரம் |
|---|---|---|---|---|---|
| பகல் 02.30 | 02.45 | 03.00 | 03.30 | 04.30 | 05.00 |


தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப் பணியகம்,
விசுவமடு.

[சி.7369]

# கொடுப்பனவுகளுக்காக காத்திருக்கும் மீளக் குடியமரும் மக்கள்

வன்னிப் பிரதேசத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் தற்போது மக்கள் மீளக்குடியேறி வருகின்றனர். எனினும் அவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட வில்லை. மாறாக இவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்குவதில் அரசாங்கம் கால இழப்புக்களை மேற்கொண்டு வருகிறது.

இக்கால இழப்புக்களினால் மீளக் குடியேறும் மக்களின் மனோநிலை பெரிதும் பாதிப்படைந்துவருகிறது. தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பிய மக்கள் இழப்பீடுகள் கிடைக்காததினால் மர நிழலிலேயே தங்கும் அவலநிலையும் உருவாகின்றது.



இதனால் குடும்ப ரீதியாக வந்து குடியேறும் மக்கள் சொல்லொணாத் துயரடைகின்றனர். இவர்களது துயர் மேலும் தொடர அனுமதிக்கக் கூடாது.

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைளினால் அளப்பெரிய துன்பங்களை அனுபவித்து இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்து வரும் மக்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் கொடுப்பனவானது ஆனைப்பசிக்குப்போட்ட சோளப்பொரியாக இருக்கக் கூடாது. தற்போது வழங்கப்படுகின்ற உதவுதொகைகள் கொடுப்பனவுகள் எந்தவகையிலும் போதுமானதாக இல்லையென்று உணரப்படுகிறது.

மீளக்குடியேறும் மக்களின் இயல்புநிலை ஒரு சீரான நிலைக்குத் திரும்பும் வகையில் வழங்கப்படும் உதவுதொகையாக அமைய வேண்டும். அதை விடுத்து 15 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட தொகையை வழங்குவதால் அவர்களுக்கு எந்தவொரு பயனும் நன்மையும் ஏற்படப்போவதில்லை. இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீளக்குடியேறும் மக்களின் மறுவாழ்வத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். இந்தவகையிலே பார்க்கின்றபோது மீளக்குடியமர்வு குறித்து அதிக பொறுப்பு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உண்டு. இதை இவர்கள் ஒரு போதும்தட்டிக்கழிக்கக் கூடாது. உள் நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தி அவர்களுக்கான சரியான வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் உண்டு. உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களை அதிகம்கொண்ட நாடுகளில் இலங்கை முக்கிய இடத்தைப் பெறுகிறது அதிலும் வடக்குக் கிழக்கில்தான் அதிகமானோர் இடம் பெயர்ந்திருக்கிறார்கள். வடக்குக் கிழக்கில்தான் யுத்தம் முனைப்புப்பெற்ற மாகாணமாக வுள்ளது. அந்த வகையில் பார்க்கும்போது வன்னிப் பிரதேசம் முதலாமிடத்...

இவ்வாறு இடம்பெயர்ந்து ... மீளவும் அவர்களது சொந்... குடியமர்த்தி அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசசார்பற்ற நிறுவனங்களுக்குள்ளது இத்தருணத்தில் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது செயற்றபாடுகளை விழிப்புடன் செய்வது அவசியம். இந்த அமைப்புக்கள் மீளக்குடியமரும் மக்களின் விடயத்தில் மேலும் கவனம் செலுத்தப் படவேண்டும். அதாவது இடம்பெயர்ந்தோரது உரிமைகள் மீறல் சம்பந்தமானவை, தொலைக்கப்பட்டடோ அல்லது விண்ணப்பித்தோ அடையாள அட்டைகள் கிடைக்கப் பெறாதோர் முறைப்பாடுகள், இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்தும் அரச உதவிகள் கிடைக்கப் பெறாதோர், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் முதலானவை இடம்பெயர்வால் இழக்கப் பட்டோர் தொடர்பானவை, இவ்வாறானவற்றுக்கு உடனடி பரிகாரம் செய்து கொடுக்கப் பட வேண்டும்.

பட வேண்டும்.

குறிப்பாக பல்வேறு வகையான இராணுவ நடவடிக்கைளினால் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர். அவர்கள் அவ்வாறு வெளியேற வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை கடந்தகால பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியில் அரச படைகளால் ஏற்படுத்தப்பட்டன. இது தமிழ் மக்களின் பொருளாதாரத்தை அழித்து சின்னாபின்னமாக்கும் திட்டமிட்ட நடவடிக்கைளில் ஒன்றாகும். அவ்வாறு வெளியேறிய மக்களின் வாழ்விடங்கள் இன்று எளிதில் முன்னைய நிலைக்கு மாற்றிக் கொள்ள முடியாத வகையில்ஒரு பெரும் சுடுகாடாகவே காட்சியளிக்கின்றது. வயல் நிலங்கள் தரிசு நிலங்களாக மாறி புதர் மண்டிக் காணப்படுகின்றது. தமது சொந்த இருப்பிடங்கள் இதுதானா என்று சந்தேகத்துடனேயே பார்க்க வேண்டிய நிலையில் இடம்பெயர்ந்தோர் உள்ளனர். யாழ் மாவட்டத்தில் சிலரது வீடுகளில் படையினர் இன்னமும் முற்றுகையிட்டவாறு உள்ளனர். இந்தநிலையில் பல குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களில் குடியமர முடியாது அவதியுறுகின்றனர். இத்தகைய நடவடிக்கைளில் அரச அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் கவனம் செலுத்தி அவர்களது வீடுகளில் அவர்களைக் குடியமர வைக்க வேண்டியது அவர்களது கடமைகளில் ஒன்றானது என்று கருதப்படுகிறது.

மீளக்குடியமரும் மக்களுக்கென வேண்டும் இத்திட்டத்திலிருந்து அவர்களது இயல்புநிலை மீளப்பெறப்பட வேண்டும். இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த மக்கள் '0'புள்ளியிலிருந்து தமது புதிய வாழ்வு நிலையை ஆரம்பிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இதனைக் கருத்திற்கொண்டே அவர்களது மறுவாழ்வுத் திட்டம் அமைய வேண்டும. இடம்பெயர்ந்த மக்களின் பலநூற்றுக்கணக்கான குடும்பங்களில் சிறுவர்களின் கல்வி நிலை பாழடிக்கப் பட்டிருக்கின்றன. பலரது தொழில் வாய்ப்புக்களும் இழக்கப்பட்டிருக்கினறன. கொடும் போரினால் பல மாணவர்கள் இடம்பெயர்ந்து விரக்தியடைந்து கல்வியைச் சீரழித்துவிட்டனர். இது தமிழ் மக்களின் பெட்டகம் இக்கல்விச் சொத்தை இழந்த குடும்பங்களை இனங்கண்டு மீளவும் அவர்களது கல்வி வளர்ச்சிக்காக உதவவேண்டும்.

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்தமக்கள் தமது இருப்பிடங்கள் மட்டுமல்ல தொழில் நிலையங்கள்,சுயதொழில் முயற்சிகள் அனைத்தையும் இழந்துவிட்டனர். இவர்களது வாழ்வு இன்று இருள் சூழ்ந்திருக்கிறது. இவர்கள் பெரும் பொருளாதாரச் சிக்கலுக்குள் மூழ்கியிருக்கின்றனர்.

முல்லைத்தீவு- கிளிநொச்சி மாவட்டங்கள் வளரும்மாவட்டங்கள். இம்மாவட்டங்களின் வளர்ச்சி காலத்துக்குக் காலம் ஏற்பட்ட போரினால் நலிவடைந்தது. கொக்காவில், ...சி, மாங்குளம் ஆனையிறவு, ...ன், முல்லைத்தீவு போன்ற இடங் ... இராணுவ முகாம்கள் இருந்த காலப்பகுதியில் அங்கு தாக்குதல்கள் நடந்தபோது அப் பகுதிகள் அழிந்து போயிருப்பது இன்றும் சாட்சியங்களாக இருக்கின்றன. அன்று மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்குக்கூட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை. அவை இன்றும் அடையாளச் சின்னங்களாகவே இருக்கின்றன.

இத்தகைய பேரழிவின் மத்தியில் தான் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறி வருகின்றனர். இவ்வாறு குடியேறும் மக்களுக்கு அரசினால் வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் எந்த வகையிலும் போதுமானதல்ல. இது மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்.

எனவே மீளக்குடியேறும் மக்களின் வாழ்வு நிலை ஒரு உறுதியான இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு அரச அதிகாரிகளின் முயற்சிகளுடன், இங்குள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் முயற்சியும் அவசியமாகக் கருதப்படுகின்றது எனலாம். ✡

-எம்.கே.யோகரட்ணம்-

# ஊர்கோலம்

## சமாதானம் குறித்த சில 'அதிர்வு'

எந்த பேப்பரைப் பார்த்தாலும், எந்தச் செய்தியைக் கேட்டாலும் சமாதானத்திற்கான ஆதரவு... சமாதானத்திற்கான பிரார்த்தனை... சமாதானத்தை வேண்டி ஊர்வலம்... சமாதானத்திற்கான பாதயாத்திரை... என ஒரே சமாதானத்திற்குச் சாதகமான செயற்பாடுகளை வெளிப்படுத்துவதாகவே உள்ளன.

நல்லது. மக்களின் சமாதான வேட்கை, தேடல், மற்றும் சமாதான எதிர்பார்ப்பு முன்னெப்போதைய விடவும் பல மடங்கு அதிகரித்ததாகவே உள்ளது.

மகிழ் ரீச்சர் வகுப்பு மாணவர்களிடம் சமாதானம் பற்றி அவர்கள் மனதில் படும் சில வரிகளை எழுதுமாறு கேட்டதற்கு அந்த க.பொ.த சாதாரணம் படிக்கும் பிள்ளைகள் எழுதிய சிலவற்றை என்னிடம் சொன்னார்.

'சமமாக ஆதனத்தை பகிர்ந்தால் அதுவே சமாதானத்தின் முதல் படி'
'சண்டை பிடியுங்கள் அப்போ தான் சமாதானத்தின் அருமை தெரியும்'
'தானங்களில் சிறந்தது சமாதானம்'
'சமாதானம் மனிதனை சோம்பேறியாக்கி விடுகிறது.
சண்டையோ மனிதனை கோமாளியாக்கி விடுகிறது...'
'சமாதானத்தை சட்டபூர்வமாக்க நினைப்பது தான் மனிதனின் மிகப்பெரிய பலவீனம்'

எப்படியிருக்கிறது...? மாணவர்களின் எண்ண ஓட்டம்... எழுதியவர்கள் எல்லோருமே அந்த வரிகள் தமது சொந்த வரிகள் தான் என்று உறுதி கூறினார்களாம் எனக்கு வியப்பாக இருந்தது.

மகிழ் ரீச்சர் ஒரு மாணவி கவிதைபோன்று எழுதிய சில வரிகளையும் கூறினார்-

சமாதானம் பற்றி
பேசிக் கொண்டிருக்கும்போதே
சர்ச்சை சண்டையாகியது
அதற்கு
சமாதானத்திற்கான சண்டையென
சித்தாந்த விளக்கமும் கூறப்பட்டது.
பின்னர் காலம் செல்ல...
சாம்பல் மேடொன்றின் மேல்
அடுத்த சண்டைக்கான-
சமாதானம் பற்றிய பேச்சுக்கள் ஆரம்பமாயின...

இது எப்படி இருக்கிறது...
-எங்கள் பிள்ளைகள் நன்றாக சிந்திக்கிறார்கள்தான்
-கடைசியாக மகிழ் ரீச்சர் சொன்ன விடயம்;

"ஒரு மாணவன் கொப்பியில் எதனையும் எழுதியிருக்கவில்லை... ஏன் நீ எதுவும் எழுதவில்லை என்று கேட்டேன். அதற்கு அவன் சொன்ன பதில் என்னைத் திடுக்கிட வைத்தது. அவன் சொன்னது இதுதான்...

"உலகெங்கும் சமாதானம் பற்றிய ஒப்பந்தங்கள் மையால் எழுதப்படவில்லை... இரத்தத்தாலேயே எழுதப்படுகின்றது... இரத்தவரிகளை என்னால் எழுதமுடியாது..."

நான் திடுக்கிட்டுப் போனேன்...

மகிழ் ரீச்சர் சொன்னார்... "இதைச் சொன்ன அந்த மாணவனுக்கு ஒரு கை எறிகணைவீச்சில் இல்லாமல் போய்விட்டது..."

அதற்கு மேல் மகிழ் ரீச்சர் கூறியவை எனக்கு சரியாக மனதில் பதியவில்லை...

மகிழ் ரீச்சர் யாழ்ப்பாணத்தில் ஒரு பெரிய பாடசாலையில் கடமை புரிகிறார்...அவ்வளவுதான். ❑❑

## ஒரு கவிஞனின் வருகை

அந்த கவிஞரை பல வருடங்களின் பின் சந்திக்க நேர்ந்தது. ஆள் தோற்றத்தில் பூரித்துப் பெருத்திருந்தார். இரு தசாப்தகால இடைவெளியில் அவரது இயல்பில் வெளிநாட்டு வாழ்க்கை எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

இன்னமும் முன்னர் போன்றே மனிதம் பற்றியும் சமுதாயம் பற்றியும், உலகம் பற்றியும் பேசினார்...

ஒரு காலத்தில் போராட்டம்... புரட்சி... சமதர்மம் என சிவப்புச் சித்தாந்தம் பேசி எழுதியவர். இப்போது அந்தக் கட்டத்தைக் கடந்து தனது நாடோடி வாழ்க்கை பற்றிக் கூறினார்.

அவரது 'அப்பா'வைப் பற்றிக் கேட்டேன்.

'அவர் ஒரு நிறைவான வாழ்வை வாழ்ந்து விட்டவர்... அப்பிடியே இருக்கிறார்' என்றார். இப்படிக் கூறும் தனக்கு அந்த மாதிரியான நிறைவான வாழ்க்கை எப்போது கிடைக்கும் என்ற ஆதங்கம் அவர் குரலில் மிதக்கவே செய்தது.

அவர் தன் தலைமுடியை வளர்த்து ஒரு குட்டிக் குதிரைவால் போல் கட்டியிருந்தார்.

'என்ன இது கோலம்' என்றேன்.

எங்கட தாத்தா காலத்து நாகரீகத்தை மேல் நாட்டுக்காரனிடமிருந்து இப்போது ...ன் வாங்கியுள்ளேன் என்றார் சிரிப்புடன்...

சரி எப்படியோ ஒரு கலாசாரப் புரட்சியொன்றை செய்து விட்டாய் என்று சொல்ல நினைத்தேன்..,

ஆனால் சொல்லவில்லை.

"நெடுந்தீவு ஆச்சிக்கு" என அருமையான கவிதைமூலம் தன் இயல்பான உள் ஆன்மாவை வெளிப்படுத்திய அந்த கவிஞனின் பலவீனங்களை கொச்சைப்படுத்த கடந்த காலத்தை நினைவுபடுத்த மனம் விரும்பவேயில்லை..

அந்த மனிதனை விடவும் அவனுள் உறைந்திருந்து
மண்ணின் இயல்புடன் கூடிய வார்த்தைகளை
மனிதம் கலந்து கூறும் கவிஞனை என்னால்
அடையாளம் காணக்கூடியதாக இருந்தது... ❑❑

## சந்தேகம் தெளிதல்?!

புதுக்குடியிருப்பு சந்தையில் இருவர் பேசிக்கொண்டது

"என்னப்பா அநியாயம் இது வாழைப்பழம் முந்தி உருளைக்கிழங்கு வித்த விலைக்கு ஏறீட்டுது. உருளைக்கிழங்கோ வாழைப்பழம் வித்த விலைக்கு இறங்கீட்டுது...!?"

"அது தான் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் அப்படித்தான் விற்கும்..."

"ஓமோம் கொழும்பு பேமன்றிலை கொம்பியூட்டரே போட்டு குவித்து வைத்து பாலைப்பழ வியாபாரி மாதிரி கூவி விற்கிறார்களே... எல்லாம் காலம்..."

"காலமுமில்லை கத்தரிக்காயுமில்லை இதுதான் உலகமயமாதல் எண்டு சொல்லுறது..."

'.......!!!' - மற்றவர் மௌனத்துடன் தலையை விறாண்டத் தொடங்குகிறார். ❑❑

பாதசாரி

அறிவுக்கு தோற்றுவாய் அச்சம் என்பது அனுபவம் உணர்த்தும் படிப்பினை. - மிகேல் தெ உனாமுனோ



# நேர்நோக்கு

## பயனற்ற எதிர்ப்பு

அரசாங்கம் முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளை எதிர்ப்பது என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி முடிவெடுத்திருக்கிறது. அதற்கு விளக்கம் கொடுக்கும்வகையில், உண்மையாக அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு தாம் எதிர்ப்பில்லை என்றும் ஆனால் பதவியில் நிடித்திருக்கும் நோக்கத்துடன் ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் சமாதான முயற்சி என்ற பெயரில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையே தாம் எதிர்ப்பதாகவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தனது ஆட்சியின் ஆரம்பகாலத்தில் 1994ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதே தனது நோக்கம் எனவும், சமாதானத்தை ஏற்படுத்தி யுத்தத்திற்குச் செலவிடப்படும் பெரும்தொகை நிதியை அபிவிருத்திக்குச் செலவிடுவதன் மூலம், நாட்டின் வறுமை நிலையைப் போக்கப்போவதாகவும் கூறிவந்தார். அதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் புலிகள் தயாராக இருந்தநிலையில் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பித்தார்.

இதன்மூலம் பொதுத்தேர்தலில் பொதுசன ஐக்கியமுன்னணி பெற்ற வாக்குவீதத்திலும் அதிகளவு வாக்குவீதத்தை – 62 வீதத்துக்கும்மேலாக – சனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க பெற்றார். அதாவது: அப்பொழுதும் சிறிலங்கா மக்கள் சமாதானத்தை ஆதரிப்பவர்களாகவே இருந்தனர். அதனால் அவர், வன்முறையின் கொடுமை தனக்குத் தெரியுமென்றும் வன்முறையால் தான் தந்தையையும் கணவனையும் இழந்ததாகவும் எனவே, சமாதான வழியில் தீர்வு காண்பதில்தான் உறுதியுடன் இருப்பதாகவும் கூறிவந்தார். அதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்கப்பட்டபோது: மீண்டும் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவேன் என்றும் கூறிவந்தார்.

ஆனால் அது எத்தனைதூரம் போலியானது என்பதும் அவர் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றவே அவ்வாறு வாக்குறுதியை வழங்கினார் என்பதும் ஒருசில மாதங்களில் தெளிவாகியது.

பின்னர்தொடர்ந்த கொடூர யுத்தம் தமிழ்மக்களை ஏதிலிகளாக அலைத்ததாயின் சிங்கள மக்களையும் அது விட்டுவைக்கவில்லை. பொருளாதார ரீதியாக அவர்கள் சந்தித்த நெருக்கடிகள் ஒருபுறம்பாதுகாப்பு எனக்கூறிக்கொண்டுகாவலரண்களால் சூழப்பட்ட – காவலரண்களால் நிரம்பிய கொழும்பிலும்மேலும்பல இடங்களிலும் மக்கள் பட்ட துன்பங்கள் எண்ணிலடங்காதவை.

சந்திரிகா வசித்துவந்தஅலரிமாளிகையின் பாதுகாப்புக்கு எனச்செய்யப்பட்ட ஏற்பாடுகள் வீதிப் போக்குவரத்துக்கு பெரிதும் இடையூறாக இருந்தன. அதுமட்டுமல்லாது அப்பகுதி குடியிருப்பாளர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டமையால் அவர்கள் விரக்தி நிலையில் இருந்தனர். இதற்கு எதிராகப் போராட்டம் நடத்தும் நிலைக்குக் கூட அவர்கள் தள்ளப்பட்டனர். இதனைவிட அமைச்சர்கள் முக்கியஸ்தர்கள் என பெருமளவானோருக்குச் செய்யப்பட்டபாதுகாப்புகள் மக்களுக்கும் பெரும் இடைஞ்சல் விளைவிப்பனவாகவே இருந்தன.

ஒட்டுமொத்தத்தில் சிங்கள மக்கள் உட்பட அனைத்து மக்களும் பெரும் இழப்புக்களையும் இடையூறுகளையும் சந்திக்கவேண்டியே இருந்தது.

ஆனால் இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாத சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பொதுசன ஐக்கிய முன்னணியினரும் நாட்டையே அடகுவைத்து யுத்த தளபாடங்களைக் கொள்வனவு செய்துயுத்தத்தை தீவிரப்படுத்துவதிலேயே கவனம் செலுத்தினர்.

உலக நாடுகளும் உதவிவழங்கும்நாடுகளும் யுத்தத்தைக் கைவிட்டு இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாணுமாறு வற்புறுத்தியும் அது அவர்களது காதுகளில் ஏறவில்லை. மக்கள் இந்த யுத்தத்தில் நம்பிக்கையிழந்துவிட்டனர் என்பதை நன்கு விளங்கிக் கொண்டும் கூட அதனைக்கைவிட சந்திரிகாவின் "கௌரவம்" இடம்கொடுக்கவில்லை.

அதாவது அவர் நாட்டின் நன்மைகருதியோ அல்லது மக்கள் நலன்கருதியோ மட்டுமல்லாது தனது அரசியல் நலனுக்கு எதிரானது என்பதைத்தெரிந்து கொண்டும் யுத்தத்திலிருந்து விடுபட்டு சமாதான முயற்சிகளில் ஈடுபடஅவர் முயலவில்லை. ஆனால் அவ்வாறான முயற்சியில் ஈடுபடுவதாகக் காட்டி உலகநாடுகளை ஏமாற்றும் நடவடிக்கைகளிலேயே அவர் ஈடுபட்டார்.

ஆனால் இன்றைய சமாதான முயற்சிகள் அவ்வாறனதாக இல்லை. அதுப்படிப்படியாக சிறந்தமுறையில் அடித்தளமிடப்பட்டுக்கொண்டு முன்னேறிச்சென்று கொண்டிருக்கிறது. எவரும் எதிர்பாராத விதமாக அது சுமுகமான நிலையில் நடைபெற்றுக்கொண்டு செல்வதன்னை இராஜதந்திரிகள்,விமர்சகர்கள் , ஊடகவியலாளர்கள் உட்பட பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அனைவரும் –அனைத்து நாடுகளும் இந்தச் சமாதான முயற்சிகளுக்கு வாழ்த்துக்களைத் தெவித்துக்கொண்டிருக்க, மக்கள் சமாதான முயற்சிகள் வெற்றிபெற பிரார்த்தித்துக் கொண்டிருக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டின் தலைமைப் பதவியிலிருந்து கொண்டு அதனை எதிர்ப்பதாக அறிவிப்பதுதொடர்ந்தும் அவர் தவறான பாதையில் செல்லும் முடிவிலேயே இருக்கிறார் என்பதையே வெளிப்படுத்துகிறது. அதாவது கடந்த காலத்தில் அவர் தன்னை ஆட்சியில் நிலைநிறுத்தப்போட்டுக்கொண்ட சமாதானச் சாயத்தை அறவே கழுவிவிடவே உதவக் கூடியதாகும். அத்துடன் இந்த எதிர்ப்பு மக்களின் சமாதான விருப்புக்கு முன்னால் பயனற்ற ஒன்றாகவே இருக்கும்.

-வேலவன்

- பேசாலைக் கடற்பரப்பில் -

## அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் தடுப்பு

(அலுவலக நிருபர்)

பேசாலைக் கடற்பரப்பு எல்லைக்குள் அத்துமீறி மீன் பிடித்த இந்திய மீன்பிடி றோளர் படகுகளையும் 103 மீனவர்களையும் பேசாலை மீனவர் சங்கத்தினர் பிடித்து தங்கள் பாதுகாப்பில் வைத்துள்ளனர். சிறிலங்காப் பொலிசார் தாங்கள் பாதுகாப்பு வழங்குவதாகக் கூறி இந்திய மீனவர்களை தங்களிடம் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டதற்கு மீன்பிடிச்சங்கத்தினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருகையில், நேற்றுக் காலை 26 மீன்பிடி றோளர்களில் 103 மீனவர்களுடன் பேசாலை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடிப்பதில் ஈடுபட்டிருந்ததாகவும் இதனையறிந்த பேசாலை மீனவர் சங்கத்தினர் உடன் அப்பகுதிக்கு விரைந்து மீன்பிடி றோளர்களையும் கைப்பற்றி மீன்பிடிப்பதில் ஈடுபட்டிருந்த 103 மீனவர்களையும் விசாரணைக்கு அழைத்து வந்து மீனவர் சங்கத்தில் தடுத்து வைத்துள்ளனர். இதனை யடுத்து தகவலறிந்த சிறிலங்காப் பொலிசார் மீனவர் சங்கத்திற்கு சென்று மீனவர்களையும் மீன்பிடி றோளர்களையும் தங்களிடம் ஒப்படைக்கும் படி வேண்டியுள்ளனர்.

இதற்கு மீனவர் சங்கத்தினர் எக்காரணம் கொண்டும் பேசாலை பிரதேசத்தில் மீன்பிடிக்க எத்தனிக்க மாட்டோம் என்று கூறுமிடத்து மீனவர்களை ஒப்படைப்பதாக கூறியுள்ளனர்.

அதற்கு தங்களால் உத்தரவாதமளிக்க முடியாதென சிறிலங்காப் பொலிசார் கூறியதையடுத்து மீனவரைப் பொலிசாரிடம் ஒப்படைக்க மீனவர் சங்கத்தினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

பிந்திக்கிடைத்த செய்திகளின் பிரகாரம் முக்கிய அமைச்சக அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பேசாலை சென்றுள்ளதாகத் தெரியக்கிடைத்துள்ளது.

(சோ)

### முதற் கட்ட....

இதன் அடுத்தகட்ட பேச்சுவார்த்தைகளில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்களும் திருப்பங்களும் தங்களது அரசியல் எதிர்காலத்தை முற்றாக கேள்விக்குறியாக்கிவிடுமென அஞ்சுகிறார்கள் எனவும் இதன் காரணமாக சனாதிபதி தனது நிறைவேற்று அதிகார பலத்தை பிரயோகித்து ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியுடன் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சந்திரிகாவை இவர்கள் நெருக்கி வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இதேசமயம் ரணிலின் செயற்பாடுகள் சிங்கள மக்களிற்கும்பௌத்த சிறிலங்காவின் ஒருமைப்பாட்டிற்கும் இறைமைக்கும் அச்சுறுத்தலாக உள்ளதென அதீத சிங்கள பௌத்த சிந்தனையாளர்கள் கடும் பிரச்சாரங்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலைமையில் ரணில் தனது பாதுகாப்பு குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டுமெனவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

**கண்ணீர் அஞ்சலி**

**திருமதி வேலுப்பிள்ளை புஸ்பராணி**

இலங்கைவங்கி கிளிநொச்சிக் கிளையில்
கடமையாற்றும்
திரு.இ.குணசிங்கம் அவர்களின்
அன்புச் சகோதரி
திருமதி வேலுப்பிள்ளை புஸ்பராணி
அவர்களின் இழப்பினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு
ஆறுதல் தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்

முகாமையாளர்,பணியாளர்கள்
இலங்கை வங்கி,
கிளிநொச்சி.

[சி.7378]

வல்லிபுர நாயகன் தேரேறி வரும் இந்நாளில்
எல்லோர் மனங்களும் இன்பம் அடைக!

**நியூ நகுலா ஜுவல்லறி** — 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி** — 171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நகுலா நகை மாடம்** — 241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



[சி–6778]

யாழ் நகரில் மின்னிடும் தங்க நகைகள் விற்பனையில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.